

அந்தி நேரத் தென்றல் சுகமாய்த் தாலாட்ட, வானம் வரைந்த கோலங்களாய் மேகங்கள், இரவிற்கு வரவேற்புரை வாசித்துக் கொண்டிருந்த பொன்மாலை நேரம்!

பள்ளிக்கூடம் விட்டு ஆரவாரத்துடன் வீட்டிற்குச் செல்லும் குழந்தைகளாய், பரவசத்துடன் கூவியபடி கூட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன, பறவைகள்!

அந்தக் கல்லூரி வளாகம், கொத்து மலர்களாய் அங்கங்கு அமர்ந்திருந்த பெண்களுடன் உற்சாகமாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தது.

இன்று கல்லூரி அத்தியாயத்தின் கடைசிப்பக்கம் புரட்டப்படும் நாளென்பதால், பிரிவின் துயரங்களும், ஆட்டோகிராஃப்களும், சிதறி விழுகின்ற கண்ணீர்த் துளிகளுமாய், அந்த இடமே ஒரு வித இறுக்கத்துடன் தெரிந்தது.

மரங்களனைத்தும், மெதுவாகத் தலையசைத்தபடி அந்த சோகக் காட்சிகளைக் கண்டு, 'உஸ்'ஸென்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தன.

எல்லாவற்றையும் கவனித்தபடி கல்லூரிப் பேருந்தில் அமர்ந்திருந்த 'நிலாவதனி', எம்.பி.ஏ. முடித்துவிட்டு, இந்தப் பொறியியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறாள்.

எப்படி இருக்கப் போகிறதோ என்று முதலில் பயத்தை விளைவித்த கற்பிக்கும் பணி, இப்போது மனதிற்கு மிகவும் பிடித்த ஒன்றாகவும் திருப்தியைத் தருவதாகவும் ஆகியிருந்தது.

நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டு, அவற்றை மாணவர்களின் மனதில் பதியும்படியும், அதே சமயத்தில் அவர்கள் அலுப்படையாத வகையிலும் திட்டமிட்டு வகுப்புகள் நடத்தியதால், மனதில் திருப்தியும் உற்சாகமும் கைவசப்பட்டிருந்தன.

அங்கங்கு மரத்தடியில் அமர்ந்து பிரியாவிடை பெற்றுக் கொண்டிருந்த மாணவிகளைப் பார்த்த



# வண்ணம் கொண்ட

போது, நிலாவிற்குத் தன்னுடைய கல்லூரி நாட்களின் பதிவுகள், உடனே மனதில் நீங்காத தடம் பதித்தன.

நெஞ்சிற்குள், நூலாம்படையாய் பழைய நினைவுகள்!

சுற்றிலும் பசுமையான மரங்களால் சூழப் பட்டு, சரக்கொன்றையும், குல்மொஹரும் உதிர்ந்து வண்ணப் பாய் விரித்து வரவேற்கும் தங்கள் கல்லூரியும், அந்த நந்தவன நாட்களும் ஞாபகம் வர, உடனே உயிர்த்தோழி சங்கீதாவும் கண் முன் வந்தாள்.

'பி.பி.ஏ' முடித்த இறுதி நாளன்று, இருவரும் பிரிவுத் துயரை எண்ணி, கண்ணீர் மலர்களைச் சுமந்தபடி மௌனமாக வீட்டிற்குச் சென்றது, நேற்று நடந்தாற் போல்!

காலம்தான் எவ்வளவு வேகமாகச் செல்கிற தென்று தோன்ற, கூடவே சங்கீதாவின் நினைவு களால் மனதில் வேதனையும், சோகமும் மெல்ல உதயமாகின.

பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்தபோது, "நிலா! ஹாஸ்டல் ஸ்டாப்பிங் வந்துடுச்சி... இறங்கலையா?" உடன் பணிபுரியும் மனோ வின் குரலால், மெல்லிய மேகம் போல் கனவுகள் கலைய எழுந்தவள், அனைவரிடமும் விடை பெற்றாள்.

அவள் தங்கியிருந்த 'வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டலு'க்குள் நுழையும் போதே, அங்கு பணிபுரியும் ஆயா ஓடி வந்தார்.

"நிலாம்மா! உங்கம்மா கிட்டயிருந்து ரெண்டு தடவை போன் வந்தது... நீங்க வந்த தும் பேசச் சொல்றேன்னு சொன்னேன்!" என்றார்.

"தேங்க்ஸ் கண்ணம்மா! நான் போய் பேசிட்டு வந்துடறேன்" என்றபடி வெளியில் சென்று, ஊருக்கு எஸ்.டி.டி. போட்டுப் பேசிய போது, செண்பகம் மிகவும் பதட்டமாகத் தெரிந்தார்.

"நிலா! உனக்கு இன்னியோடக் காலேஜ் முடியுதில்லே... நீ உடனே கிளம்பி வா! என்னால நிம்மதியாவும் இருக்க முடியலை... என்ன செய்யறதுன்னும் புரியலை! உன் தங்கச்சி பண்ணின காரியத்துக்கு, நாம எல்லாரும் மானத்தோட நடமாட முடியாது... தூக்குப் போட்டுட்டு தான் சாகணும் போலருக்கு!"

"என்னம்மா சொல்றீங்க? ஏன்... குறிஞ்சிக்கு என்னாச்சு?" பதறிப் போய்க் கேட்டாள் நிலா.

"அவளுக்கென்ன... கல்லாட்டம் நல்லாத் தான் இருக்கா! எங்க தலையிலதான் கல்லைத் தூக்கிப் போட்டுட்டா... மத்ததெல்லாம் ஃபோனிலே சொல்ல முடியாது... நீ நேரில வா!"

அழுது கொண்டே அவர் போனை வைத்த போது, அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

பெரும் யோசனையுடன் ஹாஸ்டலுக்கு வந்த போது, அங்கு எல்லோரும் உற்சாகத்தி லிருந்தனர்.

அவளைக் கண்டதும், "நிலா! இந்த வீக் எண்ட் நாம எல்லாருமா சேர்ந்து டூர் போகலாம்னு ப்ளான் பண்ணியிருக்கோம்." மகிழ்ச்சி பொங்கக் கூறினாள், அவளுடைய ரூம்மேட் லதா.

"சாரி லதா! அம்மா ஃபோன் பண்ணி னாங்க... நான் உடனே ஊருக்குக் கிளம்பணும்" நிலா மெல்லிய குரலில் கூறினாள்.

"ஓ... எல்லாரும் போறப்போ நீயும் வந்தா ஜாலியா இருக்குமேன்னு நினைச்சேன்! என்ன ப்ராப்ளம் நிலா?"

"தெரியலை... குறிஞ்சியால வீட்டில ஏதோ பிரச்சினை போலருக்கு... நான் கிளம்பறேன் லதா!" என்றவள், உடனே துணிகளை அடுக்கிக் கொண்டு கிளம்பினாள்.

திண்டுக்கல் செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்தபோது, மனதை மண்புழுவாய் குடைந்தன, பழைய ஞாபகங்கள்!

ஒரு பெருமூச்சுடன் கண்மூடி சாய்ந்தபோது, இளமைப் பருவம் நிழற்படமாய் கண்முன் விரிந்தது. மனம் கடந்த காலத்திற்குள் நுழைந்தது.

* * * * *

நிலா, தன் சிறுவயதில் "அம்மா... அம்மா" என்று செண்பகத்திடம் ஒட்டிக் கொள்ளும் போதெல்லாம், அவளிடம் சிறு விலகல் தெரிவது போலிருக்கும். அவளுடைய ஐந்தாவது வயதில் குறிஞ்சி பிறந்த போது, தனக்கு ஒரு துணை கிடைத்து விட்டதென்று அவள் பெரிதும் மகிழ்ந்தாலும், தன் தாயின் அன்பும் அரவணைப்பும் குறிஞ்சிக்கு மட்டுமே கிடைப்பது போல் தோன்ற, நிலா அழும் போதெல்லாம், அவளுடைய தந்தை வாகீஸ் வரன் தான் அதைப் புரிந்து கொண்டு, அவளைப் பரிவுடன் பார்த்துக் கொள்வார்.

குறிஞ்சி வளர வளர, அவள் செண்பகத்தின் செல்லமாகி விட, நிலா வாகீஸ்வரனிடம் ஒட்டிக் கொண்டாள்.

அவள் ஆசைப்பட்டாளென்று தோழி சங்கீதாவுடன் பரதம் பயில அனுப்பிய

போதும்... படிப்பு விஷயத்திலும்... உடை விஷயத்தில் அவளுக்குப் பிடித்தவற்றையே வாங்கித் தருவதிலும்... எல்லாவற்றிலுமே வாகீஸ்வரனிடம் ஆழமாய் ஒரு பாசம் இழையோடும்.

வார்த்தைகளில் வெளிவராத ஒருவித நேசம் அது! செயல்களால் மட்டுமே அவளை அசைத்துப் பார்க்கும்... பரவசப்படுத்தும்! அதுவும் செண்பகத்திற்கு பயந்துதான் என்பதை, நிலா புரிந்து கொள்ளும் நாளும் வந்தது.

சில இடங்களில் வாகீஸ்வரனைப் போல் சிலர், சூழ்நிலைக் கைதிகளாய்! நம் நிழல் கூடவே வந்தாலும், எதுவும் பேசாமல் தொடர்வது போலத்தான், அவரின் பாசமும் என்பதை அவள் தன்னுடைய பன்னிரெண்டாவது வயதில் பூப்பெய்தியபோது தெரிந்து கொண்டாள்.

சடங்கு செய்வதற்கென்று, ஊரிலிருந்து பல புதிய உறவினர்கள் வந்திருந்தபோது தான், அவர்களனைவரும் தன் தாயின் சொந்தமென்பதும், தான் பிறந்த ஆறாவது மாதமே தன்னைப் பெற்ற தாய் இறந்துவிட்டதும், செண்பகம் தன் சித்தியென்பதும் தெரியவந்து, அவளுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

அன்று புரிந்தது... சிறு விஷயங்களுக்கெல்லாம் தன்னைக் கண்டிக்கும் செண்பகம், பல நேரங்களில் குறிஞ்சிக்கு சுதந்திரம் கொடுத்து வளர்த்ததின் ரகசியம்!

மறுநாள், அப்பா பரணிலிருந்து எடுத்துக் கொடுத்த அம்மாவின் புகைப்படம் செல்லரிக்கத் துவங்கியிருக்க, சிறு நடுக்கத்துடன் மென்மையாய் தடவிய அவளுடைய பிஞ்சு விரல்களில், ஒரு சிலிர்ப்புடன் தட்டுப்பட்டது தாயின் ஸ்பரிசம்!

தான் எழுந்து நடக்குமுன்பே அவசரமாகத் தன் வாழ்க்கையிலிருந்து தொலைந்து போனவளை, புகைப்படமாய் இறுக அணைத்துப் படுத்திருந்த போது, அவளுடைய தனிமையையும், ஏக்கங்களையும், அந்த ஒரு தொடுகை தகர்த்தெறிந்தது!

பிறகு, பலவேறுபாடுகள் நிதர்சனமாகத் தெரிய ஆரம்பிக்க, தனக்குள்ளேயே சுருங்கிக் கொண்டது, நிலாவின் மனது! குறிஞ்சியும், அவளை எப்போதும் குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பதால், வீட்டில் அனாவசியமாக அவள் யாரிடமும் பேசுவதில்லை.

தன் கவனம் முழுவதையும் படிப்பிலேயே செலுத்தியவள், பத்தாம் வகுப்பில் பள்ளியில் முதல் மாணவியாகத் தேறினாள். அந்த வயதிற்கேயுரிய ஒரு வித ஒதுக்கம் தந்தையிடமும் வந்துவிட, அவளுக்குப் பகிர்தல் என்பதே, தன் தோழி சங்கீதாவிடம் தானென்று ஆகிப் போனது.

சங்கீதாவின் வீட்டிற்குச் செல்லும் போதெல்லாம், அங்கு பாசத்துடன் அரவணைக்கும் அவளுடைய தாய் நீலாம்பரியை, நிலாவிற்கு மிகவும் பிடிக்கும்... ஒரு தாயின் அன்பை அவரிடம் உணர முடியும்! அந்த வீடே அன்பினால் கட்டப்பட்டது போல் தோன்றும்.

பழைய நினைவுகள் பரிசலாய்க் கரையேற, நான்கு வருடங்களுக்கு முன்பு 'ஸ்ட்ரோக்' வந்ததால், கட்டாய ஓய்வு எடுத்துக் கொண்டு வீட்டிலிருக்கும் தன் தந்தையை நினைத்த போது, நிலாவின் மனம் கனத்துப் போனது.

'தான்' என்ற பிடிவாதத்துடன் வளர்ந்திருக்கும் குறிஞ்சியும், இன்றும் ஊர் வம்பை விரும்பி எந்த நேரமும் தெருப்பெண்களிடம் வெட்டி அரட்டையில் பொழுதைப் போக்கும் செண்பகமும், இதழோரம் விரக்திப் புன்னகையை வரவழைத்தனர்.

நினைவுச்சுழல்களின் தாக்கம், உறக்கத்தை வரவழைக்க, மெல்லக் கண்மூடி நித்திரையைத் தழுவினாள், நிலா.

## 2

**கா**லையில், வீட்டுவாசலில் சென்று ஆட்டோ நின்ற போது, வீடே ஒருவித அமானுஷ்ய அமைதியில் இருந்தது. அழைப்பு மணியை அடித்ததும் கதவைத் திறந்த செண்பகம் அவளைக் கட்டிக் கொண்டு "நிலா!" என்று கதற ஆரம்பித்தாள்.

"அம்மா... பொறுமையா இருங்க! வாசல் கதவை முதல்லே மூடுங்க... இப்ப இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ற அளவுக்கு குறிஞ்சிக்கு என்னாச்சு?" அழுத்தமான குரலில் கேட்டாள் நிலா.

"இன்னும் என்ன ஆகணும்? இப்படி ஒரு உருப்படாத பொண்ணையும், ஓடியாடி உதவி செய்ய முடியாத ஒரு தகப்பனையும், என்னைப் பாத்துக்க சொல்லிட்டு நீ பட்டணத்துல சுகமா இருக்கே!" அழுகையுடன் புலம்பியவரிடம் "குறிஞ்சி எங்கே?" கூர்மையுடன் கேட்டாள் அவள்.

"அவளோட ரூமில இருக்கா... போய்ப் பாரு!" கண்களைத் துடைத்தபடி விரக்தியுடன் கூறிவிட்டு அவர் செல்ல, பக்கத்து அறையிலிருந்து, "நிலா... வந்துட்டியா?" என்றபடி,

வாக்கிங் ஸ்டிக்குடன் மெதுவாக வெளியே வந்தார் வாகீஸ்வரன்.

"அப்பா... எப்படி இருக்கீங்க?" ஆர்வத்துடன் கேட்டபடி அருகில் வந்து கைகளை பிடித்தவளை, அன்புடன் அணைத்துக் கொண்டவர், "நல்லாருக்கேன்டா! ரெண்டு பொண்ணுங்க வாழ்க்கையையுமே நல்ல முறையில அமைச்சிக் குடுக்க முடியாத பாவியாயிடுவேனோன்னு, இப்பல்லாம் மனசுல ஒரு விதப் புழுக்கம் அதிகமா இருக்கு... நம்ம குடும்பத்துக்கு மட்டும் ஏன்டா இப்படி?" உடைந்து போய் அழ ஆரம்பித்தார்.

"வருத்தப்படாதீங்கப்பா! எல்லாம் சரியாயிடும்... என்னைப் பத்திக் கவலைப் படறதை விட்டுடுங்க! இப்ப குறிஞ்சிக்கு என்ன பிரச்சினை? நான் அவகிட்டப் பேசறேன். நீங்க ரெஸ்ட் எடுங்க" அவரை அழைத்துச் சென்று சாய்வு நாற்காலியில் அமர வைத்தவள், குறிஞ்சியின் அறைக்குள் சென்றாள்.

நிலா, இங்கு இருந்தபோது இருவருமாய் சேர்ந்து இருந்த அறை அது! பாசத்தைப் பகிர்ந்து கொள்ள மறுத்தாலும், அறையை மட்டுமாவது தன்னுடன் பகிர்ந்து கொண்டாளே என்ற பெருமூச்சுடன் உள்ளே நுழைந்தபோது, ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள், குறிஞ்சி.

"உஷ்... குறிஞ்சி... அழக்கூடாது! என்ன ப்ராப்ளமா இருந்தாலும் தைரியமா முடிவெடுக்கணும். இப்போ உன் பிரச்சினை என்னன்னு சொல்லு. என்னாலத் தீர்த்து வைக்க முடியுமான்னு பாக்கறேன்'' மென்குரலில், அவளை ஆறுதல் படுத்தினாள்.

விசித்தபடி மெதுவாக நிமிர்ந்தவள், "நான்... ஒருத்தரை விரும்பறேன்க்கா" என்றாள் கம்மிய குரலில்.

ஒரு நிமிடம் பதட்டமாக உணர்ந்தாலும், "ஓ! அதுக்குத்தான், அம்மா இவ்வளவு பயந்து போய் ஃபோன் பண்ணினாங்களா? அவர் என்ன பண்றாரு... சொல்லு! நான் போய் அவர்கிட்டப் பேசறேன்'' யோசனையுடன் கூறினாள்.

"அப்புறம்... அக்கா... நான் இப்ப ரெண்டு மாசம் கர்ப்பமா..." மனம் அவள் சொற்களில் பூகம்ப அதிர்வாய் ஆடிப் போய்விட, "என்ன சொன்னே...?" நிலா அதிர்ந்து போய்க் கேட்டபோது, குற்றவுணர்ச்சியுடன் மடியில் விழுந்து அழுதாள் குறிஞ்சி.

அவள் கூறியதன் பொருள், உயிர்வரை தாக்கி பலமிழக்கச் செய்ய, அடிவயிற்றைப் பிசைய ஆரம்பித்தது. வேறு எந்தக் கஷ்டமாக இருந்தாலும், தைரியமாக எதிர்கொள்ளலாமென்று தோன்றியது.

இப்படி ஒரு இழிநிலைக்குச் செல்ல, குறிஞ்சிக்கு எப்படி தைரியம் வந்தது என்று எண்ணும்போதே மனம் விதிர்த்துப் போய்விட, தன் குடும்பத்திற்கு மட்டும், அடுக்கடுக்காய் ஏனிந்தக் கஷ்டங்கள் என்று இதயம் கனத்துப் போனது.

உலகமே ஸ்தம்பித்தாற் போல் அமர்ந்திருந்த பல நிமிடங்களுக்குப் பிறகு, "இப்போ அழுது என்ன பிரயோஜனம் குறிஞ்சி... முன்னாடியே எல்லாத்தையும் யோசிச்சிருந்திருக்கணும்! சரி...

## தாலிகள் பலவிதம்

தமிழ்நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு சமூகத்தினரும் ஒவ்வொரு வகையான தாலி அணிகின்றனர். ஒவ்வொரு உட்பிரிவிற்கும் ஒரு மாறுபட்ட தாலி வகை உள்ளது. சைவர்களுக்கு ஒரு வகைத் தாலி. வைணவர்களுக்கென்று ஒரு வகைத் தாலிகள் உள்ளன. அவரவர் குல. பிரிவு ஆகியவற்றின் வழக்கப்படி தாலி செய்வார்கள்.


பெரும்பாலும் சைவர்கள் தாலி லிங்க வடிவில் இரு பக்கம் சூரியனும் சந்திரனும் கொண்டு இருக்கும். சிலருடைய தாலி தட்டையாக இருக்கும். சிலருடைய தாலி குண்டாக இருக்கும். தமிழ்நாட்டைச் சேராத பிறமொழிக்காரர்களின் தாலி வட்டமாக நடுவில் ஒரு பொட்டு வைத்துக் காணப்படும்.

கேரளத்தவர் தாலி மிகச் சிறியதாக இலை வடிவத்தில் இருக்கும். இந்தத்தாலியில் தவழும் கண்ணன் உருவம் காணப்படும்.

கிறிஸ்தவர்கள் தாலியில் சிலுவை பலவித டிசைன்களில் தங்கத்தின் அளவிற்கேற்ப வேலைப்பாடுகளுடன் பதக்கம் போல் செய்யப் பட்டு நடுவில் சிலுவை இருக்கும்.

இஸ்லாமியர்கள் தாலியில் பிறை வடிவம் காணப்படும். தாலி கட்டுவது மணமகன் இல்லை எனவும், மணமகனின் சகோதரி என்றும் கூறுகின்றனர்.

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் மீனாட்சி திருக்கல்யாணத்தன்று பெண்கள்



தங்கள் தாலியைப் புதிய மஞ்சள் கயிற்றில் கோத்து அணிந்து கொள்வர். அன்று மட்டும் பத்தாயிரக்கணக்கானவர் இது போல் புதிய தாலிக்கயிறு அணிவது, கயிறு மாற்றிக் கொள்வது. பிறருக்கு மஞ்சள் கயிறு, மஞ்சள், குங்குமம் வழங்குவது நடைபெறும்.

வேண்டிய காரியம் நடந்து மகிழ்ச்சி ஏற்பட்டாலோ, திருமணம் தடையில்லாமல் நடைபெற்றாலோ, நோயுற்ற கணவன் நல்ல படியாக உயிர் பிழைத்து எழுந்தாலோ கணவன் கட்டிய தாலியை உண்டியலில் செலுத்த வேண்டிக் கொள்வது அதிகரித்து வருகிறது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உண்டியல் திறக்கப்பட்டபோது கிடைத்த தாலிகளைப் படத்தில் பார்க்கிறீர்கள். இது போல் பலமுறை ஏராளமான தாலிகள் உண்டியலில் சேர்கின்றன. புதிய தாலி வாங்கி உண்டியலில் செலுத்துவதும் உண்டு. தாலிக்குப் பின்னால் இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன.

- மங்கள முருகேசன்.

அவர் யாருன்னு சொல்லு... பேசிப் பார்க்கலாம்" விரக்தியும் கவலையுமாகக் கேட்டாள்.

அழுகைக்கிடையே குறிஞ்சியிடமிருந்து மெல்ல விவரமறிந்த போது, அவன் பெயர் ஆனந்த் என்றும், கம்ப்யூட்டர் சென்டர் வைத்திருப்பவனென்பதும், அங்கு செல்லும் போது துளிர்க்க ஆரம்பித்த காதல், இன்று கருவறையை நிரப்பியதில் முடிந்திருப்பதை அறிய முடிந்தது.

மனதை வேதனையும், கோபமும் ஆக்ரமிக்க, ஒரு முடிவுடன் குளித்துத் தயாராகி, உடனே அந்த ஆனந்தைப் பார்க்கச் சென்றாள் நிலா.

******

அந்த கம்ப்யூட்டர் சென்டருக்குள் நுழையும் போதே, ஆனந்த் எப்படிப் பட்டவனாக இருப்பானோவென்ற குழப்பமும் தவிப்பும், மனதிற்குள் பொம்மலாட்டம் ஆடின.

அவளைக் கண்டதும், மெதுவாக அருகில் வந்த ஒரு இளைஞன் "நீங்க... குறிஞ்சியோட அக்கா தானே? வாங்க! நான்... ஆனந்த்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டபோது, அவனிடம் பெரும் சஞ்சலம் தெரிவது போல் தோன்றியது.

நேரே பார்ப்பதற்கு, மரியாதை தெரிந்தவனாக, நல்லவனாக அவன் இருந்தது பெரும் ஆச்சர்யத்தை விளைவிக்க, அவனைத் தொடர்ந்து அலுவலக அறைக்குள் சென்றாள்.

உள்ளே சென்றதும், கோபமும் இயலாமையும் போட்டி போட்டுக் கொண்டுவர, ஒரு சிறலான மூச்சுடன் நிமிர்ந்தவள், "மிஸ்டர் ஆனந்த்! நீங்க படிச்சவர்... இப்படி ஒரு காரியத்தை செஞ்சிட்டு, நீங்கல்லாம் எப்படி தலை நிமிர்ந்து சமூகத்துல நடமாடுறீங்கன்னு நினைச்சாலே ஆச்சர்யமா இருக்கு... வெறுப்பாவும் வருது! உங்க வீட்டுல பெரியவங்க யாராவது இருந்தா, நாங்க வந்து பேசணும்... அட்ரஸ் குடுங்க..." என்றாள் இறுகிய முகத்துடன்.

"சாரி... இந்த மன்னிப்பு எல்லாத்துக்கும் தான்! நாங்க அவசரப்பட்டது தப்புதான்... எனக்குப் புரியுது! நானே குற்றவுணர்ச்சியில துடிச்சிட்டிருக்கேன். எனக்குன்னு யாரும் கிடையாது... ஏன்னா, நான் ஒரு அநாதை ஆசிரமத்துல வளர்ந்தவன்! ஸ்கூல் படிப்புக்கு மேல படிக்க முடியாம நான் கஷ்டப்பட்டப்போ, என்னை ஆதரிச்சிப் படிக்க வைச்சு, என்னை இந்த நிலைமைக்கு உயர்த்தினவர், என்னோட கார்டியன்... வெல்விஷர்... நிருபன் சார் தான்... அவர்கிட்டதான் பேசணும்" குற்ற உணர்ச்சியுடன் கூறினான்.

"அவர் எங்கே இருக்காரு?" அவள் கேட்ட போது, "நிருபன் சார், இப்ப சென்னையில இருக்காங்க..." தயக்கத்துடன் வந்தது அவன் குரல்.

"அவரை உடனே கிளம்பி வரச் சொல்லுங்க... எங்கப்பாவை அழைச்சிட்டு வந்து, அவரோட பேசறதுதான் மரியாதை! அவர் வந்து பேசி முடிச்சி, சீக்கிரமே கல்யாண தேதியக் குறிக்கணும்... நாம வெயிட்

பண்ணலாம்... குழந்தை காத்திருக்காதில்லையா...?" கோபத்துடன் அவள் கூறிய போது, அவன் முகம் வெளிறிப் போய், இறுகியது.

"இதப்பத்தி அவர்கிட்ட எப்படிப் பேசறதுன்னு, நானே ரொம்ப யோசிச்சிட்டுருந்தேன். இன்னிக்கே ஃபோன் பண்ணி அவரை வரவழைக்கிறேன். என்னால உங்களுக்கு ஏதும் தலைக்குனிவு ஏற்பட்டிருந்தா, என்னை மன்னிச்சிட சொல்லி உங்கப்பாகிட்ட சொல்லுங்க! யாரையும் ஏமாத்தணும், புண்படுத்தணும்கிறது என் எண்ணமில்லை..." மிகுந்த வருத்தத்துடன் மெல்லிய குரலில் கூறியவனைப் பார்த்த போது, என்ன பதில் சொல்வதென்றே புரியாமல் எழுந்தாள் அவள்.

"சரி... நான் கிளம்பறேன்! அவர் வந்தவுடனே, எங்க வீட்டுக்கு ஃபோன் பண்ணுங்க!" முடிவாகக் கூறிவிட்டு வெளியே வந்தபோது, நல்லவேளை மோசமான ஒருவனிடம், தன் தங்கை மாட்டவில்லையென்ற நிம்மதி எழுந்து நீண்ட பெருமூச்சாய் வெளி வந்தது.

## 3

நிலா வீட்டிற்குள் நுழைந்ததுமே, குறிஞ்சி ஆவலுடன் ஓடி வந்தாள். "அக்கா... அவரு என்ன சொன்னாரு?" பயத்துடன் கேட்டாள்.

"நாளைக்கு அவரோட கார்டியன் மிஸ்டர் நிருபனை வரவழைக்கிறேன்னாரு! அவர் வந்தப்புறம், அப்பாவை விட்டு அவரோட பேசச் சொல்லுவோம்" ஒரு பெருமூச்சுடன் கூறிவிட்டு, தந்தையிடம் சென்று எல்லாவற்றையும் கூறினாள்.

"சரிம்மா! நடந்தது நடந்துடுச்சி... இனிமே நடக்கிறதாவது நல்லதா இருக்கட்டும்" என்றபடி அவர் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கண்மூட, மனம் ஆயாசமானது.

சந்தோஷத்தை இருவரும் பகிர்ந்து கொள்ள, பிறகு அதற்கான விடையைச் சுமந்து சிலுவையில் அறையப் படுபவர்கள் மட்டும், பெண்களாக இருப்பது, பெரும் வேதனையைத் தந்தது!

அன்றிரவு அவள் உறங்கவேயில்லை.

அங்கு ஆனந்த் போனில் கூறியதைக் கேட்டு உடனே அன்றிரவே கிளம்பி வந்த நிருபன், கடும் கோபத்திலிருந்தான்.

வந்தவுடனே, "உனக்கு அறிவிருக்கும்னு நினைச்சேன் ஆனந்த்... வாழ்க்கையில நல்லா முன்னேறிட்டு வர நேரத்துல, இப்படி ஒரு ப்ளாக் மார்க் தேவைதானா? இந்த விஷயம் வெளியே தெரிஞ்சா, பொண்ணுங்களை இந்த சென்டருக்கு அனுப்ப மத்த பேரண்ட்ஸ் யோசிக்க மாட்டாங்க...?

எதிலயும் ஒரு ஒழுக்கமும் நேர்மையும் இருக்கணும்னு எதிர்பார்க்கறவன் நான்! கல்யாணத்துக்கு முன்னாடியே கர்ப்பமாகிற அளவுக்கு இறங்கி வந்திருக்கான்னா, அந்தப் பொண்ணு எப்படிப்பட்டவளா இருக்கணும்னு யோசிச்சியா?

அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டப்புறம், உன் எதிர்காலம் எப்படி இருக்குமோன்னு நினைச்சா எனக்கு ரொம்ப பயமாருக்கு... அவங்க குடும்பமே, இது மாதிரி மோசமானதா இருக்குமோன்னு, சந்தேகம் வருது!" சினத்துடன் சீறினான் நிருபன்.

"அப்படி எல்லாம் இல்லை சார்! குறிஞ்சி ரொம்ப நல்லவ... அவங்க குடும்பமும் அப்படித்தான்! எங்களை அறியாம... சாரி! நாங்க செஞ்சது எவ்வளவு பெரிய தப்புன்னு, இப்பப் புரியுது... ரொம்ப கில்ட்டியா இருக்கு!

எந்த முகத்தை வச்சிக்கிட்டு, அவங்க வீட்டுலப் போய் பேசறதுன்னு பயந்துட்டிருந்தப்போதான், அவங்க அக்காவே வந்து பேசினாங்க... நீங்கதான் எப்படியாவது எங்களை சேத்து வைக்கணும்." ஆனந்த் தவிப்புடன் கெஞ்சினான்.

"அவங்க வீட்டில இருந்து யாராவது வரட்டும்... இப்படி ஒரு பொண்ணை வளர்த்திருக்கீங்களேன்னு, உறைக்கிற மாதிரிக் கேக்கறேன்" கோபத்துடன் கூறி விட்டு, வெளியே சென்றான் நிருபன்.

மெதுவாகச் சென்ற மறுநாள் ஒருவித எதிர்பார்ப்புடன் செல்ல, அன்று மாலை ஆனந்த் போன் செய்தான்.

"மிஸ் நிலா... நிருபன் சார் என் மேல ரொம்பக் கோபமா இருக்காரு... அதனால உங்க அப்பா வரவேண்டாம்! அவர்கிட்டே நிருபன் சார் ஏதாவது தப்பா பேசிட்டா, அப்புறம் எனக்கு தான் கஷ்டம்! நீங்க மட்டும் வந்து பேசினா நல்லாருக்கும்... வரீங்களா... ப்ளீஸ்!" தர்மசங்கடத்துடன் கேட்டான்.

உடனே கோபம் வந்தாலும், இந்த சமயம் தான் அமைதியாக இருப்பதே சரியென்று எண்ணிக் கிளம்பிச் சென்று அந்த நிருபனைப் பார்த்த நிலாவிற்கு, ஏனோ குழப்பமாக இருந்தது.

ஆனந்தின் கார்டியனுக்கு எப்படியும் ஐம்பது வயதாவது இருக்கும் என்று எதிர்பார்த்து வந்தவளுக்கு, ஆனந்தை விட நான்கைந்து வயதுகளே மூத்தவனாய், ஆறடிக்கும் மேல்

உயரத்தில், கருமை கலந்த மாநிறத்தில், களையான முகமும் அதில் அடர்ந்த மீசையுமாய், கம்பீரமாக எதிரில் நின்று ஒற்றைப் புருவம் உயர்த்தி அவளை அளவிட்டபடி "ஹலோ..." என்று யோசனையுடன் முணுமுணுத்த படிக் கை நீட்டியவனைப் பார்த்தபோது மனதில் பெரும் கேள்வி எழுந்தது.

பதிலுக்கு மெதுவாக அவள் 'வணக்கம்' சொல்ல, அவள் பார்வையிலிருந்தே, அதிலிருந்த குழப்பத்தைக் கண்டு கொண்டவன், "என்ன... ஆச்சர்யமா இருக்கா? ஆனந்தோட 'கார்டியன்'னா உடனே வயசானவரா என்னை எதிர்பாத்திருந்தா அது உங்க தப்பு! எங்க ஸ்கூல்லே ஓல்ட் ஸ்டூடண்ட்ஸுக்கான விழாவில தான், இவனை சந்திச்சேன்... எல்லாத்துலயும் முதலா வந்தவனோட படிப்பு நின்னு போய் அவனோட எதிர்காலம் வீணாயிடக் கூடாதுன்னுதான், எங்கப்பாகிட்டே சொல்லி இவனுக்கு எல்லாமே செஞ்சேன்... ஆனா இப்ப உங்க தங்கை, அதையெல்லாம் ஒரு நொடியில வீணாக்கிடுவாங்க போலருக்கு" குத்தலாக முடித்தான்.

"ஒரு நிமிஷம்! என் தங்கை, அப்படி என்ன சார் உங்க ஃபிரண்ட் வாழ்க்கைய வீணாக்கிட்டா? நாங்க சொல்ல வேண்டியதெல்லாம், நீங்க சொல்றீங்க? இந்த விஷயத்துல நாங்கதான் கோபப்படணும்... எங்க பொண்ணு வாழ்க்கைய தான் உங்க நண்பர் வீணாக்கிட்டார்! தெரியுமா?" கோபத்துடன் சீறினாள் நிலா.

"என்ன... கோபப்படற மாதிரி நடிச்சா... நீங்க பண்ணின தப்பை மறைச்சிட முடியுமா? உங்க தங்கை நல்லா ப்ளான் பண்ணி இவனை மாட்ட வச்சப்புறம், இப்ப நீங்க அவங்களுக்கு சப்போர்ட்டுக்கு வரீங்களா?"

அவனுடைய ஏளனமும் கோபமும், சூறாவளியாய் சுழன்று அவளையும் தொற்றிக் கொள்ள, "கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க சார்! அவங்க ரெண்டு பேரும் காதலிச்சிருக்காங்க... தெரியாம நடந்த... ஊஹும்... உங்க நண்பருக்குத் தெரிஞ்சே நடந்த தப்பால, இப்ப பாதிக்கப்பட்டிருக்கறது என் தங்கை மட்டும் தான்... அதை மறந்துட்டுப் பேசாதீங்க!" பற்களைக் கடித்தபடிக் கூறினாள்.

"உங்களுக்கெல்லாம் எதுக்கு மரியாதை கொடுக்கணும்? இவன் நல்ல வசதியா இருக்கான்... கம்ப்யூட்டர் சென்டர் நடத்துறான்னு தெரிஞ்சுக்கிட்டு, உடனே மயக்கி கைக்குள்ளே போட்டுக்கிட்ட பொண்ணோட அக்காதானே நீங்க...!" இடுங்கிய கண்களுடன் நக்கலாக வந்தன, வார்த்தை அம்புகள்!

மனம் எரிதழலாய் தகிக்க, "மிஸ்டர் நிருபன்! இனிமே உங்களோடப் பேசறது அனாவசியம்! ஆனந்த்... எதுவா இருந்தாலும், எங்க வீட்டுக்கு வந்து முறையா எங்க அப்பாகிட்டப் பேசுங்க... இல்லைன்னா, மான அவமானம் பாக்காம நான் வேற விதமா நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்" கூறிவிட்டு வேகமாகத் திரும்பினாள்.

"ஒரு நிமிஷம்! உங்க தங்கச்சிக்கு ஒரு வாழ்க்கை வேணாமா? இப்படிக் கோவிச்சிட்டுப் போறீங்க?" கிண்டலாக நிருபன் கேட்க, "மனுஷங்க இருப்பாங்க... அவங்ககிட்டப் பேசலாம்னு நம்பி வந்தேன். ஆனா, தப்பான ஒரு இடத்துக்கு வந்திட்டேன்னு இப்பதான் புரிஞ்சுது... பேசணும்னு வரச் சொல்லி நல்ல மரியாதை குடுத்தீங்க... தேங்க்ஸ் ஆனந்த்!" விருட்டென்று திரும்பிச் சென்றவளையே கூர்மையுடன் தொடர்ந்தன, நிருபனின் விழிகள்.

"சார்..." தயக்கத்துடன் அழைத்த ஆனந்திடம், "ம்... எனக்கு ஒண்ணும் வருத்தமில்லை! அவங்க, காரியம் ஆகணும்னு எந்த லெவலுக்கு வேணும்னாலும் இறங்கி குழைஞ்சு பேசறாங்களா? இல்லை... தங்கச்சி தப்பே செஞ்சிருந்தாலும், சுயகௌரவத்தை விட்டுக் கொடுக்காம சரி பண்ணப் பாக்கறாங்களான்னு ஒரு சின்ன டெஸ்ட் வெச்சேன்....

பொதுவா, இந்த மாதிரி ரியாக்ட் பண்றவங்க அநியாயத்துக்குக் கட்டுப்படாதவங்களா, நேர்மையானவங்களா இருப்பாங்கன்றது என்னோட கணிப்பு! நாளைக்கே அம்மா அப்பாவைக் கிளம்பி வரச் சொல்றேன்... அவங்க வீட்டிலப் போய்ப் பேசலாம்" என்றான் யோசனையுடன்.

"தேங்க்யூ சார்!" நெகிழ்ச்சியுடன் ஆனந்த் கூறியபோது "ம்... இவங்க தங்கையும், இப்படித்தான் ஊசிப்பட்டாசாட்டம் பொரிவாங்களா? இல்லை... ரொம்ப அமைதியா?" கேலியாகக் கேட்டான் நிருபன்.

"குறிஞ்சி ரொம்பக் கோபக்காரி சார்! எங்க அக்கா ரொம்ப அமைதியானவங்கன்னு அவ சொல்லுவா... வீட்டில எல்லாமே அவ இஷ்டத்துக்குதான் நடக்கும். அக்கா எப்பவுமே விட்டுக் கொடுத்துடுவாங்கன்னு சொல்லுவா! ஆனா..."

"என்ன ஆனா... எப்படி இந்த சாந்தஸ்வரூபிக்கு கோபம் வந்ததுன்னு யோசிக்கிறியா? எப்பவுமே இப்படித்தான்... சாதுவா இருக்கறவங்களை சீண்டினோம்னா... அப்புறம் காடு

கொள்ளாதுங்கற கதைதான்!" எதுவோ புரிந் தாற்போல் சிறு புன்னகையுடன் செல்பவ ளையே, வியப்புடன் பார்த்தான் ஆனந்த்.

## 4

நிருபன், அன்றிரவு போன் செய்து வீட்டிற்குப் பேசியபோது, மறுநாள் கிளம்பி வருவதாக அப்பா வும் அம்மாவும் கூறினர்.

அன்று, தாங்க முடியாத கோபத்துடன் வீட்டிற்குச் சென்ற நிலாவிடம், "என்னக்கா... அந்த நிருபன் என்ன சொன்னாரு?" குறிஞ்சி தவிப்புடன் கேட்டாள்.

"பேசிட்டு வந்திருக்கேன்... எப்படியும் ரெண்டு நாள்லே முடிவு தெரிஞ்சிடும்!" என்ற படி சுருங்கிய முகத்துடன் உள்ளே சென்ற அக்காவைப் பார்த்தபோது, அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

நேரே தந்தையிடம் சென்ற நிலா, எல்லா வற்றையும் கூறிவிட்டு, "அப்பா! எனக்கென் னவோ, இது சுலபத்துல பேசி முடிவாகற விஷயமில்லைன்னு தோணுது! நம்ம சங்கீதா வோட பெரியப்பா, இப்போ சென்னையில பெரிய பதவியில இருக்காருன்னு போன தடவை அவளோட அம்மா சொன்னாங்க! முடிஞ்சா, அவர் மூலமா பேசிப் பாப்போம்" என்றாள்.

"சரிம்மா! அவசரப்பட வேணாம்... பொறுத் துப் பாக்கலாம்! குறிஞ்சி பண்ணின தப்புக்கு, நீ சிலுவை சுமந்துட்டு வந்து நிக்கிறே! இனிமேயாவது அவ உன்னை புரிஞ்சி நடந்துக் கறாளான்னு பாப்போம்!" ஒரு பெருமூச்சுடன் கூறினார் அவர்.

"அதை விடுங்கப்பா!" என்றவளிடம், "சரிம்மா! உன் வேலையெல்லாம் எப்படி இருக்கு? இந்தப் பக்கம் ட்ரான்ஸ்ஃபர் வாங் கிட்டு வரக் கூடாதா?" மகளை விட்டுப் பிரிந்த சோகத்தை, அடர்த்தியாய் தெரிவித்தன, அவருடைய வார்த்தைகள்!

"ப்ரைவேட் காலேஜ் ஆச்சேப்பா, அது முடியாது. பார்ப்போம்... குறிஞ்சி கல்யாணம் முடிஞ்சிட்டா, நீங்களும் அம்மாவும் என் னோட சென்னைக்கு வந்துடுங்க!"

"இல்லைம்மா! பிறந்து வளர்ந்த இந்த ஊரை விட்டு, என்னால வர முடியுமான்னு தெரி யலை... நல்ல க்ளைமேட்... தண்ணிக் கஷ்டம் கிடையாது. இங்க நல்லாப் பழகிட்டாலும் உன்னோட இருக்கணும் அப்படின்னும் ஆசையா இருக்கு! லீவுலயாவது என் கூட இருக்கியே... அதுவே சந்தோஷமா இருக்கு!"

அவள் தலையைப் பாசத்துடன் அவர் வருடிய போது, முன்பு எப்போதும் இல்லாதது போல், இந்த முறை அவர் அதிகமாகப் பேசுவதும் மனதால் மிகவும் பலவீனப்பட்டி ருப்பதும் புரிந்தது.

குறிஞ்சியைப் பற்றிய கவலைதான் காரண மாக இருக்கும் என்று எண்ணும் போதே, கோவிலிலிருந்து அப்போதுதான் வீடு திரும்பிய செண்பகம் வேகமாக அவளருகில் வந்து அமர்ந்தாள்.

"என்னாச்சு நிலா? அந்தத் தம்பி என்ன சொன்னாரு?" ஆவலுடன் கேட்க "இன்னும் ரெண்டு நாளிலே எல்லாம் முடிவாயிடும்மா!" நிலா மெதுவாகக் கூறினாள்.

"கடவுளே! நீ தான் எல்லாத்தையும் நல்லபடியா நடத்தணும். எங்களுக்கு கண்ணுக் குக் கண்ணா, குடும்பத்து மேல ரொம்ப அக்கறையும் பாசமுமா இருக்கற ஒரு பொண் ணைக் குடுத்திருக்கே... ஆனா, யாருக்குமே நிம்மதியத்தான் குடுக்கலை."

ஒரு பெருமூச்சுடன் நிலாவின் நெற்றியில் அவள் விபூதியைப் பூசியபோது, மனம் எங்கோ தாவிச் செல்ல தன்னைக் கட்டாயப்படுத்தி அடக்கினாள்.

இந்த சோகத்தினாலும், தன் வீட்டு விஷ யமே அந்தத் தெருவின் வாய்க்கு அவலாகி விடுமோவென்ற பயத்தினாலும், வீட்டிற்குள் ளேயே முடங்கி இருந்த செண்பகத்தை நினைத் தால், பாவமாகவும் இருந்தது.

* * * * *

## தவழ்வதில் ஒரு சாதனை!

திபெத் நாட்டில் சீனா எல்லை அருகே உள்ள டிசாட்சா கிராமத்தை சேர்ந்தவர் லாமாஷெராய் ஜியால்ட்டென் (வயது 35). புத்த மதத்தை சேர்ந்த இவர் அங்கிருந்து பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள புத்தகயா கோவிலுக்கு தவழ்ந்தே வந்தார். ஒரு நாளைக்கு 7 கிலோ மீட்டர் தூரம் வரை தவழ்ந்த இவர் ஒரு வருடம் 7 மாதம் 24 நாட்களில் பாட்னா வந்து சேர்ந்தார்.

இவரது இந்த சாதனை கின்னஸ்

மறுநாள் காலையில், சங்கீதாவின் வீட்டிற்குச் சென்ற போது, நெஞ்சம் முழுவதும் அவளுடைய நினைவுகளே நீங்காது நிறைந்திருந்தன.

வெளி கேட்டைத் திறந்து தோட்டத்திற்குள் நுழைந்தபோது, அங்கு போடப்பட்டிருந்த ஊஞ்சலில் முன்பு தானும் அவளும் போட்டி போட்டுக் கொண்டு ஆடியதும், நாட்டிய மேடையாய் கிணற்று மேடையைத் தேர்வு செய்து போட்டி நடத்தியதும், ஒவ்வொரு முறையும் நடுவராக இருக்கும் நீலாம்பரி தன்னையே வெற்றி பெற வைப்பதும், கலையாத கனவுகளாய் கண்களில் நீர்த் துளிகளை வரவழைத்தன.

இன்று ஆடாத ஊஞ்சலும், சலங்கையொலி இல்லாத மௌனமும், பறிக்கப்படாத பூக்களுமாய், அந்தத் தோட்டமே சபிக்கப்பட்ட வனமாய் தோன்றியது.

ஒரு பெருமூச்சுடன் அழைப்பு மணியை அழுத்தியபோது, கதவு திறக்கப்பட, நீலாம்பரி அவளைக் கண்டதும் வேகமாக முன்னால் வந்து பாசத்துடன் அணைத்துக் கொண்டார்.

''நிலா... எப்படிம்மா இருக்கே? லீவு விட்டாச்சா... அப்பா எப்படி இருக்காரு?'' கேள்விகளை அடுக்கியபடி, கைப்பிடித்து அவளை உள்ளே அழைத்துச் சென்றார்.

''நல்லாருக்கேன்மா... மனசுதான் நல்லா இல்லை! வீட்டிலே பெரிய பிரச்சினை. அங்கே தைரியமா இருக்கேன்... ஆனா முடியலை. எனக்கும் இதப் பத்தி மனசு விட்டு யாரோடயாவது பேசணும் போல இருந்தது... அதான் இங்கே வந்துட்டேன்.''

''என்ன நிலா? அப்பாவுக்கு திரும்பவும் உடம்பு முடியலையா? இல்லை... உங்க சித்தியால ஏதாவது பிரச்சினையா?''

''ரெண்டுமே இல்லைம்மா! குறிஞ்சிதான்...'' மெல்லிய குரலில் முழு விவரத்தையும் கூறினாள்.

யோசனையும், வியப்புமாய் அவள் கூறியதை கேட்டபடி அமர்ந்திருந்த நீலாம்பரியிடம், ''அந்த ஆனந்தோட ஃப்ரெண்ட் ஒத்து வரலைன்னா சங்கீதாவோட பெரியப்பா கிட்ட சொல்லி ஏதாவது பண்ண முடியுமான்னு கேக்க வந்தேன்மா'' அவள் கூறும் போதே, உள் அறையிலிருந்து ஹாலுக்கு வந்தவனைப் பார்த்ததும், விழிகள் அதிர்ச்சியில் விரிய, உறைந்து போய் சிலையாய் அமர்ந்திருந்தாள் நிலா.

**5**

அங்கு ஹாலில் அமர்ந்திருந்த நிலாவை எதிர்பார்க்காத நிருபனின் முகமும் வியப்பில் விரிய, விழியோரங்கள் யோசனையுடன் இடுங்கின.

''நீரு... இவதான் நிலா! நம்ம சங்கீதாவோட க்ளோஸ் ஃப்ரெண்ட்! சென்னையில லெக்சரரா இருக்கா. சங்கீதா ஞாபகம் வந்தா நான் இவளோட தான் பேசுவேன்.'' நீலாம்பரி அறிமுகப்படுத்தினார்.

''ஹலோ!'' என்றவன், ''சித்தி நேத்து நான் சொல்லலை ஒரு ஸ்பிட்ஃபயர் லேடிய சந்திச்சேன்னு... அது இவங்க தான்!'' குறும்புடன் கூறினான்.

பதட்டத்துடன் வேகமாக எழுந்தவளிடம், ''நிலா! இது என் அக்கா பையன் நிருபன்! நீ சொன்னது, இவன் ஃப்ரெண்ட் ஆனந்தைப் பத்திதான்னு நீ பேசும்போதே நான் புரிஞ்சிக்கிட்டேன். நீரு என் கிட்ட முக்கியமான ஒரு விஷயத்தை மறைச்சிட்டான். நீ கவலைப்படாதே... இந்தக் கல்யாணத்தை நான் முடிச்சு வைக்கிறேன்!'' என்றபடி புன்னகைத்தார் நீலாம்பரி.

''தேங்க்ஸ்மா... நான் கிளம்பறேன்!'' அவசரமாகப் புறப்பட்டவளைத் தடுத்தவன், ''நீங்க பேசிட்டுருங்க... எனக்காகக் கிளம்ப வேண்டாம்.சாரி சித்தி! அது ஆனந்தோட பர்சனல்ங்கறதாலதான் நான் சொல்லலை.



சாதனை புத்தகத்தில் இடம் பிடிக்குமா? என்பது இனிதான் தெரியவரும்.

**-கலைச்செல்வி, பெங்களூர்.**

வெளியிலே போய்ட்டு வந்துடறேன் சித்தி" என்றபடி அவளிடமும் ஒரு கம்பீரத் தலை யசைப்புடன் விடைபெற்று வெளியே சென் றான்.

உணர்வுகள் உடல் முழுவதும் தகிப்பை ஏற்படுத்த தொப்பென்று சோபாவில் அமர்ந்த வளிடம், "ஆனந்த் ஒரு பொண்ணை விரும்பற தாகவும், அது நல்ல குடும்பமான்னு விசாரிச்சி பேசி முடிக்கணும்னு தான் நீரு சொன்னான்.

அவ கர்ப்பம்ன்னு தெரியாது. அந்தப் பொண்ணோட அக்கா ரொம்பக் கோபமா பேசிட்டுப் போனதா சொன்னப்ப நான் கூட ஏன்னு யோசிச்சேன். இப்பதான் புரியுது. எல்லாம் நல்லபடியா முடியும்... கவலைப் படாதே... வா!" அவளை அழைத்துச் சென்று சாப்பிட வைத்தார் நீலாம்பரி.

பிறகு கிளம்பும் போது அவர் கூறிய வார்த்தைகள், அவள் மனதில் ஆறுதலாய் வேர்ப்பிடித்து நின்றன.

"நிலா! இன்னிக்கு சாயந்திரம், இது விஷயமா பேசி முடிக்க அக்காவும் மாமாவும் ஊரில இருந்து வராங்க... நானும் அப்பாவும் கூட உங்க வீட்டுக்கு வருவோம்னு நினைக் கிறேன். நீரு கிட்டே நான் பேசிடறேன். கவலைப்படாம போயிட்டு வா"

"தேங்க்ஸ்மா! நான் அம்மான்னு நினைக்கும் போதே, முதல்லே என் நினைவுக்கு வரது உங்க முகம் தான்... அது என்னிக்குமே மாறாது! இந்த விஷயத்துல போலீஸுக்குப் போகணும்னு நான் சொன்னதை தப்பா எடுத்துக்காதீங்க... நாளைக்கு எப்போ வரீங்கன்னு எனக்கு ஃபோன் பண்ணுங்க!"

அவரிடம் விடைபெற்று வெளியில் வந்தபோது, மனதில் பெரிய பாரம் இறங்கிய நிம்மதி வந்தாலும், சங்கீதாவின் நினைவுகள் அவளைப் பெரிதும் ஆக்ரமித்தன.

* * * * *

நிலாவும், சங்கீதாவும் பி.பி.ஏ. இறுதி வருடம் படித்து முடித்திருந்த நேரம்! சங்கீதா, வீட்டிற்கு ஒரே பெண்... நல்ல வசதியான குடும்பம் என்பதால் வெளிநாட்டில் வேலை செய்யும் வரனாகத் தேடி வந்தனர்.

அந்த நேரம், அவர்களுடைய எதிர்பார்ப்புக் கேற்றபடி ஒரு வரன் வரவும், நிறைய நகைக ளும், ரொக்கமும் சீராகப் பேசி முடித்து நிச்சய தார்த்தமும் செய்து முடிக்கப் பட்டது.

ஆனால், இரண்டு மாதம் கழித்து நடந்த அந்தத் திருமணத்திற்கு, நிலாவால் செல்ல முடியாத ஒரு நிலை! செண்பகமும், வாகீஸ் வரனும் மட்டும் திருமணத்திற்கு சென்று வந்தனர்.

அவள் வாழ்க்கை நன்றாக அமையட்டும் என்று வீட்டிலிருந்தே பிரார்த்தனை செய்தாள் நிலா! ஆனால் அந்தப் பிரார்த்தனையும் பலிக்க வில்லை... சங்கீதாவின் வாழ்க்கை நிலைக்க வில்லை! அந்த நாளை மட்டும், நிலாவால் மறக்கவே முடியாது போனது.

அன்று, தன் அறையில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த நிலாவை, மென்மை யான ஒரு தொடுகை கலைக்க, நிமிர்ந்தால் சோகச் சிற்பமாய் சங்கீதா அங்கு நின்றிருந்தாள்.

"சங்கீதா! எப்படி இருக்கே? ஊட்டியில ஹனிமூனை நல்லா என்ஜாய் பண்ணினீங் களா... அவர் எப்படி நல்லா பழகறாரா?" ஆர்வத்துடன் அவள் கேட்கும் போதே, முகத்தை மூடி அழ ஆரம்பித்தாள் சங்கீதா.

"ஏய்... ஏன்டி அழறே? அம்மா, அப்பாவை விட்டுட்டு ஃபாரின் போகணுமேன்னு கஷ்டமா இருக்கா? உனக்கு குழந்தை உண்டானவுடனே ரெண்டு பேரும் அங்கே ஓடி வந்துடுவாங்க... தைரியமா இருக்கணும்" அணைத்து ஆறுதல் கூறினாள்.

சிறிது நேரம் கழித்து நிமிர்ந்தவள், "இல்லைடி... நான் அதுக்காக அழலை!" என்ற போது நிலாவிற்கு ஒன்றுமே புரியவில்லை.

தேனிலவு முடிந்து வந்த புதுமணப் பெண்ணிடம், நாணத்தை மட்டுமே எதிர்பார்த் திருந்தவளுக்கு, அவளுடைய அழுகை புதிராய் பட்டது.

"ஏன்டி? என்கிட்ட சொல்லக் கூடாதா? அப்படி என்ன பிரச்சினை உனக்கு?" அவள் ஆதரவாய் கேட்ட மறுகணமே,பதிலுக்கு இடியாய் அந்த செய்தி வந்தது.

"நாங்க ஏமாந்துட்டோம் நிலா... வெளி நாட்டுல வேலை செய்யற மாப்பிள்ளை தான் வேணும்னு அம்மாவும், அப்பாவும் ரொம்ப ஆசைப்பட்டாங்க... அதனாலதான் நான் ஒத்துக்கிட்டேன். சரியா விசாரிக்காம பண் ணிட்டதாலே இப்ப என் எதிர்காலமே இருட் டாயிடுமோன்னு ரொம்ப பயமா இருக்குடி!"

"ஏன்... என்ன நடந்தது?"

"அவரு ஏற்கெனவே அங்கே ஒரு பொண் ணைக் காதலிச்சிருக்காரு. ரெண்டு பேரும் சேர்ந்து குடித்தனமே பண்ணியிருக்காங்க... இப்ப அவ ப்ரெக்னன்டா இருக்காளாம். அப்பா, அம்மாவோட விருப்பத்துக்காக என்னைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டாராம்.

இதைக் கேட்டவுடனே உடைஞ்சு போய் என் மனசு மரத்துப் போயிடுச்சி! என்னையும் அங்கே அழைச்சிட்டுப் போறேன்னு சொல்றாரு... இத யார்கிட்டயும் சொல்லவும் பயமா இருக்கு நிலா! என்ன செய்யறதுன்னே தெரியலை."

மனம் படபடவென்று விதிர்த்துப் போய் விட, "இதை உடனே உங்க வீட்டில சொல்லி, உங்க பெரியப்பா போலீஸ்ல இருக்காருன்னு சொல்லியே... அவரு மூலமா கம்ப்ளெயின்ட் பண்ணுங்க! ஒரு பொண்ணோட வாழ்க்கை என்ன விளையாட்டு சாமானா? கண்டவங்க அதை கையிலெடுத்துப் போட்டு உடைக்கறதுக்கு! ரொம்பக் கஷ்டமா இருக்குடி சங்கீதா... என்னால ஜீரணிக்கவே முடியலை." ஆதங்கத்துடனும், தவிப்புடனும் கூறிய நிலாவின் விழிகளிலும் மெல்லிய நீர்க்கசிவு!

சங்கீதா, அன்று கண்ணீரைத் துடைத்தபடி எழுந்து சென்றவள் தான்... பிறகு நிலாவால் அவளை உயிர்ப்புடன் பார்க்க முடியவில்லை.

## 6

சங்கீதா, தைரியமான ஒரு முடிவை எடுப்பாள் என்று நிலா எதிர்பார்த்திருக்க, மறுநாளே சுனாமியாய் அவளை சுழற்றிப் போட்டது, சங்கீதாவின் மரணச் செய்தி!

தனக்குள்ளேயே எல்லாவற்றையும் இறுகப் புதைத்துக் கொண்ட அந்தப் பெண், மாமியார் வீட்டிலேயே தற்கொலை செய்து கொள்ள, மனதளவில் பெரிதும் உடைந்து போய் பாறையாய் இறுகிப் போனாள் நிலா.

தன் தோழிக்கு நேர்ந்த அந்தப் பெரும் கொடுமையை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. வாழ ஆரம்பித்தவுடனே அவள் தன் உயிரை மாய்த்துக் கொள்ள, இனி அவளைப் பார்க்கவே முடியாதென்ற நிஜம் புரிந்த போது, நிலாவை உலுக்கிப் போட்டது அந்தப் பேரிழப்பு!

பிறகு வந்த நாட்களில், நீலாம்பரியையும் ராகவனையும் தேற்றுவதுதான் அனைவருக்கும் பெரும் கஷ்டமாய் இருந்தது.

ஒரு மனிதனின் சுயநலமான துரோகத்திற்கு அந்தப் பெண்ணின் வாழ்வு பலியாகியது. உறவும் நட்பும் கூறியதால், தங்கள் பெண்தான் இறந்து விட்டாளே... இனி திரும்பி வரவா போகிறாள் என்று அந்தப் பையனை தண்டிக்காமல் விட்டதும் பிறகு தெரியவரக் கொதித்துப் போனாள் நிலா.

அவனும், எந்த உறுத்தலுமின்றி வெளிநாடு சென்று விட, மனம் உலைக்களமானது... ஆண்களைக் கண்டாலே மனதில் வன்மம் வந்தது... சங்கீதாவின் மரணம் ஆறாத ரணமாய் மனதில் படிந்தது.

'கிறீச்' என்ற காரின் பிரேக் சப்தமும், கார் டயர் தேய்கின்ற ஒலியும், அவளை இவ்வுலகிற்கு மீட்டு வர, பயந்து போய் நிமிர்ந்த போது கோபத்துடன் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான் அந்த நிருபன்.

"என்ன... கனவா? இது கவர்ன்மெண்ட் ரோடுங்க... என்னவோ உங்க வீடு மாதிரி தூக்கத்துல நடக்கிறாப்பல வந்து காருக்கு குறுக்கே விழறீங்க? நான் பிரேக் பிடிக்கலைன்னா, இந்நேரம் என்ன ஆகியிருக்கும்... தெரியுமா?" கோபத்துடன் இரைந்தவனை மெதுவாக நிமிர்ந்து பார்த்தாள் நிலா.

மனம் கனவில் மிதந்தாலும், கால்கள் பழகிய பாதையிலேயே பயணிக்க, தெருவைக் கடக்கும் போது நிமிர்ந்து பார்க்காதது தன் தவறுதான் என்று புரிய "சாரி!" என்றாள் நிலா மென்குரலில்!

"ஓ! உங்களுக்கு ஊசிப்பட்டாசாட்டம் படபடன்னு பொரிய மட்டும் தான் தெரியும்னு நினைச்சேன்! சாரிக்கு கூட அர்த்தம் தெரியுமா?" உதடுகள் ஏளனமாக வளைய அவன் கிண்டலுடன் கேட்டபோது, சட்டென்று ஏனோ மனம் வறண்டு போனது.

ஒரு சீறலான மூச்சுடன் பார்வையைத் தழைத்தபடி, வேகமாகத் திரும்பிச் செல்பவளையே யோசனையுடன் தொடர்ந்தது, அவன் பார்வை!

சங்கீதாவின் வயதென்றால், இவள் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்ற கேள்வியும், ஒரு வித்தியாசமான பெண்ணை சந்தித்த உணர்வும், உள்ளத்தில் கைகோர்த்தன.

* * * * *

**வீ**ட்டிற்குச் சென்ற நிலா, குறிஞ்சியையும் செண்பகத்தையும் தந்தையின் அறைக்கு அழைத்துச் சென்று எல்லா விவரங்களையும் கூறிய போது, மூவரும் மிகவும் மகிழ்ந்தனர்.

"தேங்க்யூக்கா..." வெட்கம் கலந்த உற்சாகத்துடன் தன்னை முத்தமிட்டு விட்டுச் சென்ற குறிஞ்சியைப் பார்த்தபோது, புதிதாய் ஒரு உற்சாகம் மனதில் மொட்டு விட்டு மலர்ந்தது.

"நிலா... அப்படியே உனக்கும் ஒரு வரன் பாத்துப் பேசி முடிச்சிட்டா, எனக்கு நிம்மதியாயிடும்... பழசை எல்லாம் ஒரு கெட்ட கனவா

மறந்துட்டு, கல்யாணத்துக்கு ஒத்துக்கடா..." வாகீஸ்வரன் ஆர்வத்துடன் கேட்டார்.

"அப்பா... இப்பதான் நான் எல்லாத்தையும் மறந்துட்டு நிம்மதியா இருக்கேன். என்னை இப்படியே இருக்க விடுங்க... என் சந்தோஷம் தான் முக்கியம்னு நீங்க நினைச்சா, இதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு... ப்ளீஸ்" ஒரு பெருமூச்சுடன் தீர்மானமாகக் கூறிவிட்டுச் செல்பவளை கண்ணீர் மல்கப் பார்த்தார் வாகீஸ்வரன்.

'கடவுளே! என் பெண்ணுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடு.' இறைவனிடம் இறைஞ்சியது அவர் மனம்!

மறுநாள் காலையிலேயே நீலாம்பரியிடமிருந்து போன் வந்தது. அன்று மாலையே குறிஞ்சிக்குத் திருமணம் பேசி முடிப்பதற்காக, அனைவரும் வருவதாக அவர் கூறியபோது சிறகு விரித்து சந்தோஷ வானில் பறந்தாள் குறிஞ்சி.

மாலை நான்கு மணிக்கு டிபன் வகைகளை ஏற்பாடு செய்து காத்திருந்தபோது, வாசலில் வந்து நின்ற காரிலிருந்து அனைவரும் இறங்கினர்.

ஆனந்த், நிருபன், அவனுடைய அப்பா, அம்மா, ராகவன், நீலாம்பரி எல்லோரும் உள்ளேவர, குறிஞ்சியும் ஆனந்தும் கண்களாலேயே பேசிக் கொண்டனர்.

பிறகு பெண் பார்க்கும் படலம் இயல்பாக நடக்க, நிலா நிருபன் அமர்ந்திருந்த பக்கமே திரும்பவில்லை. நீலாம்பரி, நிலாவின் குடும்பத்தைப் பற்றிப் பெருமையாகப் பேச, திருமணத்தைப் பற்றி எல்லா விவரங்களும் பேசி முடித்த பிறகு அவர்கள் கிளம்பினர்.

நிருபனின் தாய் மனோகரி, நிலாவிடம், "நீ எங்கேம்மா வேலை செய்யறே...?" என்ற போது அவர் குரலில் பெரும் ஆர்வம் தெரிந்தது.

"நான் சென்னையிலதாம்மா லெக்சரரா இருக்கேன்..." என்று தான் பணி புரியும் கல்லூரியின் பெயரைக் கூறியதும் நிருபனின் புருவங்கள் சட்டென்று உயர்ந்தன. உதட்டோரம் ஒரு வியந்த புன்னகை விரவிப் பரவியது.

பிறகு அவர்கள் விடை பெற்றுச் செல்ல, எல்லோர் மனதிலும் பெரிய பாரம் இறங்கிய நிம்மதி!

* * * * *

**ம**றுமாதமே தேதி குறித்து விட்டதால், திருமணத்திற்கான வேலைகள் உடனே ஆரம்பிக்கப்பட, தொடர்ந்து வந்த நாட்களில்



குறிஞ்சி கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தாள்.

பாதி வேலைகளை ஆனந்த் பகிர்ந்து கொள்ள, நகைகள், புடவைகள் தயாராக இருந்ததால், மற்ற ஏற்பாடுகளை நிலா கவனித்துக் கொண்டாள்.

பத்திரிகை கொடுக்கும் வேலையை செண்பகம் எடுத்துக் கொள்ள, கேட்டரிங் சம்பந்தப் பட்ட வேலைகளை ஆனந்த் பார்த்துக் கொண்டான்.

நாட்கள் விரைந்து சென்று திருமண நாளும் வந்துவிட, அனைவரின் ஆசியுடனும் ஆனந்தின் கரம்பிடித்தாள் குறிஞ்சி.

திருமணத்தின் போது, பெண் வீட்டின் சார்பாக வாசலிலேயே நின்று அனைவரையும் வரவேற்றபடி மேடைக்கே வராமல், அங்குமிங்கும் வெண்புறாவாய் சுற்றித்திரிந்த நிலாவையே நிரூபனின் விழிகள் தொடர்ந்து கொண்டிருந்தன.

அடர்ந்த மேகக் கூட்டத்துக்குள்ளிருந்து சட்டென்று வெளிப்பட்ட நிலா வருகையைப் போல், அவள் முகம் அந்தக் கல்யாணக் கும்பலில் தனி ஒளியுடன் தெரிந்தது.

ஐந்தரை அடி உயரத்தில் செதுக்கிய சிற்பம் போல், அழகிய முகத்தில் குறுகுறுக்கும் விழிகள் கவிதை பேச, வெண்பட்டணிந்து வளைய வந்தவளையே விழியெடுக்க முடியாமல் பார்த்திருந்தவனின் மனதிற்குள், முதன் முதலாய் ஒரு மெல்லிய சலனம்!

அந்த நொடியே, அவனுடைய இதயப் பெட்டகத்திற்குள், புதிதாய் ஒரு பெண்ணின் ஓவியம், காதல் தூரிகையால் அழுத்தமாக வரையப்பட்டது.

## 7

திருமணம் இனிது முடிய, அவர்களுடைய வீட்டின் மாடிக்கே குறிஞ்சியும், ஆனந்தும் குடிவந்தனர்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, அந்த வீட்டிற்குள் நிம்மதியும், சந்தோஷமும், திருமண ரூபத்தில் குடிபுக, அனைவருக்கும் மனம் நிறைந்திருந்தது.

திருமணத்திற்குப் பின்னர், மஞ்சள் கயிறு மாஜிக் என்பதுபோல் குறிஞ்சியிடம் நிறைய மாற்றங்கள் தெரிய ஆரம்பித்தன.

அவளுக்கும் பொறுப்பு வந்திருப்பது புரிந்தபோது, இனிமேல் அப்பாவைப் பற்றிய கவலையின்றி இருக்கலாமென்று நிலாவிற்குத் தோன்றியது.

விடுமுறை நாட்கள் சிறகு விரித்த பறவையாய் கடந்து செல்ல, அவள் சென்னைக்கு கிளம்பும் நாளும் வந்தது.

கல்லூரி திறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே நிலா கிளம்பிய போது, முதன்முறையாகப் பாசத்தினால் கலங்கிய விழிகளுடன் குறிஞ்சியும் செண்பகமும் அவளை வழியனுப்ப, வாகீஸ்வரனின் கண்களும் நிறைந்து விட்டன.

குறிஞ்சியின் கைகளை அன்புடன் பிடித்து அழுத்திவிட்டு, "இனிமே நீ நல்லா சாப்பிடணும்... ரெகுலரா டாக்டர் செக்கப்புக்கு போகணும்! வீணா கோபப்படக் கூடாது. நல்லா ரெஸ்ட் எடுத்துக்க! அம்மா அப்பாவையும் கவனிச்சிக்கணும்... ஏதாவது வேணும்னா எனக்கு ஃபோன்ல பேசு... ஒகே!" என்றபடி ஆனந்திடமும் விடை பெற்றாள்.

இந்த இனிய கூட்டில், ஒரு கூட்டுப் பறவைகளாய் இன்றி தான் மட்டும் தனிப்பறவையாய் செல்வது, முதன் முதலாக சிறு வருத்தத்தைத் தந்தது.

பாசத்திற்கும், பரிவிற்கும், மனம் வெகுவாய் ஏங்கி அலைபாய்வது புரிய, நேரே சங்கீதாவின் வீட்டிற்குச் சென்று நீலாம்பரியையும் பார்த்துவிட்டு கிளம்பினாள்.

* * * * *

மீண்டும் பழைய இடம்... பழகிய மனிதர்கள்... பயிலும் மாணவர்கள் என்று காலச் சக்கரத்தின் ஓட்டத்தில் தன்னையும், இணைத்துக் கொண்டது மனது!

ஒரு மாதம் கழித்து, அந்த ஞாயிறன்று எப்போதும் போல் ஹாஸ்டலிலிருந்து பழைய துணிகளை எல்லாம் சேகரித்து, தான் செல்கின்ற அந்த அனாதை ஆசிரமத்திற்குச் சென்று அங்கிருந்தவர்களைப் பார்த்தபோது, மனதில் சொல்லொணாத ஒரு அமைதி படர்வதை உணர்ந்தாள் நிலா.

அந்த ஆசிரமத்தின் பதினைந்தாவது வருட நிறைவு விழாவிற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

பரத நாட்டியம் தெரிந்தவளென்பதால், சிறுவர் சிறுமியருக்கு நடனப் பயிற்சியளிக்கும் பொறுப்பை அவள் ஏற்றிருந்தாள்.

அன்று மதியம் முழுவதும் அவர்களுடனிருந்து விட்டு, மாலையில் கிளம்பிய போது, ஆசிரம நிர்வாகி அவளைத் தேடி வந்தார்.

அவருடன் வந்த நிரூபனைப் பார்த்ததும், மனதில் ஒரு விதப் பதட்டமும் விதிர்ப்பு நிலையும் கை கோர்க்க, அவனும் அங்கு அவளை எதிர்பார்க்கவில்லை என்பதை அவன்

முகமே கூறியது.

"நிலா... இவர் நம்ம ஆசிரமத்துக்கு ரெகுலரா டொனேட் பண்றவர்... மிஸ்டர் நிருபன்! நீங்க வேலை செய்யற காலேஜிலக் கூட, இவங்கப்பா தான் சேர்மன்! இவங்க நிறைய தொழில் ஸ்தாபனங்களை நடத்திட்டு வராங்க... நம்ம ஆசிரமத்து விழாவிலக் கூட நிருபன்தான் சீஃப் கெஸ்ட்! எம்.பி.ஏ. முடிச்சிருக்காரு... வளர்ந்து வரும் ஒரு பெரிய தொழிலதிபர்!" என்று அறிமுகப்படுத்தினார்.

ஆச்சர்யமும், குழப்பமும் மேலிட, "வணக்கம் சார்..." என்று புதிதாய் அறிமுகம் செய்து கொள்பவளைப் போல் அவள் கைகுவிக்க, விழியோரம் புதிதாய் தடம் பதித்த ஒரு குறும்புப் புன்னகையுடன், அவனும் பதில் வணக்கம் கூறினான்.

பிறகு, வாராவாரம் ஞாயிற்றுக் கிழமைகளில் இல்லத்திற்கு சென்று அவள் நடனப்பயிற்சி அளிக்க ஆரம்பிக்க, விழாநாளும் நெருங்கி வந்தது.

அன்று, கல்லூரிக்கு விடுமுறை எடுத்துக் கொண்டு, காலையிலேயே சென்று பயிற்சிகளை ஆரம்பித்தவளுக்கு உதவியாய், அவளுடைய ஹாஸ்டல் தோழி கன்யாவும் வந்திருந்தாள்.

மாலையில், அங்கிருந்த பெண்கள் அனைவருமாகச் சேர்ந்து, சிறுவர், சிறுமிகளுக்கு ஒப்பனை செய்து தயார்படுத்தினர். பாட்டு, நாட்டியம், நாடகம், வெஸ்டர்ன் நடனம் என்று நிறைய நிகழ்ச்சிகள் இருந்தன.

மாலையில் இருவரும் தயாராகி வரவேற்பில் நின்றபோது, நிருபன் தன் தாய், தந்தையுடன் காரில் வந்து இறங்கினான்.

அங்கு நிலாவைக் கண்ட மனோகரி மகிழ்ச்சியுடன் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, "நீ எப்படிம்மா இங்கே...?" எனும் போதே, நிர்வாகி வேகமாக வந்து அவர்களை வரவேற்றார்.

"வாங்க சார்... வாங்கம்மா! உங்களுக்கு நிலாவைத் தெரியுமா? நம்ம ஆசிரமத்துக்கு உங்களை மாதிரியே நிறைய உதவிகள் செய்யற ஒரு வாலண்டியர் அவங்க..." என்றபடி அழைத்துச் சென்றார்.

நிருபனின், கம்பீரப் பேச்சிற்குப் பிறகு விழா நிகழ்ச்சிகள் இனிதாக நடந்து முடிந்து கிளம்பும் போது, மனோகரி பரதநாட்டியம் ஆடிய குழந்தைகளைத் தனியே அழைத்துப் பாராட்டினார்.

"நானும் ஒரு காலத்துல பரதம் கத்துக்கிட்டவதான்... அதனால சொல்றேன். ரொம்ப நல்லாருந்ததும்மா உங்களோட நாட்டியம்... இவ்வளவு அருமையா யார் சொல்லித் தந்தாங்க...?"

ஆவலுடன் அவர் கேட்க, "நிலாக்காதான்..." என்று ஒட்டு மொத்தமாக அவளைக் கைகாட்டினர் மாணவிகள்.

பிரமிப்புடன் நிமிர்ந்தவர், "நிலா... உனக்கு நாட்டியம் ஆடத்தெரியும்னு சொல்லவே இல்லையே...?" ஆர்வத்துடன் கேட்டார்.

"ம்... தெரியும்மா! சங்கீதாவும் நானும்தான் ஒண்ணாக் கத்துக்கிட்டோம்... ஸ்கூல் படிக்கிறப்போ கத்துக்கிட்டது! ரெகுலரா பிராக்டீஸ் பண்றதில்லை. வீக் எண்ட் ஆனா இங்கே வந்து சொல்லித் தருவேன்." மிருதுவான குரலில் கூறினாள்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு. நீ, ஒரு நாள் நம்ம வீட்டுக்கு வந்து எனக்கு சில நடனங்கள் ஆடிக் காண்பிக்கணும்..."

"நிச்சயமா... நேரம் கிடைக்கறப்ப வரேம்மா!" என்றபடி அவர்களிடம் விடைபெற்றாள் நிலா.

அவள் சென்ற வழியை, நிருபனின் விழிகள் நேசத்துடன் தொடர்ந்தன.

## 8

**நா**ட்கள் கலைந்து போகும் மேகமாய் விரைந்து சென்றன. ஒரு ஞாயிறன்று நிலா ஊருக்குப் போன் செய்து பேசிய போது, குறிஞ்சியின் குரல் பெரிதும் நெகிழ்ந்திருந்தது.

"அக்கா... குழந்தை வயித்தில அசைய ஆரம்பிச்சிருக்கு... நீ ஒரு தடவை இங்க வந்துட்டுப் போறியா? அப்பாவும், உன் நினைப்பாவே இருக்காங்க! நான், உன்கிட்ட எத்தனை தடவை புரியாம சண்டை போட்டிருக்கேன்... நீ தானே எப்பவுமே அனுசரிச்சிப் போவே... இப்ப நினைச்சா ரொம்பக் கஷ்டமா இருக்கு! எவ்வளவு சின்ன பிள்ளைத்தனமா நடந்திருக்கேன்.. சே!" என்ற போது சட்டென்று ஆடிப் போனது மனது!

"குறிஞ்சி... பழசை எல்லாம் நினைச்சி மனசைக் குழப்பிக்கக் கூடாது. நீ சின்னவள்ளா அடம் பண்ணுவே... நான் பெரிய பொண்ணா விட்டுக் குடுத்துடுவேன். இது எல்லா வீட்டிலயும் நடக்கறதுதானே! உடம்பைப் பாத்துக்க... இந்த மாதிரி எதையாவது நினைச்சி மனசையும் உடம்பையும் கெடுத்துக்கக் கூடாது... புரிஞ்சுதா? ஆனந்தை நான் விசாரிச்சேன்னு சொல்லு!" என்றவள் அப்பாவிடம் வெகு நேரம்

பேசிவிட்டே வைத்தாள்.

குறிஞ்சியின் மாற்றம் பெரும் சந்தோஷத்தை மீட்டுத் தர, அந்த சுகமான லயத்திலேயே நாட்கள் இனிதாய் கடந்தன.

அடுத்த மாதத்தில் ஒரு நாள் 'லயன்ஸ் கிளப்' நடத்திய ரத்ததான முகாமிற்கு சென்றிருந்த போது தான், மீண்டும் அங்கு நிருபனை சந்தித்தாள் நிலா.

அங்கு சென்றபோது, எதிர்பாராத விதமாக அவளைக் கண்டதும், "ஹலோ... என்ன, நீங்க இங்கயும் வந்திட்டீங்களா? நான் போற இடத்துக்கெல்லாம் கரெக்டா வந்திடறீங்க... எப்படியாவது என்னை இம்ப்ரெஸ் பண்ணிட லாம்னு பாக்கறீங்களா?" நிருபன் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி கேலியாகக் கேட்டான்.

மனதில் சுள்ளென்று மூண்ட கோபத்துடன், "ஏன்... அதையே நானும் திருப்பிச் சொல்ல லாம் இல்லையா? என்னை நீங்க தொடர்ந்து வர்றதா...?" சீறினாள் நிலா.

"அந்தத் தப்பை மட்டும் நான் செய்யவே மாட்டேன்னு உங்களுக்கே தெரியும். ஏற்கெனவே ஒரு தடவை சூடு பட்ட அனுபவம் இருக்கு... நான் மனுஷனே இல்லை, மிருகம் மாதிரின்னு ஒரு குத்து மதிப்பா என்னைப் பத்தி கணிச்சி சொல்லி இருக்கிங்களே...

நல்லவேளை! மனுஷன் பாதி... மிருகம் பாதின்னு வேற ஸ்டைல்லே சொல்லலை யேன்னு, நானே சந்தோஷப்பட்டுட்டு இருக் கேன்... ஆனா இன்னிக்கு என் பேட்ஜைப் பாத்துட்டு, நாம நினைச்ச மாதிரி இவன் 'லயன்'தான்னு நீங்க நினைச்சீங்கன்னா, அதுக்கு நான் பொறுப்பில்லை!" சீண்டலாகக் கூறினான்.

அவன் கூறியதைக் கேட்டதும், சட்டென்று தன்னையறியாமல் புன்னகைத்த இதழ்களைக் கடித்து அடக்கியவள், பதிலேதும் கூறாமல் வேகமாகத் திரும்பினாள்.

"ஒரு நிமிஷம்! நாங்க தான் இதை ஆர்கனைஸ் பண்றோம்... ஒரு லெக்சரருக்கு இங்கே என்ன வேலை? எப்படி ரத்தம் குடுக் கறதுன்னு பாடம் நடத்த வந்தீங்களா?" குறும்புடன் கண்ணோரங்கள் சுருங்கக் கேட் டான்.

"இல்லை... ப்ளட் டொனேட் பண்ண வந்தேன்" அழுத்தமான குரலில் கூறிவிட்டு உள்ளே சென்றாள் அவள்.

எல்லோரிடமும் இயல்பாகப் பழக மன மின்றி, ஒரு வித இறுக்கத்துடனிருக்கும் தான், அவளிடம் மட்டும் வெகு நாட்கள் பழகிய

## நாகர்கோவிலுக்கு சிறப்பு சேர்க்கும்

**க**ன்னியாகுமரி மாவட்ட தலைநகர் நாகர்கோவிலுக்கு அந்த பெயர் வரக் காரணம் என்ன தெரியுமா? அங்கு உள்ள நாகராஜா கோவில் தான்.

மிகவும் எழில் கொஞ்சும் இயற்கை சூழ்நிலையில் அமைந்து உள்ள நாகராஜா கோவில் மிகவும் பழமையானதாகும்.

கோவிலில் நாகராஜா் சந்நிதியின் நுழைவாயிலில் இரு பக்கங்களிலும் சுமார் 7 அடி உயரமுள்ள கல்லால் ஆன இரு நாகர் சிற்பங்கள் உள்ளன. வாலை சுழற்றி அமர்ந்த நிலையில் ஐந்து தலைகளைக் கொண்டு அமைந்துள்ள இச்சிற்பங்கள் இக்கோவிலின் பழமையைக் காட்டுகின்றன.

வனைப் போல் உணர்வது, அவனுக்கே புதிராய் தோன்றியது.

உள்ளே சென்று ரத்தம் கொடுத்தபடிப் படுத்திருந்த நிலாவின் மனதிலும் அதே எண் ணங்கள்! எவரையும் புண்படுத்திப் பேசிப் பழக்கமின்றி மென்மையான சுபாவத்துடன் இருப்பவள், அவனிடம் மட்டும் முரண்படுவது அதிசயமாகப்பட்டது.

அந்த வாரம் வீட்டிற்கு ஃபோன் செய்து பேசிவிட்டு, நீலாம்பரியிடமும் பேசும் போது தான், இரண்டு நாட்களில் ஒரு திருமணத்திற் காக தான் சென்னை வரப் போவதாகக் கூறினார் அவர்.


அதைக் கேட்டதும் மகிழ்ச்சியுடன், "நீங்க கட்டாயம் என்னை வந்து பாக்கணும்மா... இல்லைன்னா, நீங்க எங்கே தங்கி இருப்பீங் கன்னு சொல்லுங்க... நானே வரேன்!" என்றாள் நிலா.

"நான் எங்க அக்கா வீட்டில தான் இருப் பேன் நிலா... கட்டாயம் உன்னை வந்து பாக் கறேன்." என்று கூறி அவளை நலம் விசாரித்து விட்டு வைத்தார்.

அந்த ஞாயிறன்று, தலைகுளித்து விட்டு உலர வைத்தபடி ஒய்வாக அமர்ந்து பாட்டு கேட்டுக் கொண்டிருந்தபோது, ஆயாம்மா அவளைத் தேடி வந்தார்.

"நிலாம்மா... உங்களைப் பார்க்க யாரோ

# நாகராஜா கோவில்



நாகர்கோவிலில் மிகப் பழங்காலத்திலேயே நாகர் வழிபாடு உண்டு என்பதையும் இந்த கோவில் விளக்குகிறது.

விசிட்டர்ஸ் வந்திருக்காங்க..." என்ற போது, ஒரு வேளை நீலாம்பரியாக இருக்குமோ என்ற ஆவலுடன் சென்ற போது, அங்கு அவருடன் மனோகரியும் அமர்ந்திருந்தார்.

"வாங்கம்மா..." என்று வரவேற்றதும் உற்சாகத்துடன் எழுந்து வந்த நீலாம்பரி, "நிலா! இப்போ நீ மறுப்பு சொல்லாமக் கிளம்பி என்னோட வரணும். மதியம், உனக்கு எங்க எல்லாரோடயும் தான் சாப்பாடு! உனக்கு வேற எதுவும் வேலையில்லையே...?" கேட்டார் அவர்.

"இல்லைம்மா... ஆனா..." எனும் போதே "அதெல்லாம் எந்த மறுப்பும் சொல்லக் கூடாது. நீ உடனே கிளம்பி எங்களோட வரே...!" உரிமையுடன் முடித்தார் மனோகரி.

சரியென்று சம்மதித்தவள், அவர்களுக்கு கூல்டிரிங்ஸ் வாங்கி வரும்படி ஆயாவை அனுப்பிவிட்டுத் தன் அறைக்குச் சென்று தலையைத் தளரப் பின்னி, புதிய சுரிதார் ஒன்றை அணிந்து கண்ணாடியில் பார்த்த போது, பல வயது குறைந்து போய் டீன்ஏஜ் பெண் போலத் தெரிந்தாள்.

காட்டன் புடவையும், கொண்டையுமாகத் தினமும் கல்லூரிக்குச் செல்லும் போது, ஏதோ பெரிய பெண்மணியைப் போல் தோன்றும். ஆனால் இன்று இருபத்தைந்து வயதில், ஐந்து வயதை அனாயாசமாகக் கழித்து விடலாம் போலிருந்தது.

தயாராகி வந்தவளைக் கண்டதும், கூல்டிரிங்ஸை அருந்தி முடித்து விட்டு இருவரும் புறப்பட, அவர்கள் வீட்டில் நிருபன் இருப்பானோவென்று தயக்கமாக இருந்தது.

ஆனால், நல்லவேளையாக அவன் வீட்டில் இல்லை. பிசினஸ் விஷயமாக அவன் வெளியில் சென்றிருப்பதாகக் கூறிவிட்டு மனோகரி ஆரஞ்சு ஜூஸ் கொடுத்தபோது, சமையலின் நறுமணம் இனிதாய் வீடு முழுவதும் பரவியது.

பிறகு, வீட்டை சுற்றிக் காண்பித்தபடி இரு பெண்மணிகளும் அவளை மாடிக்கு அழைத்துச் சென்றனர்.

## 9

மாடியிலிருந்த பெரிய வரவேற்பறைக்குச் சென்றதும், நீலாம்பரி அவளிடம் திரும்பி, "நிலா! உன்னோட பரத நாட்டியத்தைப் பாக்கணும்னு அக்கா ரொம்ப ஆசைப்படறாங்க... நானும் பாத்து ரொம்ப நாளாச்சு... ம்... எங்களுக்காக ஆடுவியா?" ஆசையுடன் கேட்டார்.

மறுக்க இயலாமல் முறுவலித்தவள், "பாட்டு வேணுமேம்மா... அதான் யோசிக்கிறேன்" என்றதும், "என்ன பாட்டு வேணும்னு சொல்லு... அக்கா சிடியிலப் போட்டு விடுவாங்க" என்றதும் சில பாடல்களை சொல்லி அவை இருக்கிறதாவென்று கேட்டாள்.

அவள் கேட்ட சில பாடல்கள் அவரிடம் இருக்க, பாரதியாரின், 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா...'வை சிடியில் சுழல விட்ட போது, துப்பட்டாவை எடுத்து இடுப்பில் இறுகக் கட்டியபடி ஆடத் துவங்கினாள் நிலா.

எதிரிலிருந்த சோபாவில் அமர்ந்து பார்க்க ஆரம்பித்த இருவருக்கும், அவளின் நடனம், தங்களுடைய பால்யநாட்களை நினைவு படுத்தின.

நிலாவின் இயல்பான அடவுகளும், ஜதிகளும், அழகான அபிநயங்களும், அவர்களுடைய மனதை மெல்லக் கவர்ந்து சிலிர்க்கச் செய்தன.

அவள் முடித்தபோது, உணர்ச்சிவசப்பட்டு நெக்குருகிப் போயிருந்த இருவரும் மெதுவாக எழுந்து பாராட்ட, திடீரென்று தனியாக ஒரு கைத்தட்டல் மாடிப்படிகளிலிருந்து கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பினால், பிரமித்த பார்வையுடன் அங்கு நின்றிருந்தான் நிருபன். அவள் ஆட ஆரம்பிக்கும்போதே வந்து

விட்டவன், அவளுடைய கவனத்தைக் கலைக் காமல் அங்கேயே நின்று, அதில் ஆழ்ந்து லயித்து விட்டான்.

அவள் முடித்ததும் தன்னையறியாமல் கை தட்டியவன், "யாரும்மா இவங்க? குறிஞ்சிக்கு ஒரு தங்கை இருக்கறதைப் பத்தி நீங்க சொல்லவே இல்லியே சித்தி!" ஒரு நமட்டுச் சிரிப்புடன் கேட்டபடி உள்ளே வந்தான்.

"ஏய்... என்ன? சுரிதார் போட்டதும் நம்ம நிலாவை அடையாளம் தெரியலையா? ரொம்ப சின்னப் பொண்ணாட்டம் தெரியறா... இல்லை?" நீலாம்பரி கேட்டபோது, இனம் புரியாத ஒரு உணர்வு அவளை ஆட்கொண்டது.

பிறகு நிலாவிடம் திரும்பிய நீலாம்பரி, "இன்னும் ஒரே ஒரு டான்ஸ் நிலா... உங்களோட ஸ்பெஷல் பாட்டு 'தாயே யசோதா...' நீயும் சங்கீதாவும் சேர்ந்து ஆடுவீங்களே! எனக்காக ...ப்ளீஸ்!" கலங்கிய விழிகளுடன் கேட்டபோது, சங்கீதாவின் நினைவில் அவளுடைய இதயமும் கசிந்தது.

இன்று, அவள் இங்கு இல்லை! நிலாவே யசோதாவாய்... கண்ணனாய்... கண்ணனைக் குறை கூறும் ஆயர்குலப் பெண்களாய்!

மெதுவாகக் கசிந்த அந்தப்பாட்டிற்குத் தகுந்தாற்போல் மாறிமாறி அபிநயம் பிடித்த போது "அந்த வாசுதேவன் இவன்தான்..." என்ற வரிகளில் பார்வை எதிரே செல்ல, அந்த நொடி நிருபன், தன் ஒற்றைப் புருவத்தை குறும்புடன் ஏற்றி இறக்க, ஒரு கணம் அவள் கால்களிலும் இதயத்திலும் தாளம் தப்பியது.

பிறகு, "அந்த சுந்தர முகத்தைக் கண்டு சிந்தையும் மயங்கும் நேரம், இந்திரஜாலங்கள் போல ஈரேழுலகம் காட்டினான்" என்று கடைசியாக அபிநயம் பிடித்து நிமிர்ந்தபோது, நிருபனின் விழிகள் பல உணர்ச்சிகளுடன் ஒரு வித லயிப்பில் கிறங்கிப் போயிருந்தன.

பாடலுக்கேற்றாற்போல், அவள் விழிகள் கோபமாக அதட்டியபோதும்... மாயக்கண்ணனின் விஷமப் பார்வையைக் குறுகுறுப்பாய் தன் விழிகளில் கொண்டு வந்த போதும்... இப்படி செய்யக்கூடாது என்று தவிப்பாய் கெஞ்சியபோதும்... குறும்புக் கண்ணனாய் அக்கம் பக்கம் திருட்டுப்பார்வை பார்த்த போதும்...

உணர்வுகள் உருக ஒரு தாயாய் அவள் நெக்குருகியபோதும், விழியெடுக்க முடியாமல் அவளையே பார்த்திருந்த நிருபனுக்கு, இதயமெங்கும் புதிதாய் ஒரு பரவசம்... புதுப் புனலில் மலர்ந்த மலர்களாய்!

நாட்டியத்தை முடித்து அவள் அமர்ந்த போது, "என்ன அற்புதமான அபிநயங்கள் நிலா! அந்தக் கண்ணனை, யசோதாவை, ஆயர் குலப் பெண்களை நேரிலப் பாத்த மாதிரி ஒரு உணர்வு! ரொம்ப சந்தோஷம்மா... இது ஒரு தெய்வீகக் கலை... எல்லோருக்கும் அமையாது! வரப்பிரசாதம் மாதிரி சிலருக்குத்தான்... நீ ஏம்மா இப்ப ப்ராக்டீஸ் பண்றதில்லை?" ஆர்வத்துடன் கேட்டார் மனோகரி.

"எங்கேம்மா? காலையில எழுந்து காலேஜுக்குப் போயிட்டு வந்தா டயர்டா ஆயிடும். தினமும் எக்சர்சைஸ் மட்டும் பண்ணுவேன். ஹாஸ்டல்லே செகண்ட் ஃப்ளோர்ல ரூம்... எங்கே ஆடறது? ஊருக்குப் போனா, அப்பா ஆடச் சொல்லி பாத்து ரசிப்பாங்க... இந்த தடவை குறிஞ்சியோட பிரச்சினையால, அந்த நினைப்பே வரலை." மென்மையான முறுவலுடன் கூறினாள்.

திடீரென்று, அவளை இடைமறித்தது நிருபனின் குரல்!

"கத்துக்கிட்ட வித்தையை வீணாக்கி துருப் பிடிக்க விடக்கூடாது மிஸ் நிலா! என் நண்பனோட அம்மா, பெரிய டான்ஸ் ஸ்கூல் ஒண்ணு நடத்தறாங்க... அதுக்கு டீச்சர் வேணும்னு சொன்னாங்க... நீங்க வீக் எண்ட்லே போயி கிளாஸ் எடுக்கலாமே..." அவன் கூறியபோது, இரு பெண்மணிகளுக்குமே வியப்பு ஏற்பட்டது.

அவனுக்கு பதிலேதும் கூறாமல் மொழி புரியாதவளைப் போல் நின்றிருந்த நிலாவைத் தன்னருகில் அமர்த்திக் கொண்டார் மனோகரி,

அவர், "சரின்னு சொல்லும்மா! நல்ல விஷயம்தானே? நாம கத்துக்கிட்ட ஒரு கலையை மத்தவங்களுக்கும் சொல்லிக் குடுத்தாதானே, அதுக்கு ஒரு அர்த்தம் கிடைக்கும்..." என்ற போது மறுக்க முடியாமல் தலையசைத்தாள் அவள்.

பிறகு, சாப்பிட்டு முடித்து விட்டு பேசிக் கொண்டிருந்த போது, போன் ஒலிக்க அவளருகில் இருந்ததால் நிலாவே எடுத்தாள்.

எடுத்தவுடனே, "நாங்க கருணை இல்லத்துலருந்து பேசறோம்மா... மிஸஸ் மனோகரியம்மா இருக்காங்களா? பிரபாவோட ரெண்டாவது ஆண்டு நினைவு நாள் வருது... அதப்பத்தி அவங்களோடப் பேசணும்" என்றார் எதிர்முனையில் பேசியவர்.

"ஒரு நிமிஷம்..." என்றவள், "பிரபான்னு யாரையோ பத்திப் பேசணுமாம். கருணை இல்லத்துலேருந்து கூப்பிடறாங்கம்மா"

என்றாள்.

மறு நொடியே, அனைவரின் முகமும் மாறி ஒரு வித இறுக்கத்தைத் தத்தெடுக்க, கனமான திரையால் சூழப்பட்டது போன்ற ஒரு அசாத்திய அமைதி அங்கு வந்தது.

நிருபனின் முகமும் இறுகிவிட, மனோகரி பேச ஆரம்பித்த போது, "பிரபா, எங்க வீட்டுப் பொண்ணுதான் நிலா!" என்றார் நீலாம்பரி மெல்லிய குரலில்.

அந்த சூழ்நிலையே ஒரு வித இறுக்கத்தைத் தர "அப்ப நான் கிளம்பறேம்மா" என்ற படி விடைபெற்றாள் நிலா.

நீலாம்பரியும், நிருபனும், அவளை வாயில் வரை வந்து டிரைவருடன் காரில் வழியனுப்ப, செல்கின்ற வழி முழுவதும் அந்தப் பிரபாவிற்கு என்னாயிற்று என்ற கேள்வியே நெருடலாய் நெஞ்சுக்குள் வியாபித்திருந்தது.

இரண்டு வருடங்களாக மனநோய் முற்றிய நிலையிலிருந்த பிரபா, மனநல மருத்துவமனை யிலேயே இறந்து போனதும், அடுத்த வாரம் அவளுக்கு நினைவு நாள் வருவதும் நிலா அறியாத ஒன்று.

அன்று, ஏகாம்பரத்தின் குடும்பத்தினர் கருணை இல்லத்திற்குச் சென்று பிரபாவின் நினைவாக உணவு வழங்குவது வழக்கம்... அதனால் அதை நினைவுபடுத்துவதற்காகவே, அங்கிருந்து போன் செய்திருந்தனர்.

ஒரு வாரம் கழித்து, ஊருக்குக் கிளம்பும் பொழுது நீலாம்பரி அவளிடம் போன் செய்து பேசினார். "பிரபாவுக்கு இன்னைக்கு நினைவு நாள் முடிஞ்சிடுச்சிம்மா... நான் நைட் ஊருக்கு கிளம்பறேன்" என்றார்.

"பிரபாவுக்கு என்னாச்சும்மா...?" தயக்கத்து டன் அவள் கேட்க, "கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்னாடி சில மனுஷ மிருகங்கள் அவளை சூறையாடினதாலே, மனச்சிதைவு நோய்க்கு ஆளாகி, ரெண்டு வருஷம் மெண்டல் அசைலத்துல இருந்து இறந்துட்டாம்மா! ஏன் இப்படி சாபம் மாதிரி எங்க ரெண்டு குடும்பத்துலயும், பிள்ளைங்களோட வாழ்க்கை இப்படி வீணாப் போச்சுன்னு நான் கடவுள் கிட்டக் கேக்காத நேரமே இல்லை. ஆனா அவர் பதில்தான் பேசறதேயில்லை" உடைந்து போய் கூறினார்.

"கவலைப்படாதீங்கம்மா" மென்குரலில் கூறியவளிடம், "சரி நிலா! நான் ஊருக்குப் போனதும்... உங்க வீட்டில எல்லாரையும் நீ விசாரிச்சதா சொல்லிடறேன்" என்ற படி போனை வைத்தார்.

அவர் கூறியதைக் கேட்டவுடன், ஏன் பெண் ணென்று பிறந்தோம்... சோக நினைவுகளை சுமந்து வாழ்வதற்கா... என்ற சுயபச்சாதாபம் மனதிற்குள் ஊடுருவியது.

அன்று தாமதமாக வந்த ரூம்மேட் லதாவும் மிகவும் துக்கத்திலிருந்தாள். ஏன் என்று விசாரித்த போது, தன் தோழி பிரபாவின் இறந்த நாள் என்பதால் அவள் வீட்டிற்கு சென்று வருவதாகக் கூறினாள்.

வேகமாக எழுந்து அமர்ந்த நிலா, "பிரபா வுக்கு நடந்ததை, யார் கூடயாவது, உன்னால ஷேர் பண்ணிக்க முடியும்னா என்கிட்ட சொல்லேன்..." என்று கேட்ட போது சோகமாக இருந்த லதாவின் நினைவுகள் பிரபாவை நோக்கிச் சென்றன.

## 10

திவ்யபிரபா...!

கல்லூரிப் படிப்பை முடித்ததும், வாழ்க்கையைப் பற்றிய வண்ணக் கனவுகளுடன் எதிர்காலப் பாதை யில் அடியெடுத்து வைத்த போதுதான், அவளுடைய திருமணம் முடிவாயிற்று.

அவளுடைய அப்பா, தன் நண்பரின் மகனையே திருமணம் பேசி முடித்தபோது, மனதில் உற்சாகத்துடன் அழைப்பிதழ்களை தோழிகளுக்குக் கொடுக்க ஆரம்பித்தாள் அவள்.

திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, தன் தோழி லதாவின் வீட்டிற்குச் சென்று பத்திரிகை கொடுத்துவிட்டுக் காரில் திரும்பி வரும் போது தான், அவளுக்கு அந்த விபரீதம் நிகழ்ந்தது.

திடீரென்று வழியில் கார் நின்று விடவே, இருட்டிப் போயிருந்த அந்த இடத்தில் தனி யாக நிற்கவும் அவளுக்கு பயமாக இருந்தது. நகரை விட்டுத் தள்ளியிருக்கும் புறநகர்ப் பகுதி என்பதால், அங்கு வாகன நடமாட்டமும் இல்லை.

அருகில், கட்டி முடிக்கப்படாமல் நிறுத்தப் பட்டிருந்த ஒரு கட்டிடத்திற்குள் வெளிச்சம் தெரிந்ததால், யாரையாவது உதவிக்கு அழைக்கலாமென்று அங்கு சென்றாள்.

உள்ளே போனபோது, அங்கு இரண்டு ஆண்கள் ஒன்றாக அமர்ந்து குடித்துக் கொண் டிருப்பது தெரிந்து, அருவெறுப்புடன் அவள் வெளியில் செல்லத் திரும்பியபோது தான் அவள் தோளில் ஒரு கை அழுத்தமாக விழுந்தது.

"என்னம்மா... தொழிலுக்குப் புதுசா? வந்துட்டு உடனே திரும்பிப் போறே! நான்

வரதுக்குள்ளே அப்படி என்ன அவசரம்?" என்றவனிடமிருந்தும் ஒரு வித துர்நாற்றம்!

"இல்லை சார்... என் கார் ரிப்பேர் ஆயிடுச்சி... உதவி கேக்கலாம்ன்னு வந்தேன். நான் வரேன் சார்" அங்கு நிலைமை சரியில்லாததை உணர்ந்து, அவள் விலகி வேகமாக வெளியே செல்ல முயன்றபோது, அந்த இரண்டு பேரும் அவளருகில் வந்திருந்தனர்.

"என்னடா... வீறாப்பா போனே... யாரும் கிடைக்கலையா?" ஒருவன் கேட்கும் போதே, "தோ... கிளியாட்டம் இவதான் இருக்காளே... அப்புறம் எதுக்கு இன்னொருத்தி" என்றபடி ஒருவன் அவளுடைய தோளைப்பற்றி இழுக்க, அவள் தப்பித்து ஓட முயற்சிக்க அந்த நிமிடம் வேட்டைப் புலிகளிடம் மாட்டிக் கொண்ட மானைப் போல் ஆனாள் பிரபா.

எவ்வளவு கத்தியும் கதறியும், உதவிக்கு யாரும் வர வழியின்றிப் போக, அவளுடைய பெண்மையை அழித்து, அந்த மலரைக் கசக்கி நுகர்ந்து போட்டு விட்டுச் சென்றன, அந்த மிருகங்கள்!

போதை எனும் அரக்கன், அவர்களின் மனிதத்தன்மையை அழித்து வக்ரமாக்கியிருக்க, கோரத்தாண்டவமாடிவிட்டு அவர்கள் தடுமாறியபடி சென்று விட, அந்தப் பாழடைந்த கட்டிடத்திற்குள் அவளுடைய விசும்பல்களும், கண்ணீரும் மட்டுமே எதிரொலித்தன.

வெகுநேரம் கழித்து, உடலும் மனமும் மோக முட்களால் கிழிந்து நைந்து போயிருக்க, தாங்க முடியாத உயிர் வேதனையுடன் கசங்கிக் கிடந்த உடையை எடுத்து அணிந்து கொண்டவள், எங்கு செல்கிறோமென்றே புரியாமல் பிரமை பிடித்தவளாய் வந்த வழியே சென்று, தன் தோழியின் வீட்டுக் கதவைத் தட்டினாள் பிரபா.

அந்த நேரம், வானம் கூட அவள் நிலை கண்டு அழுவதைப் போல் கண்ணீரை மழையாகப் பொழிய ஆரம்பித்தது.

பருந்துகளால், சிறகுகளை சிதறடித்த சிறு பறவையாய் குறுகிச் சிலிர்த்து நின்றிருந்தாள் அவள்.

**11**

**அ**ழைப்பு மணி ஒலித்ததும், கதவைத் திறந்த லதா, பிரபாவின் தோற்றத்தைக் கண்டதும் மிகவும் பயந்து போனாள்.

ஆனால், பெரும் விம்மல்களுக்கிடையில் அவள் கூறிய விவரங்களைக் கேட்டதும் மனதளவில் பெரிதும் நொறுங்கிப் போனாள்.

லதாவின் பெற்றோரும், அந்தப் பெண்ணின் நிலை கண்டு உறைந்து போயினர். மழையில் நனைந்த சிறு புறாவாய் குறுகி நின்றவளை அணைத்து ஆறுதல் கூறியவர்களுக்கு ஒரு கணம் என்ன செய்வதென்றே புரியவில்லை.

போலீஸுக்கு உடனே செல்லலாமென்றாலோ, அவளுக்கு இன்னும் பத்து நாட்களில் திருமணம். பதறிப் போன லதா அவளை உடை மாற்றிக் கொள்ளச் செய்ய, வெறித்த விழிகளுடன் நின்றிருந்த அவள் கோலத்தைப் பார்த்தபோது, மனம் தாங்காமல் தவித்துப் போனாள்.

உடனே, அவளுடைய வீட்டிற்கு ஃபோன் செய்து பிரபாவின் அம்மா, அப்பாவை தங்கள் வீட்டிற்கே வரவழைத்தாள்.

பெண்ணைப் பார்த்ததுமே, அவளிடமிருந்த வித்தியாசம் புரிய, எல்லா உண்மைகளையும் அறிந்த பிறகு இருவருமே நொறுங்கிப் போய் நடைப்பிணம் போல் ஆகிவிட்டனர்.

தங்களுடைய பெண்ணின் வாழ்க்கை, இப்படி ஒரு கேள்விக்குறியாகுமென்று சத்தியமாக அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. அவளிருந்த நிலை கண்டதும் உடைந்து போய் நிலைகுலைந்து நின்றவர்களிடம் லதாவின் தந்தை தான் பக்குவமாகப் பேசினார்.

"இது எங்களுக்கும் பெரிய இடிதான்... ஆனா இனிமே நடக்க வேண்டியதை பாக்க

## சாலையில் இயக்கப்பட்ட
# அதிசய ரெயில்!

**உ**லகம் முழுவதும் ரெயில்கள் தண்டவாளத்தில் மட்டுமே ஓடக் கூடிய வசதியைக் கொண்டு இயங்கி வருகின்றன. ஆனால், சர்வதேச அளவில் எந்த நாட்டிலுமே நடந்திராத ஒரு அதிசய சம்பவம் காஷ்மீரில் நடந்துள்ளது.

பனி நிறைந்த மலைகளும், ஆழமான பள்ளத்தாக்குகளும் நிறைந்த காஷ்மீரில் தேசிய ரெயில் திட்டத்தின் கீழ் ரூ.4700 கோடி செலவில் காஜிகுண்ட் - ஸ்ரீநகர் பாராமுல்லா வரையில் ரெயில் தடம் அமைக்கும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. இந்நிலையில்,

ணும் இல்லையா? ஒண்ணு...போலீஸுக்குப் போகணும்... இல்லைன்னா கல்யாணம் முக்கியம்னு நினைச்சீங்கன்னா, இதை இந்த வீட்டிலயே மறந்துடுங்க... எனக்கும் ஒரு பொண்ணு இருக்கா! எங்க வீட்டுக்கு வந்துட்டுப் போகும்போது இப்படி ஆயிடுச்சேன்னு நாங்களும் கலங்கிப் போயிருக்கோம்... இதை நாங்க யார்கிட்டயும் சொல்லப்போறதில்லை.

பேசாம, நிச்சயம் பண்ணின மாதிரி இந்தக் கல்யாணத்தை நடத்திடுங்க... அதுதான் சரின்னு எனக்குத் தோணுது... இது ஒரு விபத்து தான்! போலீஸுக்குப் போனா அப்புறம் இவ வாழ்க்கையில கல்யாணம்கிறதையே மறந்திட வேண்டியது தான். பத்திரிகையிலயும், மீடியாவிலயும் போட்டோவைப் போட்டு நார்நாராக் கிழிச்சிடுவாங்க. இதை விட அது இன்னும் ரணமா வலிக்கும்... யோசிச்சு முடிவெடுங்க" என்றார் நெகிழ்ந்த குரலில்.

திடீரென்று ஒரு குரல் இடைமறித்தது. "அப்பா! இதைப் பத்தி நான் அவர்கிட்டப் பேசணும்... உடனே!" நடுங்கும் குரலில் கூறிய பிரபாவை கதறியபடி அணைத்துக் கொண்டார் அம்மா.

"வேண்டாம்மா! லதா அப்பா சொல்ற மாதிரி, இது நமக்குள்ளேயே இருக்கட்டும். மகாத்மா காந்தி சொன்னது போல, உன் சுய விருப்பமில்லாம நடந்த அந்தத் தப்புக்கு நீ எப்படி பொறுப்பாளியாக முடியும்...நீ தூய்மையானவதான்டா!" இறுகிய குரலில் கண்ணீருடன் கூறினார் அவளுடைய தந்தை.


"அப்பா...ப்ளீஸ்! அதை என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவர்தான் சொல்லணும்...யாரையும் ஏமாத்த என்னால முடியாது... இந்த நினைவுகளே என்னை அணுஅணுவாக் கொன்னுடும்." என்றாள் பிடிவாதமாக.

வீட்டிற்குச் சென்றதும் விவரமறிந்து துடித்த அவளுடைய அண்ணன் உடனே மாப்பிள்ளையை வரவழைத்தான். அங்கு வந்த மாப்பிள்ளையும் இந்தப் பேரிடியை எதிர்பார்க்கவில்லை.

எல்லாவற்றையும் கேட்டபிறகு, பெரும் கானகத்தில் வழி தவறிய சிறு குழந்தையாய் மலங்க மலங்க விழித்தபடி, மிரட்சியுடன் அமர்ந்திருந்தவளைப் பார்த்தபடி சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான்.

பிறகு மெதுவாக நிமிர்ந்து, "இந்த விஷயம் நம்மோட இருக்கட்டும் அங்கிள். எங்க அம்மா அப்பாவுக்குக் கூடத் தெரியவேண்டாம். இது பிரபாவோட சம்மதமில்லாம நடந்த ஒரு விபத்து! அதுக்கு அவளைப் பொறுப்பாளியாக்க நான் விரும்பலை. அவ மனசு எனக்குப் புரியுது...முதல்லே கூட அப்பா அம்மா சொல்றாங்களேன்னு தான் நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சேன்! இப்ப மனப்பூர்வமா ஒத்துக்கிறேன்...

இதை, நீங்க என்கிட்ட சொல்லாமலே மறைச்சிருக்கலாம். பொய் சொல்லி என்னை ஏமாத்தாம, உண்மைச் சொல்லி அதனால வர விளைவுகளை ஏத்துக்கலாம்னு நினைச்ச உங்க பெருந்தன்மை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... இதுவே, கல்யாணம் முடிஞ்சு பத்து நாள் கழிச்சி இது மாதிரி நடந்திருந்தா, என்னால எப்படி இவளை வெறுக்க முடியும்...விட்டுக் கொடுக்க முடியும்! அது மாதிரி தான் இப்பவும் நினைக்கிறேன்... நீங்க கல்யாண ஏற்பாட்டைக் கவனிங்க அங்கிள்! நாங்க, இது மாதிரிப் பண்ணவங்க யாருன்னு விசாரிச்சு அதுக்கான தண்டனைய மறைமுக



காஷ்மீருக்கான முதல் சோதனை ரெயிலை வடக்கு ரெயில்வே அண்மையில் இயக்கியது. தண்டவாளங்களே இல்லாத காஷ்மீரில் எப்படி ரெயில் ஓடியது என ஆச்சரியமாக உள்ளதா? இந்த ரெயில் ஓடியது தண்டவாளத்தில் அல்ல. நெடுஞ்சாலையில் தான். 300 கி.மீ. நீள ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் அட்டகாசமாக ஓடியது இந்த அதிசய ரெயில்.

- ஜெயசுதா சங்கர், மும்பை.

மாவாவது வாங்கித் தரோம்..." என்றபோது பிரபாவின் அண்ணன், அவனை உணர்ச்சிப் பெருக்குடன் அணைத்துக் கொண்டான்.

பிரபாவின் துணைக்காக வந்திருந்த லதாவிற்கும், பிரபாவின் பெற்றோருக்கும், தெய்வத்தையே நேரில் கண்டது போல் ஒரு வித பிரமிப்பு!

எவ்வளவு உயர்ந்த எண்ணம் கொண்ட நல்ல மனிதன் என்று அனைவரையும் நெகிழ்ந்து போய் நெக்குருகச் செய்தது, அவனுடைய பதில்!

பிறகு ஆண்கள் இருவருமாகச் சேர்ந்து அந்த ரௌடிகளை வேறு ஒரு பெரிய கேஸில் மாட்ட வைத்து, தண்டனை வாங்கிக் கொடுக்க, திருமண ஏற்பாடுகள் வேகமாக நடக்க ஆரம்பித்தன.

ஆனால், எதிலும் பற்றின்றி தாமரை இலைத் தண்ணீராய் எதிலும் ஒட்டாமல் ஒரு வித இறுக்கத்துடன் உறைந்திருந்தாள் பிரபா. லதாதான், அவளுக்கு இரவு பகலாகத் துணையிருந்தாள்.

* * * * *

**தி**ருமணம் நல்லபடியாக முடிந்து, வெட்கமெனும் போர்வையில் இறுகியிருந்த பிரபாவை சமாளித்து, முதலிரவு அறைக்கு அவளை அலங்கரித்து அனுப்பிவிட்டு பிரபாவின் தாயும், மற்ற பெண்மணிகளும் விலகிச் செல்ல, அவள் உள்ளே சென்ற மறு நிமிடமே அந்த சப்தம் பலமாகக் கேட்டது.

ஏதுவோ விழுந்து உடைகின்ற ஒலியும், அவளுடைய தீனமான அலறலும் பிறகு நிற்கவே இல்லை.

கதவைத் திறந்து வெளியில் வந்த அவள் கணவனின் முகம் பெரும் வேதனையில் கசங்கிப் போயிருக்க, எல்லோரும் உள்ளே ஓடிச் சென்று பார்த்தபோது, அந்த அறையே சிதைந்த ஓவியம் போலிருந்தது.

நடுவே நின்று, எல்லோரையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

**12**

"**எ**ன்னாச்சு மாப்பிள்ளை...?" பதட்டத்துடன் கேட்டபடி உள்ளே சென்ற பிரபாவின் பெற்றோர், அவளிருந்த நிலை புரிந்து விதிர்த்துப் போய் மகளை பிடித்து அழ ஆரம்பித்தனர்.

பிரபாவின் அண்ணன் என்ன நடந்ததென்று பதட்டத்துடன் கேட்க, தன்னைக் கண்டதும் பிரபாவின் பார்வையில் தெரிந்த மிரட்சியையும் அச்சத்தையும்...கையிலிருந்த பால் சொம்பை விசிறி அடித்து கையில் கிடைத்ததை எல்லாம் அவள் இறைக்க ஆரம்பித்ததையும்... அவளை அமைதிப்படுத்த முனைந்த தன்னைப் பிடித்துத் தள்ளிவிட்டு அவள் முறைத்த பார்வையில், "யாரடா, நீ அற்பப்பதரே!" என்ற கோபமும் சீற்றமும் மட்டுமே மையம் கொண்டிருந்ததையும்... அவனை அடையாளம் தெரிந்து கொண்ட ஒரு சிறு துளி உணர்வு கூட அதில் தெரியாததையும் அதிர்ந்து போய்க் கூறினான் பிரபாவின் கணவன்.

அவன் எல்லாவற்றையும் கூறியவுடன், நிலைமை புரியாமல் தர்மசங்கடத்துடன் நின்றிருந்த சம்பந்தியிடம் வந்தவர்கள், "எங்களை மன்னிச்சிடுங்க" என்றபடி உண்மையைக் கூறி, இது மாப்பிள்ளைக்கும் தெரியும் என்றதும் அனைவரும் அதிர்ந்து போய் சிலையாய் நின்று விட்டனர்.

அங்கு சிதறிக் கிடந்த கண்ணாடித் துகள்களாய் ஒரு நொடியில் அவர்களுடைய இதயமும் சிதறிப் போய்விட, பிறகு அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது, பிரபா கடும் மனச்சிதைவு நோய்க்கு ஆளாகியிருப்பது தெரியவந்தது.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி, அவள் அங்கேயே அனுமதிக்கப்பட, நாளாக ஆக எவ்வளவோ முயற்சி செய்தும் அவளை குணப்படுத்தவே முடியவில்லை.

மனநோய் முற்றிய நிலையில் இரண்டு வருடங்களாக அவள் மருத்துவமனையிலேயே இருக்க, இதையே காரணமாக வைத்து, அவளுடைய தந்தை தன் மாப்பிள்ளையின் தியாக மனப்பான்மையை உணர்ந்து, உடனே விவாகரத்திற்கு ஏற்பாடு செய்து அதை வழங்கியும் விட்டார்.

சிறுவயதிலிருந்தே பார்த்து வளர்ந்த தன் நண்பனின் மகனுக்கு இனியாவது ஒரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

யாரோ சிலர் செய்த பாவங்களுக்கு, தவறே செய்யாத அவன் சிலுவை சுமப்பதில் அவருக்கு உடன்பாடில்லை.

பிறகு, பிரபா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட, இரு குடும்பங்களும் அனாதை ஆசிரமத்திற்கு சென்று அந்த நினைவு நாளை செலவழிப்பது வழக்கமாயிற்று.

லதா எல்லாவற்றையும் கூறி முடித்தபோது, நிலாவின் மனதில் பெரும் துக்கம் மையம் கொண்டிருந்தது. நல்லவர்களாக இருக்கும்

நீலாம்பரிக்கும் மனோகரிக்கும் ஏன் இவ்வளவு வேதனைகளும், துயரங்களும் என்று மனம் உருகியது.

ஒரு பெருமூச்சுடன் லதாவிடம் திரும்பியவள், "எனக்கு அந்த பிரபாவோட ஹஸ் பெண்டை நினைச்சா ரொம்ப பெருமையா இருக்கு... எவ்வளவு அற்புதமான ஒரு மனிதர்!" என்றபோது, லதாவும் அதை ஆமோதித்தாள்.

* * * * *

**பி**றகு, வாழ்க்கை தன் போக்கில் தடம் பதித்துச் செல்ல, மறு ஞாயிறன்று ஒய்வாக அமர்ந்தபடி ஷிவ்கேராவின் 'யூ கேன் வின்' என்ற புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள் நிலா.

லாயிட்ஸ் ரோடிலிருக்கும் ஈஸ்வரி லெண்டிங் லைப்ரரியில் அவள் ஒரு மெம்பராக இருந்தாள். வாரத்தில் ஒரு முறையாவது அங்கு சென்று விடுவாள்.

இந்த முறை சென்றிருந்த போது, அவள் நீண்ட நாட்களாகப் படிக்க வேண்டுமென்று எண்ணியிருந்த அந்தப் புத்தகத்தை எடுத்து வந்திருந்தாள்.

'ஒவ்வொரு மனிதருக்குள்ளும் கோபம், அகங்காரம், திமிர், அலட்சியம், ஆதிக்க மனோபாவம் எல்லாமே அடங்கிக் கிடக்கின்றன. வசதி வாய்ப்புகள் பெருகும்போது, அவை மெல்லத் தலைதூக்குகின்றன... பணம் வந்த பிறகு பலர் ஆளே மாறிப்போய் விடுகின்றனர். இந்த மாற்றத்திற்குள் சிக்கி விடாமல் அந்த சக்திகளை அடக்கி வைக்கத் தெரிந்தவர்கள் மட்டுமே, வாழ்க்கையில் நிஜமான சாதனையாளர்கள்.'

அவருடைய வரிகள் உள்ளத்தில் ஆழப் பதிந்து, ஆழ்மனதில் ஒரு ஸ்படிகத்தின் தெளிவைக் கொண்டு வந்தது.

அந்த நேரம், அறைக்கதவைத் திறந்து உள்ளே வந்த கண்ணம்மா ஆயா அவளைப் பார்ப்பதற்கு, ஒருவர் விசிட்டர்ஸ் ஹாலில் காத்திருப்பதாகக் கூறினாள்.

யாராக இருக்கும் என்ற யோசனையுடன், அப்படியே அவசரமாக எழுந்து சென்றதால், கையிலிருந்த புத்தகத்தையே மறந்து போனாள் அவள்.

அங்கு, நிருபன் அவளுக்காகக் காத்திருந்தான்.

இவன் எதற்காக இங்கு வந்திருக்கிறான் என்று எண்ணியபடிச் சென்றால், அவளைக் கண்டதும் எழுந்து முன்னால் வந்தவனுடைய முகத்திலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவள் அருகில் வந்ததும், "ஹலோ... அம்மா எப்படி இருக்காங்க?" மெல்லிய குரலில் அவள் கேட்டபோது, "ம்... நல்லாருக்காங்க... ஏன் நான் எப்படியிருக்கேன்னு கேக்க மாட்டீங்களா?" குறும்புடன் கேட்டான்.

இதயம் படபடக்க வேகமாகக் குனிந்த போது, அவள் கையிலிருந்த புத்தகத்தை கவனித்தவன் புருவங்களை உயர்த்தி, "பரதநாட்டியம் ஆடறீங்க... சோஷியல் சர்வீஸ் பண்றீங்க... இந்த மாதிரி புக்ஸ் எல்லாம் படிக்கறீங்க... வித்தியாசமான பொண்ணாத் தெரியுது உங்களைப் பாத்தா!" வியப்புடன் கூறினான்.

"அப்படின்னா...?" அவள் புரியாமல் கேட்டபோது "ரொம்ப முரண்படுற மாதிரித் தெரிஞ்சுது...அதான்!" என்றான் நிருபன் விழியோரங்கள் இடுங்க.

"ஏன்? ஒரு லெக்சரர், பரதநாட்டியம் ஆடக்கூடாது...சோஷியல் சர்வீஸ் பண்ணக் கூடாது... தன்னம்பிக்கைப் பெண்ணா இருக்கக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா? ஆகாயநீலம் பிடிக்கும்னா, அதுக்காக இளம் சிவப்பு பிடிக்கக் கூடாதுன்னு ஒண்ணும் இல்லையே?" வேகமாக முடித்தாள் அவள்.

கைகளை உயர்த்தி "அம்பேல்... ஒத்துக்கிறேன்! நான் நினைச்சது தப்புதான்... ஆனா அதுக்காக உங்க ஸ்டுடண்ட்ஸ் கிட்டே லெக்சர் கொடுக்கற மாதிரி என்கிட்டயும் வேண்டாமே! அப்புறம், நான் வந்த வேலைய மறந்திடுவேன்" முறுவலுடன் கூறியவனின் குரலில், சிறு கேலி இழையோடியது.

அவள் என்னவென்ற எதிர்பார்ப்புடன் நோக்க, "அன்னிக்கு நான் சொன்னேனே... என் பிரெண்ட்டோட அம்மா டான்ஸ் ஸ்கூல் நடத்தறாங்கன்னு! அவங்க இன்னிக்கு ஈவினிங் உங்களை அழைச்சி வரச்சொன்னாங்க! அதான் நீங்க ஃப்ரீயான்னு கேட்டுட்டுப் போக வந்தேன்." என்றான்.

"ம்...இன்னிக்கு எந்த வேலையும் கிடையாது. எனக்கு அவங்க அட்ரஸ் குடுங்க... நானே போய்ப் பாத்துக்கறேன். உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?"

"எனக்கு ஒண்ணும் சிரமம் இல்லை! கார் தான் உங்களை சுமக்கப் போவுது. நீங்க எத்தனை மணிக்கு ரெடியா இருப்பீங்கன்னு சொன்னா, நான் வந்து அழைச்சிட்டுப் போறேன்."

"நாலு மணிக்கு ரெடியாயிடுவேன்... எந்த இடம்?" அவள் ஆர்வத்துடன் கேட்க, "இங்கிருந்து பக்கத்துலதான்... ஆட்டோன்னா பதினைஞ்சு ரூபான்னு நினைக்கிறேன்... பஸ்ஸிலே ரெண்டு ஸ்டாப்பிங் தள்ளி... விவரம் போதுமா?" இடுங்கிய கண்களுடன் அவன் கேட்க, மெல்லத் தலையசைத்தான் நிலா.

**13**

அன்று மாலை, நிருபனுடன் கிளம்பிச் சென்றபோது, அந்த நாட்டியப்பள்ளி அவளை மிகவும் கவர்ந்தது.

நடுவில் பெரிய நடராஜர் சிலையுடன் தெரிந்த அமைதியான அந்த ஹாலுக்குள் நுழைந்த போது, மனதில் ஒருவித சிலிர்ப்பும், பக்தியும் வந்தன.

"நீலாம்பரி சித்தி தான் ஃபோன் பண்ணி, உங்களை இங்க கட்டாயம் அழைச்சிட்டுப் போகச் சொன்னாங்க... உங்களுக்கும் ஒரு மாற்றமா இருக்கும்னு சொல்ல சொன்னாங்க... அநேகமா, இன்னிக்கு நைட் உங்களோடப் பேசுவாங்க!"

ஆழ்ந்த குரலில் கூறிக் கொண்டே வந்தவன், அப்போது அங்கு வந்த பெண்மணியை அவளுக்கு அறிமுகப்படுத்தினான்.

முதல் பார்வையிலேயே, ஏனோ அவரை மிகவும் பிடித்துப் போக மரியாதையுடன் வணங்கினாள் நிலா.

அறிமுகப்படலம் முடிந்த பிறகு, "நிலா! இங்கே நான் தினமும் கிளாஸஸ் எடுக்கிறேன்... மூணு டீச்சர்ஸ் வராங்க! உங்களுக்கு எப்ப சவுகர்யமா இருக்கும்னு சொன்னீங்கன்னா, அதுக்கேத்தாப்புல ஸ்டூடண்ட்ஸ் வருவாங்க" என்று கேட்டார்.

"எனக்கு சனி, ஞாயிறுதான் வரமுடியும் மேடம்... பரவாயில்லையா? நான் லெக்சரரா வேலை பாக்கறேன். அதனால வீக் எண்ட் கிளாஸஸ் நான் எடுக்கறேன் மேடம்!"

"சரிம்மா!" என்றவர், அந்த இடத்தை சுற்றி காண்பிக்க, சிறு வயது சிறுமிகள், சலங்கைகளின் தாளம் தப்பாது, ஜதி சுத்தமாய் ஆடிக் கொண்டிருந்தனர்.

அவரிடம் விடைபெற்றுத் திரும்பி வரும்போது தானும் சங்கீதாவும், இது போல ஒரு ஆசிரியையிடம் பரதம் பயின்றதும்... தினமும் வீட்டில் பயிற்சிகள் செய்யும்போது, சித்தியிடம் திட்டு வாங்குவதும்... நினைவில் மீண்டு வந்து இதழ்களில் விரக்திப் புன்னகையை வரவழைத்தன.

## தொண்டை

குளிர், பனிக்காலத்தில் அடிக்கடி சளி தொந்தரவு ஏற்படும். தொண்டை கட்டு ஏற்பட்டு தொல்லை தரும். தொண்டை கரகரப்பு ஏற்பட்டால் மாத்திரை மருந்துகளை தேட வேண்டியது இல்லை. ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி எலுமிச்சம் பழச்சாறு ஊற்றி கலந்து கொப்பளிக்க வேண்டும். ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை இப்படிச் செய்தால் தொண்டை கரகரப்பு பறந்து போகும்.

ஓரக்கண்ணால் அவளையே பார்த்தவன், "என்னங்க... திடீர்னு ரொம்ப சோகமாயிட்டீங்க...?" குரலில் சிறு ஆர்வத்துடன் கேட்டான் நிருபன்.

உடனே நிமிர்ந்தவள், "ப்ச்...ஒண்ணுமில்லே! பழைய ஞாபகங்கள். சங்கீதாவைப் பத்தி நினைச்சேன்... அதான்!" ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

"பாவம் சித்தி! அவங்களுக்கு இப்படி ஒரு கஷ்டம்..."

"அப்புறம்... நீலாம்பரிம்மா, பிரபா பத்தி சொன்னாங்க... ரொம்பக் கஷ்டமா இருந்தது" அவள் கூறியவுடன், அவனிடம் திடீரென்று சிறு மௌனம்!

சிறிது நேரம் கழித்து, "ஆமாம்... நீங்க இவ்வளவு நெருங்கிய தோழின்னு சொல்றீங்க. அப்புறம் ஏன் சங்கீதா கல்யாணத்துக்கு வரலை...?" அவன் இயல்பாகக் கேட்டவுடன், பழைய நினைவுகள் போட்டி போட்டுக் கொண்டு ஞாபகக் கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழ, மறு நொடியே பாறையாய் இறுகிப் போனது அவள் முகம்!

**14**

நிலாவின் முகம் இறுகியதையும், உதடுகள் மௌனத் தாழ்ப்பாளிட்டு இறுகியதையும் ஓரக்கண்ணால் கவனித்த நிருபன், பிறகு எதுவுமே பேசவில்லை.

நெஞ்சம் சேமித்த கண்ணீரை, சோகக் கவிதையாய் நிலாவின் விழியோரங்கள் சேகரிக்க ஆரம்பித்தன.

எட்டுக் கால்களிருந்தும், தன் வலைக்குள்

# கரகரப்பா?



மட்டுமே சுற்றித் திரிந்த படி ஒரு எல்லையை வகுத்திருக்கும் சிலந்தியாய் மாறிவிட்டது போல் அவள் மனதில் ஒரு உணர்வுப் பின்னல்!

மௌனமாகவே வந்தவள், ஹாஸ்டலின் எதிரில் அவன் காரை நிறுத்தியதும் இறங்கி, "தேங்க்ஸ்" என்று தலை நிமிராமலே கூறிவிட்டு வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

அவள் ஏன், அடிக்கடி இதுபோல் தொட்டாற்சுருங்கியாய் தனக்குள் சுருங்கிக் கொள்கிறாள் என்ற கேள்வி அவனுக்குள் பிறந்து விடையின்றி மடிந்தது.

அந்த வாரத்திலிருந்தே, நடன வகுப்புகளுக்குச் சென்று பயிற்சியளிக்க ஆரம்பித்திருந்ததில், நிலாவின் மனம் சொல்லொணாத அமைதியடைந்தது.

மறுமாதமே, செமஸ்டர் முடிந்து கல்லூரி விடுமுறை விடப்பட்டதால் கடைக்கு சென்று ஷாப்பிங்கை முடித்து விட்டு ஊருக்குக் கிளம்பினாள்.

குறிஞ்சிக்கு ஒன்பதாவது மாதம் என்பதால், அந்த வாரமே வளைகாப்பு செய்ய நாள் குறித்திருந்தனர்.

* * * * *

**வி**டியற்காலையில், ஆட்டோவிலிருந்து இறங்கி வீட்டிற்குள் சென்றவுடனே, வேகமாக வந்து சூட்கேஸை வாங்கியபடி அவளுடைய கையைப் பிடித்துக் கொண்ட செண்பகத்தின் கரிசனம், மிகவும் புதிதாய் இருந்தது.

அப்பா அவளுக்காக வராந்தாவிலிருந்த சாய்வு நாற்காலியிலேயே காத்திருப்பது தெரிந்தது. அருகில் போய் அமர்ந்து "அப்பா... எப்படி இருக்கீங்க? உடம்புக்கு ஒண்ணும் பிரச்சினையில்லையே?" கனிவுடன் கேட்டாள்.

"நான் நல்லாருக்கேம்மா... நீ ஏன் இப்படி இளைச்சிப் போயிட்டே?" வாஞ்சையுடன் கேட்டபடி, அவள் கேசத்தை வருடினார் வாகீஸ்வரன்.

"அப்பா... பொய் சொல்லாதீங்க! நான் அப்படியேதான் இருக்கேன். இப்ப கொஞ்ச நாளா டான்ஸ் கிளாஸுக்குப் போறேன்லே... அதனால அப்படித் தெரியுதோ என்னவோ...? நீங்க தான் மெலிஞ்ச மாதிரித் தெரியறீங்க! டாக்டர்கிட்டே ரெகுலராப் போறீங்களா?"

"ம்... போறேன்டா! டாக்டர்கிட்ட அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிட்டு போய்ட்டுதான் இருக்கேன். மேலே அந்த ஆண்டவன் கிட்டே எப்ப வாங்கப் போறேன்னுதான் தெரியலை!"

"ஏன்ப்பா இப்படி விரக்தியா பேசறீங்க? கிண்டலுக்கு கூட இப்படிப் பேசக் கூடாது. குறிஞ்சியோட குழந்தையக் கொஞ்சணும்... உங்க பேரன், பேத்திங்க வளர்ந்து பெரியவங்களாகறதைப் பாக்கணும்... இன்னும் எவ்வளவோ இருக்கு..." அக்கறை தொனித்தது அவள் குரலில்.

அவளையே ஒரு கணம் கூர்ந்து நோக்கியவர், "ஆனா, நீ மட்டும் இப்படியே தான் இருப்பேன்கிறே? அப்படித்தானே... உன்னோட குழந்தைங்களைக் கொஞ்சணும்னு எனக்கு ஆசையிருக்காதா நிலா?" தவிப்புடன் கேட்டபோது, மௌனமாகக் குனிந்து கொண்டாள் அவள்.

"நிலா... என்னோட ஆசைகளுக்கு நீ மதிப்பு குடுப்பே இல்லை? உன் பயம் தான் என்ன? ஒரு தடவை நம்ம கணிப்பு தப்பாயிட்டதாலே, எப்பவுமே அது மாதிரியே ஆயிடும்னு நினைக்கக் கூடாதுடா!" கண்களில் காயம் பட்ட வலியுடன் கூறினார்.

"வேண்டாம்ப்பா... இந்தப் பேச்சை இத்தோட விட்டுடுங்களேன் ப்ளீஸ்..."

"முடியாதும்மா... என் கவலை எனக்குத்தான் தெரியும்... குறிஞ்சிக்குன்னு ஆனந்த் மாப்பிள்ளை வந்துட்டார்... இனிமே அவளைப் பத்திக் கவலையில்லை! நான் வணங்கற அந்த சக்தி மாதிரி இருக்கற உன்னை, எந்த கர்ப்பகிருஹத்துல போய் பிரதிஷ்டை பண்றதுன்னு, கொஞ்ச நாளா தூக்கத்தைத் தொலைச்சித் தவிச்சிட்டுருக்கேன்..."

"அப்பா! என்னைப் பொறுத்தவரைக்கும் கல்யாணம்கிறது, வண்ணச் சிறகுகள் முளைச்சுப் பறக்கற ஒரு விஷயமில்லை... பெண்களோட சுதந்திரச் சிறகுகளை வெட்டி, பாதுகாப்பா வைக்கிறோம்னு சொல்லி அடைச்சு வைக்கிற ஒரு அலங்காரக் கூண்டு மாதிரித்தான் எனக்குத் தோணுது... அதோட, மத்தவங்களோட உணர்வுகளைப் புரிஞ்சு நடந்துக்கறவங்க, இந்தக் காலத்துல ரொம்பக் கம்மிப்பா... விஷப்பரீட்சை வேண்டாமே!" மெல்லிய குரலில் முடித்த போது, வாகீஸ்வரனின் விழிகள் கலங்கி இருந்தன.

"சாரிப்பா! நான் மாடிக்குப் போய் குறிஞ்சியப் பாத்துட்டு வரேன்" அவள் எழுந்தபோது, காபியுடன் உள்ளே வந்த செண்பகம், "இதக் குடிச்சிட்டு அப்புறமா போய் உன் தங்கச்சியப் பாரு!" புன்னகையுடன் கொடுத்தார்.

அவரைப் பார்த்தாலும், ஏனோ பரிதாபமாகத்தான் இருந்தது. திருமணம் முடிந்து வந்தவுடனே, இங்கு ஒரு சுமையாய் தான் இருந்தது. ஒரு வேளை அவருடைய இளமைக் கனவுகளை சிதைத்திருக்கலாமென்று தோன்றியது.

எந்த ஒரு விஷயத்தையும், அவரவர் பார்வையில் நின்று ஆராயும்போது, அது நிறம் மாறுவதும் புரிந்தது.

அப்பாவிடம், தான் வாங்கி வந்திருந்த ஸ்வெட்டர், மங்கிகேப்பையும், சித்தியிடம் ஒரு எளிமையான பட்டுப்புடவையையும் கொடுத்த போது, கலங்கிய விழிகளுடன் அவளை அணைத்துக் கொண்டாள் செண்பகம். குறிஞ்சிக்காகத் தான் வாங்கி வந்திருந்த புடவையை அவள் எடுத்துக் காட்ட, இருவரும் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஒரு தாய், தன்னுடைய குழந்தையை அணைத்தாற்போலிருக்கும் சரிகை உருவங்கள் புடவையின் பார்டராய் நெய்யப்பட்டிருக்க, அதில் கற்கள் பதிக்கப்பட்டு, அப்புடவையின் அழகை அதிகப்படுத்தின.

அதற்குள் கீழே இறங்கி வந்து விட்ட குறிஞ்சி, "அக்கா! நீ மாடிக்கு வருவேன்னு காத்திட்டிருந்தேன்... நீ தான் வரலை! அதான் நானே வந்துட்டேன்" என்றபடி சலுகையுடன் அவள் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"எப்படி இருக்கே குறிஞ்சி? குட்டிப் பாப்பா என்ன சொல்லுது... உன் உடம்பு நல்லாருக்கில்லே?" ஆவலுடன் விசாரித்தாள் நிலா.

"நான் நல்லாருக்கேன்!" என்பதற்குள் "அக்கா உனக்காக வாங்கிட்டு வந்திருக்கற புடவையைப் பாரு... அவ்வளவு அழகா இருக்கு!" என்றபடி எடுத்துக் காண்பித்தார் செண்பகம்.

புடவையைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ந்தவள், "எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு... எவ்வளவுக்கா விலை? ரொம்ப அதிகமா இருக்கும் போலிருக்கே?" தயக்கத்துடன் கேட்டாள்.

"ஏய்... பெரியம்மாவாகப் போறேன்! அந்த சந்தோஷத்துக்கு முன்னாடி இதெல்லாம் சாதாரணம்!" அவள் உற்சாகத்துடன் கூறும் போதே ஆனந்தும் வந்து விட்டான்.

அவனுக்காக வாங்கி வந்திருந்த பேண்ட் சட்டையைக் கொடுத்த போது, "எனக்கு எதுக்குங்க இப்போ...?" என்று தயங்கினாலும் மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டான்.

பிறகு குறிஞ்சியிடம் திரும்பியவள், "எட்டி உதைக்கிறானா குட்டிப் பாப்பா? நான் உன்கிட்ட நிறைய பேசணும்" என்றபடி அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

"என்னக்கா! நிருபன் அண்ணா உன்னை வெளிலயெல்லாம் கூட்டிட்டுப் போனாராம். அடுத்த 'டும்டும்' அங்கதானா?" குறும்புடன் குறிஞ்சி கேட்டபோது, வேகமாக மறுத்தாலும் ஏனோ நிருபனின் நினைவு அன்று அதிகமாய் வந்தது.

மறுநாளே சென்று நீலாம்பரியைப் பார்த்து விட்டு வந்தபோது, குறிஞ்சியின் வளைகாப்பிற்கு நிருபனின் குடும்பத்தினரும் வரப்போவதாக அவர் கூறினார்.

வளைகாப்பன்று, நிலா வாங்கி வந்திருந்த புதுப்புடவையை குறிஞ்சி அணிந்திருக்க, அத்துடன் தனக்கென்று எடுத்த லேவண்டர் நிறப் பட்டுப் புடவையை அணிந்து, அஜந்தா ஓவியம் போலிருந்தாள் நிலா.

காலையிலேயே வந்துவிட்ட நிருபன், அவளைப் பார்வையாலேயே தொடர்ந்து கொண்டிருந்தான்.

அவள் முகத்தையும், புன்னகையையும், அழுத்தமாய் விழிகளில் படமெடுத்து, இதயத்தில் இருத்திக் கொண்டது மனது.

வளையல் அணிவித்து முடிக்கும் போது, எதிரில் அமர்ந்திருந்த நிலாவை அழைத்தார் மனோகரி. "வா நிலா! நீ வந்து குறிஞ்சிக்கு வளையல் போட்டு விடு" எனும் போதே அவரைத் தடுத்தாள் ஒரு உறவுப் பெண்.

"வேண்டாம்... அவ ராசியில்லாதவ...

கல்யாணத்தன்னிக்கே புருஷனை இழந்தவ! அவ கையாலப் போட்டா நல்லதில்லை..."

அவளுடைய குரல், ஒரு சுருதி விலகிய ராகமாய் அனைவரின் செவிகளையும் தீண்டியது.

15

ஒரு நொடி எல்லா சப்தங்களும் அடங்கி விட, ஒரு பூ விழுந்தால் கூட சப்தம் கேட்குமளவு, ஒரு அடர்த்தியான மௌனம் சட்டென்று அந்த இடத்தை ஆக்ரமித்தது.

யாரோ தன் முகத்தில் திராவகத்தை வீசியது போல் வலியெழுந்து, இதயம் துடிக்க ஆரம்பிக்க, நிலாவின் இமைகள் நனைந்தன.

வேகமாக அந்த அறையை விட்டுச் செல்கின்றவளையே, அதிர்ச்சியும் திகைப்புமாய் பார்த்தபடி, உறைந்து போய் நின்றிருந்தான் நிருபன்.

அந்தப் பெண்ணுடைய வார்த்தைகளின் பொருளை மனம் கிரஹித்த போது, பதறிப் போன மனதில் நிலாவின்மேல் இன்னும் அதிகமான நேசம் வீரியமாய் எழுந்தது.

காதல் பிரமிடாய் மனம் மாறியிருக்க, அதில் புதைத்து வைத்த பொக்கிஷமாய், அவளுடைய நேச நினைவுகள் இருப்பதும் புரிந்தது.

உடனே, வானத்து விண்மீன்களைப் பறித்துக் கோர்த்து, அவளுடைய கூந்தல் மலர்களாய் பரிசளிக்க மனம் ஏங்கியது.

அறைக்குள் சென்ற நிலாவிற்குள், குளத்தில் தெரிந்த பறவையின் நிழலுருவம், யாரோ எறிந்த ஒற்றைக்கல்லாய் கலங்கலாய் உருமாறியதைப் போல், நிகழ்காலம் சுழல் வட்டங்களாகி இறந்த காலத்திற்குள் சென்றது.

* * * * *

அப்போது, நிலா 'பிபிஏ' முடித்திருந்த நேரம்! சங்கீதாவிற்குத் திருமணம் நிச்சயிக்கப் பட்டு, அவள் கல்யாணக் கனவுகளில் மிதந்து கொண்டிருந்தாள்.

ஒரு நாள், அவளுடைய வீட்டிற்குச் சென்று கிண்டல் செய்து அவளை சிவக்க வைத்து விட்டுத் திரும்பி வந்தபோது, வீட்டில் தரகர் ஒருவர் வந்திருப்பது தெரிந்தது.

அவர் சென்றபிறகு, நிலாவை அழைத்த வாகீஸ்வரன், "ஒரு நல்ல வரன் வந்திருக்கும்மா! உனக்கு முடிக்கலாமின்னு இருக்கேன். அவங்க வட நாட்டில இருந்தவங்களாம். ஆபீஸர் ப்ரமோஷன்லே சென்னைக்கு வந்திருக்காராம். அம்மா மட்டும்தான்... அப்பா இல்லை...ஒரே பையன்!

அவங்க பாத்ததில ஜாதகம் நல்லாப் பொருந்தியிருக்காம்... எனக்கு மாப்பிள்ளையப் பிடிச்சிருக்கு... இந்தா ஃபோட்டோ... நீயும் பாரு..." என்றபடி அவளிடம் போட்டோவைக் கொடுத்தார்.

மாப்பிள்ளையைப் பற்றி எந்தக் குறையும் சொல்ல முடியாதபடி புகைப்படத்தில் நன்றாகவே இருந்தான். "உங்க இஷ்டம்ப்பா!" என்றபடி நிலா அவரிடம் போட்டோவைத் திருப்பிக் கொடுத்தபோது, குறிஞ்சி அதைப் பறித்துக் கொண்டாள்.

"அப்பா! எனக்கும் இது மாதிரி அழகா மாப்பிள்ளை பாக்கணும்" சலுகையுடன் அவள் கேட்ட விதம் சிரிப்பை வரவழைக்க, "பேசாம நீயே அவரைக் கல்யாணம் பண்ணிக்க குறிஞ்சி" நிலா குறும்புடன் கூறினாள்.

"நான் ரெடி... ஆனா இப்பதானே ப்ளஸ் ஒன் சேரப்போறேன்... அப்பா ஒத்துக்க மாட்டாரே" உதடுகளை சுழித்தாள்.

"அடிச்சேன்னா பாரு! அதுக்குள்ள கல்யாணம் வேணுமாம்... எனக்கு மேல படிக்கணும் போலருக்கு! படிக்க விரும்பற எனக்கு கல்யாணம்... அதை விரும்பற உனக்கு படிப்பு! என்ன செய்யறது?" நிலா முகத்தை சோகமாக வைத்த படிக் கூற, அது கிண்டலென்பதை உணர்ந்து கொண்ட குறிஞ்சி, முகத்தை சுளித்தபடி வெளியே சென்றாள்.

கல்யாண ஏற்பாடுகள் நடக்கும் போதே, செண்பகம் சண்டையை ஆரம்பித்தாள். "இங்கே பாருங்க! நிதானமா பாத்து செய்ங்க... அடுத்ததா ஒரு பொண்ணு கல்யாணத்துக்கு இருக்கறது நினைப்பிருக்கட்டும். எல்லாத்தையும் உங்க மூத்த பொண்ணுக்கே வாரி இறைச்சிடாதீங்க" என்று ஆர்ப்பாட்டம் செய்தாள்.

"செண்பகம்... இதிலே நீ தலையிடாதே... அவளும் என் பொண்ணுதான்! நிலாவுக்கு, அவங்கம்மா நகைங்களை அழிச்சி தான் புதுசா செய்யப்போறேன். ரெண்டு பேருக்கும் பேங்க்ல போட்டு வச்ச பணம் அவங்கவங்க கல்யாணத்துக்கு சரியா இருக்கும். குறிஞ்சி பேர்லே இருக்கறதை நான் எடுக்க மாட்டேன்... இந்தப் பேச்சை இத்தோட விட்டுட்டேன்னா, நான் நிம்மதியா கல்யாண வேலைகளைப் பாப்பேன்" அழுத்தமான குரலில் கூறினார்.

அதற்கு மேல் செண்பகம் எதுவுமே பேசவில்லை. எப்போதுமே கத்திக் கொண்டே இருப்பவள், அவர் எப்போதாவது குரலை உயர்த்தும் போது அடங்கி விடுவாள். திருமண



ஏற்பாடுகள் ஆரம்பிக்க, மாப்பிள்ளை வீட்டினர் திருமணத்திற்கு அவசரப்படுவதாக தரகர் கூற, சங்கீதாவின் திருமணத்திற்கு முதல் வாரமே நிலாவின் திருமண நாள் குறிக்கப்பட்டது.

நாட்கள் நெருங்க நெருங்க, பெண் பார்க்க வந்த அன்று ஒரு நொடி மட்டுமே கண்ட சந்தோஷின் முகம், ஏனோ நிலாவின் மனதில் பதியவேயில்லை.

கல்யாணத்தன்று காலையில் மணவறையில் அவனை அருகில் சந்தித்தபோது, அவளை விடவும், அவன் ஒரு விதப் பதட்டத்துடனும்,

அலைப்புறுதலுடனும் இருப்பதை வியப்புடன் கவனித்தாள் நிலா.

ஏன் இப்படி இருக்கிறான் என்று யோசிக்க விடாமல் சடங்குகள் தொடர திருமாங்கல்யம் அணிவித்தவுடன், மணவறையிலிருந்து எழுந்து மேடையை சுற்றி வரும்போது, அவளைப் பற்றியிருந்த அவன் கைப்பிடி மிகவும் வித்தியாசமாய் இறுக ஆரம்பித்தது.

மிரட்சியுடன் நிமிர்ந்த போது தான், சட்டென்று அவள் கையை விட்டு விட்டு, சரிந்து விழ ஆரம்பித்தான் அவன். ஒன்றும் புரியாமல் அவள் விதிர்த்துப் போய் நின்றிருந்த போது, உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டி நெஞ்சைப் பிடித்த படி அரற்ற ஆரம்பித்தான்.

அவனுடைய அம்மா பதட்டத்துடன் ஓடிச் சென்று மாத்திரைகளை எடுத்து வருவதற்குள், அவன் விழிகள் நிலைகுத்தி மேலே வெறித்தன.

16

சந்தோஷ், அவளுடைய வாழ் நாளின் மொத்த சந்தோஷங்களையும், அந்த நிமிடமே தன்னுடன் எடுத்துச் சென்றிருந்தான்.

இதனால் பாதிக்கப்பட்டவள் அவள் தானென்பதையே உணராத பலர், வார்த்தைக் கற்களை வீசி அவள் இதயத்தை சுக்கு நூறாய் உடைத்தனர்.

"அடிப்பாவி... பிறந்ததுமே அம்மாவை முழுங்குனே... இப்ப புருஷனை சாகடிச்சிட்டே! இப்படித் துக்கிரித்தனமா ராசியில்லாம ஒரு பொண்ணு இருப்பாளா?" என்று



வசைபாட, அவள் சோகம் துடைக்க ஆளில்லாமல் போனது.

மணமேடை பிணமேடையாகியது.

நிலா உறைந்து போய் நின்றிருக்க, வாகீஸ்வரன் ஒருபுறம் கீழே விழுந்து மயக்கமானார். உடனே அவரை மருத்துவமனையில் சேர்த்த போது, அவருக்கு 'ஸ்ட்ரோக்' வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நீலாம்பரி மட்டுமே அவளைத் தேற்றி அரவணைத்து துணையாக இருந்தார். உணர்வுகளை ஒடித்துப் போட்ட சோகம் அவளுடைய கண்ணீரையும் வற்றச் செய்து விட, சந்தோஷின் இறுதிச் சடங்கிற்கு செல்ல மறுத்து விட்டாள் நிலா.

மறுநாளே தெரிந்தது... சந்தோஷ், பிறவியிலேயே ஒரு இதய நோயாளி என்பது! அவனுக்கு எந்த விதமான அதிர்ச்சியும் தரக்கூடாது... திருமணமும் செய்யக்கூடாது என்ற டாக்டரின் ஆலோசனையை மீறி, ஒரே பையன் என்பதால் அவனுடைய தாயே இப்படிச் செய்து விட்ட கொடுமை தெரிய வந்தது.

ஒரு பெண்ணின் சுயநலம், இன்னொரு பெண்ணின் வாழ்க்கையையே பறித்து சூனியமாக்கி விட்டதை புரிந்து கொள்ளாமல், உறவுகளே அவளை ராசியில்லாதவளென்று புறம் பேசியது.

இருண்டு போன தன் வாழ்க்கையை எண்ணி அழுவதா... தன் தந்தையை நினைத்து கலங்குவதா என்று புரியாமல் மனம் சிதைந்து சுக்கு நூறாகியிருக்க, பேதலித்துப் போயிருந்தாள் நிலா.

மருத்துவமனைக்கு வாகீஸ்வரனைப் பார்க்கச் செல்லும்போது ஏதோ வேலையாகக் கிளம்பி வெளியே வந்த எதிர் வீட்டுப் பெண்மணி வேகமாக முகம் திருப்பி மீண்டும் வீட்டிற்குள் சென்றபோது நெஞ்சுக்குள் தாங்க முடியாத வேதனை எழுந்தது.

ஏன் பெண்களுக்கு மட்டும் இந்த சாபக்கேடென்று மனம் பதறித் துடித்தது. எத்தனை பாரதி, பெரியார் வந்தாலும் இந்த சமூகத்தை திருத்த முடியாதென்பதும், மூடப்பழக்க வழக்கங்களை மாற்ற முடியாதென்பதும் புரிந்தது.

பதினைந்து நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்த வாகீஸ்வரன் தன் மகளைக் கண்டதும் ஆற்ற முடியாமல் கண்ணீர் வடித்தார். ஆனால் அதற்குக் கூட உரிமையில்லை என்பது போல் "போதும் அழுதது... உங்க பொண்ணு ஒருத்தி விதவையானது போதும்! என்னையும் பூவையும் பொட்டையும் இழக்க வச்சிராதீங்க" வார்த்தைகளில் நெருப்பள்ளி வீசினாள் செண்பகம்.

மெதுவாக நிமிர்ந்து பார்த்தவருக்கு, அவளுடைய வார்த்தைகள் சம்மட்டி அடியாய் விழுந்தது.

நிஜம் உரைக்க நிமிர்ந்த போது, ஒரு பொட்டு கூட வைக்காமல், கோலமில்லாத வாசலைப்போல் வெறிச்சோடி அமர்ந்திருந்த நிலாவைப் பார்த்தபோது, பெரும் ரௌத்ரம் வந்தது அவருக்குள்!

வாக்கிங் ஸ்டிக்கின் உதவியுடன் மெல்ல எழுந்து சென்றவர், கண்ணாடியில் ஒட்டப்பட்டிருந்த ஒரு ஸ்டிக்கர்பொட்டை எடுத்து வந்து அவள் நெற்றியில் அழுத்தமாக ஒட்டினார்.

என்னவென்றே புரியாமல் மலங்க மலங்க விழித்தவளிடம், "என்னிக்கும் நீ இப்படித்தாம்மா இருக்கணும்! பூவும், பொட்டும் நீ பொறந்தப்பவே நாங்க உனக்கு வச்சு அழகு பாத்ததுடா நிலா! அந்தத் தாலியையும், மெட்டியையும் மட்டும் கழட்டி என்கிட்டக் குடு!" என்று ஆணித்தரமான குரலில் வாகீஸ்வரன் கேட்ட போது, மௌனமாக அவற்றைக் கழற்றி தன் தந்தையிடம் கொடுத்தாள் அவள்.

தன் நண்பரை விட்டு அதை சந்தோஷின் வீட்டில் சேர்க்கும்படிச் செய்தவர், அன்றிலிருந்து அவளை மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டார்.

அந்த மாதமே, அவளை சென்னையில் ஒரு கல்லூரியில் 'எம்பிஏ' வகுப்பில் சேர்த்து ஹாஸ்டலுக்குப் பணமும் கட்டி, நன்றாகப் படிக்கும்படி அறிவுரை கூறிவிட்டு கலங்கிய மனதுடன் அவர் ஊருக்கு வந்தபோது, செண்பகம் கோபப்பட்டாலும், அவர் எதையுமே பொருட்படுத்தவில்லை.

பழைய சோகங்களை மனதிற்குள் போட்டுப் புதைத்துக் கொண்டு படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தவள், படிப்படியாக அதை மறக்க ஆரம்பித்தபோது, படிப்பு முடிந்திருந்தது.

பல்கலைக்கழகத்தில் 'கோல்டுமெடல்' வாங்கித் தேறியவள், எம்பிஏ முடித்தவுடனே சென்னையில் ஒரு கல்லூரியில் வேலை கிடைத்து, இரண்டு வருடங்களாக ஒரு வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டலில் தங்கியபடி வேலைக்குச் சென்று வருகிறாள்.

* * * * *

**போன** வருடம், சந்தோஷின் அம்மா இறந்து போவதற்கு முன் நிலாவைப் பார்க்க வேண்டுமென்று விருப்பப்பட்டார். அதை மறுக்க மனமின்றி விடுப்பு எடுத்துக் கொண்டு வாகீஸ்வரனுடன் சென்றிருந்தாள் நிலா.

இத்தனை வருடங்களில், அவருடைய மனசாட்சியே அவரை கூண்டிலேற்றி விசாரணை செய்ததில் பெரிதும் ஓய்ந்து போயிருந்தார்.

நிலாவின் கையைத் தவிப்புடன் பிடித்து கொண்டவரின் உதடுகள் பேசவில்லை... விழிகள் பரிதவிப்புடன் மன்னிப்பை யாசகம் செய்தன... தன்னை மன்னித்து விடும்படிக் கண்ணீருடன் கோரின.

அலைபாய்ந்த அவரின் கண்கள் பெரும் சோகத்துடன் கடகடவென்று கண்ணீரைச் சொரிய, மெதுவாக அவருடைய கைகளைப் பிடித்து ஆதரவாக அழுத்தியபடி மௌனமாக அவள் நின்றிருந்தாள். மறுகணம் அவளிடமே நிலைத்திருந்த அந்தப் பார்வையே இறுதிப் பார்வையாய் போனது.

அவருடைய உயிர்ப்பறவை, மன்னிப்பு கேட்டு விட்டோமென்ற நிம்மதியுடன் கூட்டைவிட்டு வெகுதூரம் சென்றிருந்தது.

தன் தவறுக்கு பிராயச்சித்தம் செய்வதற்காகவே, தங்களுடைய சொத்துக்களை எல்லாம் அவர் நிலாவின் பேரில் எழுதி வைத்திருக்க, அவள் மனம் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தது.

வக்கீலிடம் சென்று, அந்த சொத்துக்களை எல்லாம் சந்தோஷின் பெயரில் டிரஸ்ட் ஒன்றை நிறுவி அதற்கு மாற்றி விட்டு, அதன் மூலம் வருகின்ற தொகையை, அவள் வழக்கமாகச் செல்கின்ற அனாதை ஆசிரமத்திற்கே அளிக்கும்படிச் செய்தாள்.

அதை, குழந்தைகளின் படிப்பிற்கும், வைத்திய செலவிற்கும் உபயோகப்படுத்தும்படி ஏற்பாடு செய்துவிட்டு, இன்றும் அங்கு சென்று தன்னாலான உதவிகளை செய்து வருகிறாள் அவள்.

பழைய சம்பவங்களை, இப்போதெல்லாம் அவள் நினைப்பதே இல்லை.

ஒரு நொடியில் கடந்து போகும் மேகம் போல், தன் வாழ்வில் வந்து போனவனை, மறந்தே போயிருந்தது மனது!

ஆனால், இன்றையப் பேச்சில், வடுக்களும் வேதனைகளும் பேச வாயின்றி இதயத்தை ரணமாய் தாக்கின.

காயப்பட்ட மனப்பறவை, படபடவென்று சிறகடித்து மௌனமாக அழுதது.

## 17

**த**ன்னருகில் யாரோ வந்து அமர்வதை உணர்ந்து, நிலா மெதுவாக நிமிர்ந்தபோது, நீலாம்பரியும், மனோகரியும் அங்கு வந்திருப்பது தெரிந்தது.

தன்னுடைய உணர்வுகளை மறைத்துக் கொண்டவள், "என்னம்மா! ஃபங்ஷன் நல்லா நடந்து முடிஞ்சிடுச்சா?" வலிய வரவழைத்த புன்னகையுடன் கேட்டாள்.

"இல்லை! நீ வளையல் போட்டு விட்டு நலங்கு வச்சாதான் எழுந்திரிப்பேன்னு குறிஞ்சி காத்துட்டிருக்கா..." அவர் கூறும்போதே வாகீஸ்வரன் உள்ளே வந்தார்.

அவர் முகத்தில் ஆழ்கடலளவு சோகமும், வேதனையும் தெரிய, அவளருகில் வந்தவர், "நிலா...எழுந்திரிச்சி வாம்மா... வந்து குறிஞ்சிக்கு வளையல் போட்டு விடு. அவ உனக்காக அங்கே எழுந்திருக்க மாட்டேன்னு உக்காந்திருக்கா! யார் வேணா, என்ன வேணும்னாலும் சொல்லிட்டுப் போகட்டும். அவளோட வாழ்க்கையில விளக்கேத்தி வச்சவ நீ! மத்தவங்களை விட அவளோட நன்மைய விரும்பறவளும் நீதான்! நீ அவளுக்கு செய்யறப்பதான், இந்த விழாவே நிறைவடையும்னு, நான் நினைக்கிறேன். ஏனோதானோன்னு கடமைக்கு செய்யறவங்களை விட, அவ மேல உயிரையே வச்சிருக்கிற ஒரு நல்லவங்க செய்யும்போது, அந்த சடங்கு புனிதமாயிடும் இல்லையா? வாடா...!" கம்மிய குரலில் அவளை அழைத்தார்.

அப்போது உள்ளே வந்த செண்பகத்தின் விழிகளிலும் அதே கோரிக்கை!

நீலாம்பரி, அவளின் கையைப் பிடித்து எழுப்ப "ஒரு நிமிஷம்மா! முகம் கழுவிட்டு வந்திடறேன்... நீங்க போங்க!" என்று அனுப்பி விட்டுப் பிறகு தன்னை சரி செய்து கொண்டு வெளியே வந்தாள் நிலா.

நிருபனின் பார்வை, அவள் வரும் வழியை எதிர்நோக்கி தவிப்புடன் காத்திருந்தது.

சிறிது நேரம் கழித்து, வெளிறிய முகத்தில், மெலிதான புன்னகையை ஒட்ட வைத்துக் கொண்டு மெதுவாக வந்த நிலாவைக் கண்டபோது ஒரு வெண்புறா சோகத்துடன் மேகங்களுக்கிடையில் மெல்லப்பறந்து வந்து, தன் இதயத்தில் பாதம் பதித்து அமர்ந்து, நேராகத் தன் உயிருக்குள் நுழைவதும் புரிந்தது.

பிறகு குறிஞ்சிக்கு வளையல் அணிவித்து நலங்கு வைத்து விட்டு அவள் உள்ளே சென்ற போது, அவனுடைய இதயம் ரத்தக் கண்ணீர் சிந்தியது.

அவன் மனதில் துளிர் விட்டிருந்த காதல், மரமாகி நிற்க, அவள் நினைவுகள் பூத்துக் குலுங்கும் மலராகின.

* * * * *

**அ**ன்றிரவு, நீலாம்பரியைத் தனியே அழைத்தவன், தன் மனதை அவரிடம் மெதுவாக வெளிப்படுத்தினான்.

"சித்தி! என்னவோ தெரியலை... நிலாவைப் பாத்த முதல் நாளே, என் மனசுக்குள்ளே சின்னதா ஒரு சலனம்! சில நேரங்கள்ல சிலரை முதல் தடவை பாக்கும் போதே அன்னியமாத் தோணாது... ரொம்ப நாளாப் பாத்து பழகின உணர்வு வரும்! அது மாதிரிதான்...

அப்புறம் படிப்படியா அவளோட பழகற சந்தர்ப்பங்கள் கிடைச்ச போதெல்லாம் அவளைப் பத்தின எல்லா விஷயங்களுமே, ஆச்சர்யம் தரக் கூடியதா, உயர்வானதா இருக்கேன்னு நான் வியந்திருக்கேன்...

ஒவ்வொரு தடவையும் அவளைப் பாக்கும் போதெல்லாம், எனக்குள்ளே அவ ஆழமாப் பதிஞ்சதும், என் மனசிலே அவளுக்குத் தனி இடத்தைக் குடுத்திருக்கேன்றதும் இப்பதான் புரியுது" ஒரு சீறலான மூச்சுடன் நிறுத்தினான்.

"நீரு! சின்ன வயசுலருந்தே எனக்கு நிலாவைத் தெரியும். ரொம்ப அற்புதமான ஒரு பொண்ணு! எந்த இடத்துலயும் சுலபமாப் பொருந்தி, அதுக்கேத்தாப்புல தன்னை மாத்திக்கற குணம் படைச்சவ அவ... ஒரு காலத்துல, நானே இது மாதிரி, நினைச்சிருக்கேன். நிலாவும், சங்கீதாவும் பழகுறப்ப, எனக்கென்னவோ நிலா உனக்காகவே பிறந்தவன்னு தோணும்! உனக்கு அவளைப் பேசி முடிக்கலாம்... சங்கீதா கல்யாணத்துல நீ அவளைப் பாத்தா மறுக்கமாட்டே... அப்படின்னு நினைச்சிட்டிருக்கும் போதே, அவளுக்கு வேற இடத்துல கல்யாணம் முடிவாயிடுச்சு!

அப்புறம், அவ வாழ்க்கை இப்படி ஆயிட்டதாலே, என்னால ஒண்ணுமே செய்ய முடியலை... அவளுக்காக வருத்தப்பட மட்டுமே முடிஞ்சுது. முன்னாடி சரி... இப்ப அவ விதவைன்னு தெரிஞ்சப்புறமும் அவளுக்கு வாழ்க்கை கொடுக்க நீ ரெடியா...?" அவனையே கூர்மையாக நோக்கியபடி அழுத்தத்துடன் கேட்டார்.

"சித்தி! இப்பதான் அவமேல இருந்த காதல் இன்னும் அதிகமாகியிருக்கு... என் உலகத்தை இன்னும் அழகாக்கப் போறவளா... என் வாழ்க்கைய விடியச் செய்யறதுக்குன்னே பிறந்தவளாத் தோணுது...

தன் சின்ன வயசுல அம்மாவ இழந்து, கல்யாணத்தன்னிக்கே புருஷனையும் இழந்த நிலாவை மத்தவங்க எப்படி நினைக்கிறாங்களோ... நான் அவளை விலை மதிப்பில்லாத ஒரு பொக்கிஷமாத்தான் நினைக்கிறேன்! என்னைப் பொறுத்த வரைக்கும் அந்த நிலவுக்கு களங்கமில்லை. நீங்கதான் அவளோடப்பேசி அவ சம்மதத்தை தெரிஞ்சு சொல்லணும்." உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கோரிக்கை விடுத்தான்.

"அவமட்டும் சம்மதிச்சிட்டா எனக்கு அதை விட வேற என்ன சந்தோஷம் இருக்க முடியும் நீரு! நான் நாளைக்கே அவங்க வீட்டிலப் போய் பேசறேன். ஆனா அக்காகிட்டே இந்த விஷயத்தைப் பத்தி நீயும் பேசிட்டு காலையில எனக்கு முடிவா சொல்லு! போன தடவை நான் கொஞ்சம் தயங்கினதாலே, அவ வாழ்க்கையே பாழாயிடுச்சி... இந்த தடவை விட மாட்டேன்"

"தேங்க்ஸ் சித்தி... என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு! அம்மாவுக்கும் என் மனசு ஓரளவுக்குத் தெரியும். அவங்க மறுக்க மாட்டாங்க... இருந்தாலும் அவங்களோட பேசி காலையில அவங்க முடிவைச் சொல்லிடறேன். குட் நைட்!" என்றவன் மனோகரியிடம் சென்று பேசினான்.

"ரொம்ப சந்தோஷம் நீரு... நீ இப்படியே இருந்திடுவியோன்னு நான் பயந்துகிட்டே இருந்தேன்... எங்க மனசுல நிம்மதிய வார்த்துட்டேப்பா" கலங்கிய விழிகளுடன் அவர் கூற,

## குடிப்பழக்கத்துக்கு வழிவகுக்கும் தூக்கம்!

**சில** குழந்தைகள் எப்போதும் தூங்கி விழும். இரவிலும் நன்றாக தூங்குவார்கள். குழந்தைகள் இப்படி தூங்குவது நல்லது என்று கருதுகிறோம். ஆனால் 5 வயதுக்கு உள்பட்ட குழந்தைகள் இப்படி தூங்கி வடிந்தால் இளம் பருவத்தை அடைந்ததும் புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற பழக்கங்களில் ஈடுபடுவது ஆய்வில் தெரிய வந்து உள்ளது. 250 குழந்தைகளிடம் கடந்த 10 ஆண்டுகளாக நடத்திய ஆய்வில் இருந்து

ஏகாம்பரம் அவனைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டார்.

காலையில் அனைவரும் இணைந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தவுடன், "நீலாம்பரி! சீக்கிரமா நிலாவோட வீட்டிலப் பேசி நல்ல முடிவா சொல்லு...சீக்கிரமே அவ நம்ம வீட்டுக்கு மகளா வரணும்னு நான் கேட்டேன்னு அவங்ககிட்டே சொல்லு!" என்று மனோகரி கோரிக்கை விடுத்து விட்டு, மதியம் காரில் கிளம்பிச் சென்றனர்.

* * * * *

**அ**ன்று மாலையே, ராகவனும் நீலாம்பரியும், நிலாவின் வீட்டிற்குச் சென்றனர். வாகீஸ்வரன் அவர்களை வரவேற்க, மாடியிலிருந்த செண்பகமும் நிலாவும் அவர்கள் வந்திருப்பதை அறிந்து ஆர்வத்துடன் இறங்கி வந்தனர்.

"வாங்கம்மா...வாங்கப்பா! மனோகரியம்மா ஊருக்குக் கிளம்பிட்டாங்களா?" இயல்பாக விசாரித்தபடி வந்தவளைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டார் நீலாம்பரி.

பிறகு பொதுவான விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தவர்களிடம் ராகவன் மெதுவாக ஆரம்பித்தார். "மிஸ்டர் வாகீஸ்வரன்... நிலாவோட கல்யாணத்தைப் பத்தி நீங்க என்ன முடிவெடுத்திருக்கிங்க? எங்க சகலையோட பையன் நிருபனுக்கு, அவளைப் பேசி முடிக்கலாம்னு நாங்க ஆசைப்படறோம்... அவனுக்கும் இதிலே விருப்பம்தான்! என்ன சொல்றீங்க?" அவர் கேட்டபோது, அந்த இடத்தில் திடீரென்று ஒரு அசாத்திய அமைதி உறைபனியாய் விரவிப் பரவியது.



இது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில் மிகவும் சோர்வு அடையும் குழந்தைகளும், பகலில் தூங்காமல் அவதிப்படுபவர்களும் 12 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட காலத்திலேயே மது, சிகரெட் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

**18**

**வா**கீஸ்வரனின் முகம் பிரகாசமாகிவிட, கண்களில் புதுவிதப் பளபளப்புடன், "அப்படியா? எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு! நிலா... நீ என்னம்மா சொல்றே?" பரபரப்புடன் கேட்டார் அவர்.

மெதுவாக எழுந்தவள், "வேணாம்பா! பெரியவங்க சொல்றத மீறி நான் முடிவெடுக்கிறேன்னு தப்பா நினைக்க வேண்டாம். நான் இப்படியே இருந்திடறேம்பா. பிறந்தவுடனே அம்மாவை முழுங்கிட்டேன்னு... கல்யாணம் முடிஞ்சவுடனே புருஷனை முழுங்கிட்டேன்னு, நிறையக் கேட்டாச்சு. எல்லாம் மனசுல ரணமா இருக்கு! ஆனா, வலி அவமானம், சுடு சொற்கள் எல்லாத்தையும் மனசுல விதைச்சு, வேதனைகளை உரமாக்கி, இப்ப அது ஒரு விருட்சமாகி நான் தலை நிமிர்ந்து நிக்கணும்கற உத்வேகத்தை எனக்கு குடுத்திருக்கு... எனக்குன்னு ஒரு பாதையத் தேர்ந்தெடுத்து, இப்போ ஓரளவுக்கு தெளிஞ்சு நிம்மதியாவும் இருக்கேன்... அதைக் கெடுத்துக்க விரும்பலை!" மென்மையாகக் கூறினாள்.

"இல்லை நிலா! எல்லா உண்மையும் நீருவுக்குத் தெரியும். எல்லாம் தெரிஞ்சுதான் அவன் உன்னை ஏத்துக்கறேன்னு சொல்றான். நீ ராசியில்லாதவன்னு ஊரே சொல்லட்டும்... அதை அவன் நம்பலை! உன்னைக் கண்ணுல வச்சிப் பாத்துக்கணும்னு, நினைக்கிறான். அவனை நீ மணக்க சம்மதிச்சா உன் எதிர்காலம் ரொம்ப நல்லாருக்கும் நிலா! நல்லா யோசிச்சு பதில் சொல்லு..." நீலாம்பரியின் குரலில் ஆர்வம் தெரிந்தது.

"அம்மா... ப்ளீஸ் இந்தப் பேச்சை இத்தோட விட்டுடுங்க... எதிர்த்துப் பேசறேன்னு தயவு செய்து நினைச்சிக்காதீங்க... எனக்கு இதிலே இஷ்டமில்லை" தர்மசங்கடத்துடன் கூறிவிட்டு, எழுந்து மாடிக்குச் சென்றாள்.

பிறகு, நீலாம்பரியும், ராகவனும், நிருபனைப் பற்றியும், அவன் குடும்பத்தைப் பற்றியும், எல்லாம் கூற வாகீஸ்வரனுக்கு முதன்முதலாக தன் மகளின் வாழ்விலும் வசந்தம் வருமென்ற

முதல் நம்பிக்கைத் துளி மனதில் விழுந்தது.

நிலா மீண்டும் மாடிக்குச் சென்றபோது, விஷயமறிந்த குறிஞ்சி மிகவும் மகிழ்ந்தாள்.

"நான் இதை எதிர்பார்த்தேன்க்கா... என் கல்யாணத்தப்பவும் சரி, வளைகாப்பு சமயத்திலயும் அவர் உன்னைப் பார்த்த பார்வைய வெச்சே, அதில இருந்த காதலை நான் புரிஞ்சிக்கிட்டேன். எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு... இரு! ஆனந்துக்கு போன் பண்றேன்" என்று எழுந்தாள்.

"ப்ச்...வேண்டாம்! குறிஞ்சி... நடக்காத ஒரு விஷயத்தைப் பத்தி ஏன் பேசணும்? ஆனந்துக்குத் தெரிய வேணாம். ப்ளீஸ்!"

"நீ சொல்றே... இந்நேரம் நிருபன் போன் பண்ணி அவருக்கு எல்லாம் சொல்லியிருப்பாரு" எனும் போதே போன் ஒலித்தது.

அருகிலிருந்ததால் நிலா அதை எடுக்க, ஆனந்த்தான் பேசினான். "கங்கிராட்ஸ் நிலா! நீங்க எங்க ஜோடிய சேத்து வச்சீங்க... நாங்க உங்களை நிருபன் சார் கூட சேத்து வைக்கப் போறோம். ரொம்ப சந்தோஷமா இருக்கு!" அவனுடைய உற்சாகம் வார்த்தைகளில் கசிந்தது.

ஒன்றும் பேசாமல் அவள் குறிஞ்சியிடம் ரிசீவரை தந்தபோது, "என்னங்க... நீங்க தானே? அக்கா கல்யாணத்துக்கு சம்மதிக்கலை... நீங்க உடனே கிளம்பி வாங்க" சோர்ந்த குரலில் கூறிவிட்டு வைத்தாள் அவள்.

"ஏய்... அவரை ஏன் இப்போ வரச் சொல்றே? எனக்கு இஷ்டமில்லைன்னா விட்டுடுங்களேன் ப்ளீஸ்!"

அதற்குள், கீழே இருந்து செண்பகம் அழைக்கும் குரல் கேட்டதும் இருவரும் இறங்கி வர, நீலாம்பரியும் ராகவனும் விடைபெறக் காத்திருந்தனர்.

"நல்லா யோசிச்சு முடிவெடுப்பேன்னு நான் எதிர்பார்க்கறேன் நிலா... நீ சரின்னு சொன்னா, நாங்க எல்லாரும் ரொம்ப சந்தோஷப்படுவோம்" என்றபடி, அவள் கையைப் பிடித்து அழுத்தி விடைபெற்றுச் சென்றாள் நீலாம்பரி!

உடனே, வீட்டிற்கு வந்த ஆனந்தும் அவளை விடாது பிடித்துக் கொண்டான். "ஏன் வேண்டாங்கறீங்க நிலா? நீங்க பயப்படறதுக்குக் காரணமே இல்லை. நிருபன் சாரும், அவங்க குடும்பமும் ரொம்ப நல்லவங்க! உங்களுக்கு இது ஒரு நல்ல எதிர்காலமா அமையும். நல்லா யோசிச்சி அப்புறமா உங்க முடிவை சொல்லுங்க... நாங்க யாரும் உங்களைக் கட்டாயப் படுத்த மாட்டோம். நீங்க ஊருக்கு போனப்புறம் கூட, ஒரு நல்ல முடிவா தெரியப்படுத்தலாம்" என்று கூறிவிட்டு மாடிக்குச் சென்றான்.

என்ன யோசித்தாலும், தன் முடிவையே நியாயப்படுத்திய மனது, கடந்து சென்ற வாழ்க்கையில் பட்ட காயங்கள் ரணமாகப் படிந்திருந்ததால், மற்றவர்களை நம்ப மறுத்து சத்தியாக்கிரகம் செய்தது.

அவன் தன்னைப் போன்று வலிகளை, வேதனைகளை அனுபவிக்காததால், அவனுக்கு எதுவும் தெரிய நியாயமில்லை என்றும் தோன்றியது.

இப்போது அவனுக்கு எதுவும் பெரிதாகத் தோன்றாமல் இருக்கலாம். ஆனால், மனிதனின் மனம் எப்போதுமே மாறக்கூடிய ஒன்று! பிறகு ஒரு நாள் அவன் மனம் மாறி, இவள் ராசியில்லாதவள்... விதவை... இவளால் தான் தன் வாழ்க்கை இப்படியானது என்ற விரக்தி நிலை வந்து விட்டால், பிறகு பாதிக்கப் போவது தன் வாழ்க்கைதானே! அதற்கு இப்படியே இருந்து விடலாம் என்று தோன்றியது.

அவள் பாதிக்கப்பட்டவள்... வாழ்க்கை சாட்டை சுழற்றிய வலி ஆறாமல், மனம் பலப்பல விதமாக சிலந்தி வலை பின்னியது.

## 19

நிலா, ஊருக்குக் கிளம்புவதற்கு முதல் நாள், வாகீஸ்வரன் தனியே அவளிடம் பேசினார்.

"நிலா... கல்யாண விஷயத்தைப் பத்தி என்ன முடிவெடுத்திருக்கேம்மா? அது நல்ல முடிவா இருக்கணும்னு நான் விரும்பறேன்..."

"அப்பா... நான் ரெண்டு வருஷமா நிம்மதியா இருக்கேன்... அதைக் கெடுத்துக்க நான் விரும்பலைப்பா!" உறுதியுடன் கூறினாள்.

"எனக்குப் பின்னாடி உன்னை யார் பாத்துப்பா நிலா...? உனக்காக யாரு கவலைப் படப் போறாங்க... அவங்கவங்க பிரச்சினையே தலைக்கு மேல இருக்கறப்ப மத்தவங்களைப் பத்தி நினைக்கவே நேரமிருக்காது... உன்னைத் தனியே விட்டுட்டுப் போறனேன்னு, நான் வருத்தப்பட வேண்டியிருக்கும்... என்னால நிம்மதியா போகக் கூட முடியாது போலருக்கு..." பெரும் சோர்வு தெரிந்தது அவரிடம்!

"ஏம்ப்பா... இப்படி பெரிய வார்த்தையெல்லாம் பேசறீங்க... ஒரு பொண்ணு பிறந்தவுடனே, முதல்லே அப்பாவை சார்ந்துதான் இருக்கா... வளர வளர, அண்ணன் தம்பிங்க...

அப்புறம் கணவன், மகன்னு அவளுக்குன்னு தனி முகமே இல்லாம, சுயத்தைத் தொலைச்சிட்டு மத்தவங்களுக்காகவே வாழ்ந்துட்டிருக்கா!

ஆனா... உங்க மக சுயமா தன் காலிலே நிக்கறாளேன்னு... தன் வாழ்க்கைய தானே பாத்துக்கணும்னு தைரியமா இருக்காளேன்னு சந்தோஷப்படுங்கப்பா... ப்ளீஸ்..." அவருடைய தாடையைப் பிடித்தபடி செல்லமாகக் கேட்டாள்.

"அதெல்லாம் பேச்சுக்குதான் சரியா வரும் நிலா... ஒரு பொண்ணு தனியா இருக்கறது நடைமுறை வாழ்க்கையில அவ்வளவு சுலபமில்லை... பல விதத்துல அது கஷ்டம்மா! உனக்குப் புரியலை..." தவிப்புடன் கூறினார்.

"ம்... நான் நிம்மதியா இருக்கேன்ப்பா! கல்யாணம்கிற விஷயத்தை மீறி, நம்மை சந்தோஷப்படுத்தவும், புத்துணர்ச்சியூட்டவும், நிம்மதியளிக்கவும் எவ்வளவோ அற்புதமான விஷயங்கள் இருக்குப்பா! காலேஜ்... ஆசிரமம்... டான்ஸ் ஸ்கூல்... சமூக சேவைன்னு, என்னை நானே பல விஷயங்கள்லே ஈடுபடுத்திக்கிட்டேன்... இதுல எனக்கு எந்த வருத்தமுமில்லை... சொன்னாப் புரிஞ்சிக்கங்கப்பா..."

முடிவாகக் கூறியவள், மறுநாளே ஊருக்குக் கிளம்பி விட்டாள்.

* * * * *

எப்போதும் போல் கல்லூரி, நடனப்பள்ளி, ஆசிரமம், என்று நாட்கள் சலசலத்து ஓடும் நதியாய் கடந்தன.

மனதின் ஓரத்தில் அப்பா கூறியது அவ்வப்போது நினைவுப் பந்தாய் எழும்பி ஆக்ரமிக்கும் போது, பெரும் சஞ்சலம் வந்தது.

பிறகு, வேறு எதிலாவது, அவள் தன் நேரத்தை செலுத்த, மெல்ல மெல்ல, நிருபனின் நினைவுகள் விலகித் தூர ஓடிவிடும்.

அந்த ஞாயிறன்று, நிருபனும் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான்.

'எப்படிப்பட்ட அற்புதமான பெண் இவள்... ஏன் தன்னுள் உறங்கி இருக்கின்ற மென்மையான காதல் உணர்வுகளைத் தட்டி எழுப்ப மறுக்கிறாள்...' என்ற ஆதங்கமும், சிறு கோபமும் அவனை சோர்வடையச் செய்தது.

அனுமன் மாதிரி இதயத்தைப் பிளந்து காட்டியா, தான் அவள் மேல் கொண்டிருக்கும் நேசத்தை வெளிப்படுத்த முடியும்...?

மனது ஓய்ந்து விட சலிப்புடன் அமர்ந்து பாட்டு கேட்டபடி தன் சோகத்தை தற்காலிகமாகத் தொலைத்துக் கொண்டிருந்த போது, அழைப்பு மணி ஒலித்தது.

**20**

நிருபன், அசுவாரசியமாக எழுந்து போய் யாரென்று பார்த்த போது, அங்கு அதிசயமாக சிறு முறுவலுடன் நிலா நின்றிருந்தாள்.

அந்த நேரம், அங்கு அவளை எதிர்பார்க்காததால் வியப்புடன் அவளையே நோக்கிய போது, காதல் விண்ணப்பங்கள், அவன் விழி பேசும் மௌன பாஷையில் புரிந்தன.

உடனே பார்வையைத் தாழ்த்தியபடி, "நான் உள்ளே வரலாமா...?" மெதுவாகக் கேட்டாள் நிலா.

சட்டென்று விலகி வழி விட்டவன், "வாங்க... உக்காருங்க! அம்மா... நிலா வந்திருக்காங்க..." அவன் இயல்பாக வரவேற்க, அவளுக்குத் தான் பெரும் தர்மசங்கடமாய் இருந்தது.

தயக்கத்துடன் நின்றிருந்தபோது உள்ளிருந்து மனோகரி வெளியே வந்தார்.

"வாம்மா நிலா! ஆச்சர்யமா இருக்கு... நீ வந்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷம்..." என்றபடி அழைத்துச் சென்று, அவளைத் தன்னருகில் அமர வைத்துக் கொண்டார்.

"நல்லா இருக்கீங்களாம்மா? புதுசா ஆரம்பிக்கப் போற ஒரு கட்டிடத்துக்கு பணம் தேவைப்படுது... அதான், பில்டிங் ஃபண்டுக்காக எல்லார்கிட்டயும் டொனேஷன் கலெக்ட் பண்றோம்... எனக்குத் தெரிஞ்சவங்ககிட்டே, நானும் முயற்சி பண்றேன்னு டொனேஷன் புக் வாங்கிட்டு வந்தேன்...

உங்களுக்கு விருப்பமிருந்தா, எவ்வளவு முடியுமோ, அந்தத் தொகையக் குடுக்கலாம்..." மென்மையாகக் கேட்டாள்.

"நல்ல காரியத்துக்காகத்தானே நிலா வந்திருக்கே? அப்புறம் ஏன் இவ்வளவு தயக்கம்? இரு... நான் நீருகிட்டக் கேக்கறேன்" என்றபடி உள்ளே சென்றார்.

பிறகு இருவரும் வெளியில் வந்து தர, பெரிய தொகையாக எழுதப்பட்டிருந்த அந்த 'செக்'கைக் கண்டதும், விழிகள் வியப்பில் விரிய, "தேங்க்ஸ்மா..." என்றாள் நிலா மகிழ்ச்சியுடன்.

பிறகு, சிறிது நேரம் அவரிடம் பேசிவிட்டு விடைபெற்றுக் கிளம்பி வெளியில் வந்தபோது "ஒரு நிமிஷம்... நான் உங்களை 'ட்ராப்' பண்றேன்" என்று கூறியபடி நிருபன் அவளருகில் வந்தான்.

மறுக்க முடியாமல் அவனுடன் காரிலேறி

அமர்ந்த போது, இருவருமே அவரவர் சிந்தனையில் உழன்றபடி வர, ஓரக்கண்ணால் நோக்கியவளின் மனதில் ஒரு நொடி அவனுடைய உருவம் ஆழமாய் பதிய, இதயம் குலுங்கியது.

செதுக்கிய சிலை போன்ற முக அமைப்புடன் கூர்மையான கண்கள் எதிர்ப்புறம் பதிந்திருக்க, அமர்ந்திருக்கும்போதே அவனுடைய அசாத்திய உயரம் புரிய, யோசனைகளால் இறுகிய முகவாயுடன் அமர்ந்திருந்தவனின் உருவம் முதன் முறையாக அவள் மனதிற்குள் அனுமதியின்றிப் புகுந்தது.

அப்பாவிடம் அவ்வளவு வீம்பாகப் பேசிவிட்டு வந்திருந்தாலும் தன்னையறியாமல் அவனை மனதிற்குள் தான் சேமிக்கத் துவங்கியிருக்கிறோமோவென்ற பயமும், தவிப்பும் போட்டி போட, இதயத்துடிப்பு மிகவும் பலமாய் அவள் செவிகளுக்கே கேட்டது.

ஒருவிதப் படபடப்புடன் தலைகுனிந்த போது, ''எனக்கும் அதே பயம் தான்!'' சட்டென்று திரும்பி மென்மையான குரலில் கூறினான் நிருபன்.

யாரோ, தன்னைப் பிடித்து பலமாக உலுக்கினாற்போல் திடுக்கிட்டு நிமிர்ந்தவள், ''இப்ப என்ன சொன்னீங்க...?'' என்றாள் தவிப்புடன்.

''ம்... எனக்கும் அதேபயம்தான்னு சொன்னேன்... நிறையப் பேசணும்னு தோணுது... கோபப்பட மாட்டீங்கன்னா சொல்றேன்...''

என்ன சொல்லப் போகிறானோ என்ற பதைப்புடன் அவனையே பார்த்தபோது, "நான் காதலிக்க ஆரம்பிச்சிட்டேனோன்னு பயமா இருக்கு! ஆரம்பிக்கறது என்ன... மாட்டிக்கிட்டாச்சு! அதுக்கப்புறம் எதுக்கு பொய்? நான் 'நிலா'ங்கற பொண்ணை விரும்பறேன்...

நீங்க கண்ணாடியிலப் பாக்கும் போது எனக்காக அவகிட்ட சொல்லிடுறீங்களா? நான் அவளை என் உயிருக்கு உயிரா நேசிக்கிறேன்னு... ப்ளீஸ்..."

ஆழ்ந்த குரலில் அவன் கூறிய போது, அவள் உடலெங்கும் ஒரு விதப் பதட்டம் விரவிப் பரவி, மனதிற்குள் ஒரு தேன்சிட்டு சடசடத்தது.

கார்க் கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்து விட வேண்டும் போல் ஒரு விதப் பரபரப்பு ஏற்பட்டது.

அந்த நிமிடம் அவளைப் பார்த்த போது, அவளைத் தன் இணையாக மனதில் வரித்து பூஜித்தபிறகு, வேறு எந்தப் பெண்ணும் தனக்கு நிறைவை அளிக்க முடியுமென்று நிருபனுக்குத் தோன்றவில்லை.

அவனுடைய வார்த்தைகள் புதிதாய் ஒரு வெளிச்ச உலகத்தை அவளுக்குள்ளே அறிமுகப்படுத்த, வீசியெறியப்பட்ட பழைய ஞாபகக் கற்களால் சிலீரென்று சிதறியது, அவளின் மனக் கண்ணாடி!

தன் வாழ்க்கையின் பழைய அத்தியாயங்களை புரட்ட ஆரம்பித்த இதயத்திற்குள், புயல்காற்றாய் சேதப் பதிவுகள்!

"ப்ளீஸ்... காரை நிறுத்துங்க..." அழுத்தமான தொனியில் அவள் கூறிய போது, சட்டென்று ஒரு குலுக்கலுடன் காரை நிறுத்தினான் நிருபன்!

வேகமாக இறங்கியவள், பின்னாலேயே வந்த ஒரு ஆட்டோவை அவசரமாகக் கை காட்டி நிறுத்தி ஏறிக்கொள்ள, காற்றைக் கிழித்துச் சென்றது அந்த வாகனம்!

## 21

நிருபனின் மனம் கிழிபட்டு சிதைந்திருக்க, விழிகள் சிவந்து வேகமாகச் செல்லும் ஆட்டோவையே நம்ப இயலாமல் வெறித்தன.

சப்தங்கள் செவிக்கெட்டாத தூரத்தில் மிதந்து செல்லும் ஒற்றைப் படகாய் அவள் விலகிச் செல்வது புரிந்தது.

அப்படியே கையை ஓங்கி, 'ஸ்டியரிங் வீலில்' வேகமாகக் குத்தியவன், தான் ஏன் இப்படி ஆகிவிட்டோம் என்ற இனம் புரியாத கோபத்துடன் நேராக வீட்டிற்குச் சென்றான்.

## உலகின் ஆத்மா!

உக்ரைன் நாட்டு தலைநகர் கீவ் நகரில் உள்ள கார்போவா என்ற தங்க நகை நிறுவனத்தினர் அரிய வகை ஆபரணம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். 24 கலைஞர்கள் 3 ஆண்டுகாலம் பாடுபட்டு தங்கம், வைரம், வெள்ளி, கோமேதகம், வைடூரியம் என அபூர்வ உலோகங்களால் உருவாக்கியுள்ள இந்த அரிய ஆபரணத்துக்கு 'உலகின் ஆத்மா' என்று பெயர் சூட்டப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு உள்ளது.

**- கலைச்செல்வி மோகன்ராஜ், பெங்களூர்.**



அவளுடைய புறக்கணிப்பு வெகுவாய் பேதலிக்கச் செய்ய, வாழ்க்கையில் முதன்முதலாகத் தோற்றுப் போன ஒரு உணர்வு அவனுள் பரவியது.

ஆனால், அதே நிமிடம், அவளைத் தன் மனைவியாக அடைந்தே தீரவேண்டுமென்ற வேகமும் வந்தது.

* * * * *

**அ**தற்குப் பிறகு, ஒரு மாதகாலம் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்கவேயில்லை.

இடையில் குறிஞ்சிக்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதாகச் செய்தி வந்தபோது, உடனே விடுப்பு எடுத்துக் கொண்டு அந்த மழலையைக் காணச் சென்றாள்.

பஞ்சுப் பொதியாய்... இளஞ்சிவப்பு நிறத்தில் கைகால்களை அசைத்தபடி, கால், கை முளைத்த சிறு மொட்டாய் படுத்திருந்த அந்தக் குழந்தையைப் பார்த்தபோது இதயத்திற்குள் புதிதாய் ஒரு பரவசம்!

"குட்டிம்மா... உன் பெரியம்மா வந்திருக்கேன்டா... என்னைத் தெரியுதா?" என்றவுடன், புரிந்தாற்போல் அவள் கை, கால்களை அசைத்து கொஞ்சும் குரலில் அழகாக சுழற்றியபோது, சொர்க்கலோகமே சொந்தமானது போல் இருந்தது.

மேலும் ஐந்து நாட்கள் லீவு எடுத்துக் கொண்டு அங்கேயே தங்கி விட்டாள் அவள்.

மூன்றாவது நாள் என்று, அவள் வந்த மறுநாளே குழந்தையையும், குறிஞ்சியையும் வீட்டிற்கு அழைத்து வந்த போது, குறிஞ்சி அவளிடம், "அக்கா... இவளுக்கு நாங்க என்ன பெயர் செலக்ட் பண்ணியிருக்கோம்... தெரியுமா?" உற்சாகமாகக் கேட்டாள்.

"தெரியலையே... ம்... 'ரதி'ன்னா...?" குறும்புடன் கேட்ட நிலாவின் விழிகள், அவள் கூறிய பெயரைக் கேட்டதும் உடனே கசிந்தன.

"ரதி இல்லை... 'தென்றல்'...! பெரியம்மா பேருதான்! எப்படிக்கா அப்பவே இவ்வளவு அழகான தமிழ்ப் பெயரா வச்சிருக்காங்க..." வியப்புடன் வார்த்தைகள் வந்தன, குறிஞ்சியிடமிருந்து!

அப்போது மெதுவாக உள்ளே வந்த வாகிஸ்வரன், "நிலாவோட தாத்தா... அதான், என் மாமனார் ஒரு தமிழ் வாத்தியாரும்மா! அவர் ஆசையா வச்ச பேருதான் அது! அவ பேரில மட்டுமில்லை... என் வாழ்க்கையிலயும் ஒரு தென்றலாவே வந்து போனவ அவ!

உங்க அக்காவுக்கு, அவ வெச்ச பேருதான் நிலாவதனி!" என்றபோது பழைய நினைவுகளால் அவர் மிகவும் பலவீனப் பட்டிருப்பது தெரிந்தது.

"உக்காருங்கப்பா..." என்று அவரை அமர வைத்த நிலா, "பரவாயில்லையே... இப்ப வாக்கிங் ஸ்டிக் உதவியில்லாம நடக்குறீங்களே! இப்பத்தானே புரியுது... நம்ம வீட்டிலத் 'தென்றல்' வந்தவுடனே தாத்தாவுக்கு பலம் வந்துடுச்சு... இல்லைடா செல்லம்...!" என்றபடி குழந்தையைக் கொஞ்ச ஆரம்பித்தாள்.

மனிதர்களின் துயர்களைப் போக்கி, அவர்களை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடிப்பதற்காகவே இறைவன் மழலைகளைப் படைத்திருப்பானோவென்று நிலாவிற்குத் தோன்றியது.

மனதிற்குள்ளிருக்கும் சிறு சிறு கவலைகளைக் கூட, அந்த மாயச் சிரிப்பு துடைத்தெறிவதும், இதயம் லேசாவதும் புரிந்தன.

அப்போது, வாக்கிஸ்வரனின் குரல் அவளைக் கலைத்தது.

"தென்றல் வந்ததும் ஒரு காரணம்... ஆனா நம்ம நிருபன் தம்பி ஏதோ எண்ணெய் ஒண்ணு வாங்கி பார்சல் பண்ணி அனுப்பி இருந்தாரு... ஒரு மாசமா அதத்தான் தடவி வெந்நீர் ஒத்தடம் தரேன்... நல்ல மாற்றம் தெரியுது!"

"ஓ... எப்ப அனுப்பினாருப்பா...?" மெல்லக் கேட்டபோது, "வளைகாப்புக்கு வந்துட்டுப்

போனாரே... அப்பதான்! நல்ல பையன்மா... நமக்குத்தான் ஏனோ குடுத்து வைக்கலை..."

ஒரு பெருமூச்சுடன் அவர் முடித்தபோது, அவள் இதயம் பலமாய் முரசு கொட்ட ஆரம்பித்தது.

சட்டென்று, அவளுடைய மேலுதட்டில் சன்னமாய் வியர்வைத் துளிகள் அரும்ப, மெதுவாக எழுந்து பின்புறம் சென்று கிணற்று மேடையில் அமர்ந்தாள் நிலா.

ஒரு காலத்தில், தானும் சங்கீதாவும், இந்தத் தோட்டத்தை ஒரு தோழியாய் நினைத்து பல விஷயங்களைப் பகிர்ந்து கொண்ட ஞாபகம் வந்து, விழியோரங்களில் கண்ணீர்த் துளிகள் ஜனித்தன.

கூடவே நிருபனின் நினைவும், அழையா விருந்தாளியாக மெல்ல வந்தது.

## 22

அந்த நிமிடம், தன் மலர்க்காதலிகளைத் தேடி எங்கிருந்தோ பறந்து வந்த வண்ணத்துப்பூச்சி ஒன்று, அவள் மடியில் வந்து அமர்ந்தது.

அதை ஆசையாய் கையில் பிடித்துப் பறக்க விட்டதும், நிலாவின் விரல்களில் வண்ணங்களைப் பதித்து விட்டு, மனதில் தன்னைப் பற்றிய சுகமான எண்ணங்களையும் பரிசளித்து விட்டுச் சென்றது, அந்த சிறு பட்டாம்பூச்சி!

மனதிற்குள் அவஸ்தையாய் நிருபனின் நினைவுகள்!

இப்போதெல்லாம், கண்ணாடியைப் பார்க்கும் போது, தன் உருவத்தை விட, அவன் உருவமே அதில் தெரிய ஆரம்பித்திருப்பதும், ஒற்றைப் புருவம் உயர்த்தி சீண்டலாக அவன் வார்த்தைகளை அவளிடமே கூற முயல்வதும், தன் மனம் மிகவும் பலவீனப்பட்டிருப்பதும் புரிந்தது.

தனக்குள்ளேயே போராடியபடி ஆழ்ந்து யோசித்த போது, வாழ்க்கையில் ஒரு முறை சூடுபட்டு விட்டதில் மறுபடியும் யாரையுமே நம்பத் தயங்கும் மனமும்... சங்கீதாவிற்கு நேர்ந்த அவலம் மனதை இறுக்கமாக உறையச் செய்திருப்பதும், அது ஆண் இன துரோகத்தின் நிழலாய் தன்னைத் துரத்துவதும் புரிந்தது.

அன்று மதியம் சென்டரிலிருந்து சாப்பிட வந்திருந்த ஆனந்தும் நிருபனுக்காக வாதிட்டான். நீலாம்பரியின் வீட்டிற்குச் சென்றிருந்த போது, ராகவனே அவளிடம் இதைப்பற்றிப் பேசினார்.

"நீரு ரொம்ப நல்லவன்மா! உன் வாழ்க்கை அவனோட இணைஞ்சா, எங்களைவிட சந்தோஷப் படறவங்க யாருமே இருக்க முடியாது" என்று கூறி அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தினார்.

* * * * *

அந்த வாரக்கடைசியிலேயே, குழந்தைக்கு பெயர் சூட்டும் விழா நடந்தது.

ஊரிலிருந்து, ஏகாம்பரமும் மனோகரியும் வந்திருந்தனர். முக்கியமான வேலை இருந்ததால், நிருபனால் வரமுடியவில்லை என்று கூறினர்.

நிலாவின் மனம் அந்த நிமிடமே ஏனோ அனிச்சமலராய் வாடியது.

குழந்தைக்கு தங்கச் சங்கிலியும், அழகிய உடையும் வாங்கி பரிசளித்தாள் அவள்.

நெல்லில் பெயரெழுதி, மோதிரத்தைத் தேனில் நனைத்து, குழந்தையின் வாயில் வைத்து அவள் செவிகளில், "தென்றல்..." என்று மூன்று முறை உச்சரித்தபோது, மனதிற்குள் பெரும் சிலிர்ப்பு வந்தது.

தலைகுளித்து படுக்க வைக்கப் பட்டிருந்தவளிடம், உரை மருந்துகளின் வாசனையும், பேபி பவுடரின் நறுமணமும் கலந்து, குழந்தைக்கே உரிய சுகமான ஒரு சுகந்தத்தை நாசிக்குள் அறிமுகப்படுத்தின.

மனதில் பலப்பல கனவுகள் எழ, உடனே அதை அடக்கியவள், தென்றலின் பட்டுக் கன்னத்தில் மெதுவாக முத்தமிட்டாள்.

குழந்தை என்பது, ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இனிதான ஒரு வரமென்று தோன்றியது.

மறுநாள், நீலாம்பரியைப் பார்க்கச் சென்றிருந்த போது, தன் மனதில் வெகு நாட்களாய் உறுத்திக் கொண்டிருந்த அந்தக் கேள்வியை நிலா அவரிடம் கேட்டுவிட்டாள்.

"அம்மா! என் வாழ்க்கையாவது பரவாயில்லை... சந்தோஷோட அம்மா தான் செஞ்ச தப்பை உணர்ந்து, அதனாலேயே மன உளைச்சல் வந்து இறந்து போறப்ப, என்னை வரவழைச்சு, பிராயச்சித்தம் செய்யறதா நினைச்சு அவங்க சொத்தை எல்லாம் என் பேரில எழுதி வச்சாங்க...

அதை, நான் ஆசிரமத்துக்குக் குடுத்திட்டேன்கிறது வேற விஷயம்... ஆனா, தான் செஞ்ச தப்பை அவங்க உணர்ந்ததே, ஒரு நல்ல விஷயம் தானே?

ஆனா, நம்ம சங்கிதா விஷயத்துல தப்பு பண்ணினவங்க யாருன்னு தெரிஞ்சிருந்தும், ஏம்மா சும்மா விட்டீங்க? உடனே போலீஸுக்குப்

போய் சிவியரா நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியதுதானே...

என் மனசுல முள்ளா இத்தனை வருஷமா நெருடிட்டிருந்த கேள்வி இது! உங்களை நோகடிக்கக் கூடாதுன்னு யோசிச்சிட்டிருந்தேன்... இப்ப கேட்டுட்டேன்!'' என்றாள் மெதுவாக.

''நாம விட்டாலும் கடவுள் அவனை விடலை நிலா! பெண்ணே போயிட்டா... இனிமே என்ன செஞ்சாலும் அவ திரும்பி வரப்போறதில்லைன்ற விரக்தியிலயும் சோகத்துலயும் அவனை எதுவுமே பண்ணாம விட்டுட்டோம்...

அப்புறம்தான் கேள்விப்பட்டேன்! அந்த வெளிநாட்டு பொண்ணு அவனை விட்டுப் பிரிஞ்சி போயிட்டாளாம்... அந்தக் குழந்தையும் கலைஞ்சிடுச்சி போலருக்கு... அங்க பாத்துட்டிருந்த வேலையும் போயி இங்கேயே வந்துட்டான்...

இங்க அவனுக்குப் பொண்ணு குடுக்க யாருமே முன்வரலை... அதோட இப்பதான் தெரிஞ்சுது... அவன் செஞ்ச பல தவறுகளாலே இப்ப அவன் எய்ட்ஸ் நோயாலே பாதிக்கப் பட்டிருக்கற விஷயம்...

அவன் குடும்பமே இப்ப அவனை ஒதுக்கிடுச்சாம்... குடும்பம், உறவுகள் மறுக்கப் படறதே ஒரு மனுஷனுக்கு மரண அடிதானே நிலா...? கடவுள் இன்னும் இருக்காரும்மா''

விழிகளில் கண்ணீருடனும், குரலில் விரக்தியுடனும் நீலாம்பரி கூறியபோது, விடை தெரியாத புதிர்களாய் சில கேள்விகள் அவள் மனதில் சுழன்றாடின.

அன்றிரவு, ஊருக்குக் கிளம்பிய போது, நிலாவுக்கு தென்றலை விட்டுப் பிரியவே மனமில்லை.

## 23

**செ**ன்னைக்கு வந்தவுடனே, கல்லூரி, நடனப்பள்ளி, ஆசிரமம் என்று நாட்கள் விரைந்தோடின.

மறு ஞாயிறன்று, நிலாவிற்கு போன் வந்திருப்பதாக ஆயா கூறவும், வீட்டிலிருந்து தான் அழைத்திருப்பார்களென்ற எண்ணத்துடன் வேகமாக ஓடி வந்து எடுத்து, "தென்றல் எப்படி இருக்கா...?" என்றாள் ஆவலுடன்.

"ம்... இப்பத்தான் தென்றல் என் காதுகள்லே வீசுது... ரொம்ப நல்லாருக்கு!'' நிருபனின் ஆழ்ந்த குரல் குறும்புடன் வந்தது.

''ஓ... சாரி! நான் குறிஞ்சின்னு நினைச்சிட்டேன்... என்ன விஷயம்?"

"ம்... பொய் சொல்ல மனசு வரலை! உண்மைய சொல்லுவேன்... ஆனா கோபப்படக் கூடாது! நான் யு.எஸ். போறேன்... வரதுக்கு எப்படியும் ரெண்டு வாரமாவது ஆகும்! போறதுக்கு முன்னாடி உன்னோடப் பேசணும்... உன் குரலைக் கேக்கணும் போல இருந்தது... அதான்!"

திடீரென்று அவன் குரலைக் கேட்டபோது, அதுவும் அவன் அவளை ஒருமையில் அழைத்ததும்... அவளுடன் பேச வேண்டுமென்று கூறியதும், நாபியினுள் திடீரென்று ஒரு அனல்காற்று புகுந்தாற் போல் தகிக்க, சட்டென்று ரிசீவரை நழுவவிட்டாள் அவள்.

பிறகு எடுத்து காதருகில் வைத்தபோது, "என்ன... சத்தத்தையே காணோம்... மௌனமா என்னைத் திட்டறியா?" ஆழ்ந்த குரலில் அவன் கேட்டதும், சட்டென்று ரிசீவரை வைத்து விட்டாள்.

மனம் விதிர்த்துப் போய்விட ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்த போது, ''என்னாச்சும்மா? ஏன் ஒண்ணும் பேசாம வச்சிட்டே?'' அந்தப்பக்கம் வந்த ஆயா கேட்டார்.

''ஒண்ணுமில்லை கண்ணம்மா! பேசிட்டேன்... உங்க பொண்ணுக்கு இதுதான் மாசம்னீங்களே? பணம் ஏதும் வேணுமா? குழந்தை எப்ப பிறக்கும்னு டாக்டர் சொல்லி இருக்காங்க...?'' இயல்பான ஆர்வத்துடன் கனிவாக விசாரித்தாள்.

பளீரென்ற சிரிப்புடன், ''இல்லைம்மா... இனிமேதான்! அதுக்குத்தான் லீவு கேட்டிருக்கேன்... நீ ஒருத்தி தான் இப்படி அனுசரணையாக் கேக்கறது! ஒரு கஷ்டம்னா உடனே தயங்காம காசு குடுத்து உதவறது... எல்லாத்துக்கும் மேல மரியாதையா பேசி 'கண்ணம்மா'ன்னு என் பேரைச் சொல்லிக் கூப்பிடறது! மத்தவுங்கல்லாம் ஆயாவ எங்கே மதிக்குதுங்க...? ம்...'' ஒரு பெருமூச்சுடன் சென்றாள்.

* * * * *

**பி**றகு போன் செய்து பேசிய வாகீஸ்வரனும், குறிஞ்சியும், தென்றலைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

உடனே, குழந்தையைப் பார்க்க வேண்டுமென்று எழுந்த ஆவலை அடக்கியபடி, நாளை நடத்த வேண்டிய 'டெஸ்டு'க்கான கேள்வித் தாளைத் தயார் செய்த போது, மனதில் வேறு கனவு வந்தது.

தனக்குள் ஒரு கருவைச் சுமந்து, அதைக் கைகளில் ஏந்தினால் எப்படி இருக்குமென்ற கற்பனையின் முடிவில், அந்தக் குழந்தையின் முகம் நிருபனின் ஜாடையாகத் தெரிய, சில்லென்ற பனிக்காற்று வந்து முகத்தில் மோதியதைப் போல் ஒரு விழிப்பு நிலை வந்தது.

தன்னைத்தானே செல்லமாகக் கடிந்தவள், பிறகு பாட சம்பந்தப்பட்ட வேலைகளில் மனதை செலுத்தினாள்.

அந்த வாரம் முழுவதும், பரீட்சை, கேள்வித்தாள் தயாரித்தல் என்று பொழுது செல்ல, நிருபனை மனதின் ஓரம் மட்டுமே தக்க வைத்திருந்தாள் அவள்.

24

**அ**ந்த வாரம் முடிந்து மறு வாரமும் ஒரு வித சோம்பலுடனே செல்ல, வாரக்கடைசியில் சினிமாவிற்கு செல்லலாம் என்று அவளை வற்புறுத்தி வெளியில் அழைத்துச் சென்றாள் லதா.

ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்தபோது, அவளைக் கேட்டு இரண்டுமுறை போன் வந்ததாக கண்ணம்மாவிற்கு பதிலாக வந்திருக்கும் சங்கரி ஆயா கூறினார்.

நிலா யோசனையுடன் உள்ளே செல்லும் போதே தொலைபேசி அழைக்க எடுத்ததுமே நிருபனின் ஆழமான குரல் "ஹலோ..." என்றது.

"ஓ... நீங்கதான் போன் பண்ணியிருந்தீங்களா? யு.எஸ்.ஸிலிருந்து வந்தாச்சா?"

"அப்பாடா! நான் ஊரில இல்லை... யு.எஸ். போயிருந்தேன்கிறதாவது ஞாபகமிருக்கு... மறக்கலை! நல்லவேளை நான் இந்த அளவுக்காவது உன் நினைவுல இருக்கேனே! அப்படியே, கொஞ்சம் கொஞ்சமா உன்னை பாதிக்க ஆரம்பிச்சுருக்கேனோன்னு தோணுது... நீ என்ன நினைக்கிறே?"

அவளிடமிருந்து, அவன் கேள்விக்கு பதிலாக ஒரு நீண்ட மௌனம்!

"ஹலோ... லைன்ல இருக்கேதானே?" அவன் கூர்மையுடன் கேட்டபோது "ம்... சொல்லுங்க..." என்றாள் நிலா மெல்லிய குரலில்.

"ஏர்போர்ட்டில இருந்து ஒரு தடவை... அப்புறம் வீட்டுக்கு வந்தப்புறம் ஒரு முறை ட்ரை பண்ணினேன்... நீ இல்லையே... எங்கே போயிருந்தே?"

உரிமையுள்ளவன் போல் அவன் கேட்ட போது, சுள்ளென்று மனதில் மூண்ட கோபத்துடன், "மிஸ்டர் நிருபன்! நான் எங்கே போறேன்... வர்றேன்னு சொல்லிட்டு போறதுக்கு நான் ஒண்ணும் உங்க..." வார்த்தைகள் உதட்டு நுனி வரை வந்து விட உடனே நிறுத்தினாள்.

"ம்... சொல்லு... நான் ஒண்ணும் உங்க...ம்! ஏன் நிறுத்திட்டே? தேங்க்ஸ்..."

"எதுக்கு...?" சினத்துடன் அவள் கேட்டாள்.

"என் பெயரை முதன் முதலா... கோபத்துல கூட அழகா சொன்னதுக்கு!" என்றபடி மெதுவாக போனை வைத்தான் நிருபன்.

அவன் வைத்தவுடனேயே, ஏனோ தலை தெறித்து விடும்போல் வலிக்க ஆரம்பித்தது.

அவனுடைய பேச்சும் அதிலிருந்த சீண்டலும், மனதில் மெலிதாய் ஒரு கோபத்தை வரவழைத்தன.

* * * * *

**ம**றுநாள் மாலையில் நடன வகுப்பிற்குச் சென்றிருந்த போது, அங்கேயே அவளைத் தேடி வந்து விட்டான் நிருபன்.

மாணவிகளுக்கு சில அடவுகளை சொல்லிக் கொடுத்தபடி, அதில் ஆழ்ந்திருந்த போது யாரோ தன்னை உற்றுப்பார்க்கின்ற உணர்வு மனதைத் தீண்டத் திரும்பினால், அங்கு நிருபன் கதவில் சாய்ந்து கைகளைக் கட்டியபடி நின்று அவளையே பார்த்திருந்தான்.

அவனருகில் நின்று கொண்டிருந்த ஆசிரியை நிலாவை அழைத்த போது, அதே அடவுகளை மறுபடியும் செய்யும்படிக் கூறிவிட்டு துப்பட்டாவை சரி செய்தபடி அவர்களிடம் சென்றாள்.

## அதிசய குட்டி டால்பின்!

**இ**ங்கே தனது குட்டி டால்பினான சூயஸ்ஸைக் கூட்டிக்கொண்டு உல்லாசமாகத் தண்ணீரில் நீந்திச் செல்லும் இந்தத் தாய் டால்பினின் பெயர் 'மான்ஜா' என்பதாகும்! மாட்ரிட் மிருகக்காட்சி சாலையின் புதிய வரவான இந்த குட்டி டால்பின் சூயஸ் பிறந்து ஒரு மாதத்திலேயே மிகப் பெரிதாக வளர்ந்து விட்டது! இதன் எடை 12 கிலோ. நீளம் 90 செ.மீட்டராகும்! இரண்டாவது மாதத்தில் இது இரண்டு மடங்காகும் என்று நம்பப்படுகிறது! அது மட்டுமல்ல கற்றுக் கொடுக்காமலேயே

"நிலா! முக்கியமான விஷயமா உன்னைப் பாக்கணும்னு நிருபன் தம்பி வந்திருக்காரு... நான் கிளாசைப் பாத்துக்கறேன்... நீ அவரோடக் கிளம்பு!" என்று கூறிவிட்டு வகுப்பிற்குச் சென்றார்.

பதைப்புடன், "அப்பா...?" என்றவளை இடைமறித்தவன், "ஊரில எல்லாரும் நல்லாருக்காங்க... இங்கே என் ஃப்ரெண்டுக்குதான் ஒரு ஆக்சிடெண்ட்... அவசரமா ப்ளட் தேவைப்படுது! நீ 'பி' நெகடிவ்தானே? அன்னிக்கு நீ டொனேட் பண்ணிட்டுப் போனப்ப கவனிச்சேன். அதான் உன்னால இப்ப டொனேட் பண்ண முடியுமான்னு கேக்க வந்தேன்..." கூறியவனின் பார்வை, அவளை விட்டு நொடியும் விலகவில்லை.

"ம்... வரேன்!" அவள் உடனே சென்று அவனுடன் காரிலேறிய போதும், ஏதோ ஒரு வித யோசனையிலேயே இருந்தான் அவன்.

மருத்துவமனைக்கு சென்றபோது வராண்டாவில் கர்ப்பமாக இருந்த ஒரு பெண்... நிருபனின் நண்பன் மனைவியாக இருக்க வேண்டும்... வாயில் கைக்குட்டையைப் புதைத்தபடி அழுது கொண்டிருந்தாள்.

நிலா, ரத்ததானம் செய்து விட்டுத் திரும்பி வந்ததும், அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டவள், "ரொம்பத் தேங்க்ஸ்... செந்திலுக்கு தேவையான நேரத்தில ப்ளட் கிடைக்கலை... நீங்க ரத்தம் குடுத்து காப்பாத்திருக்கிங்க. இத நான் எப்பவுமே மறக்க மாட்டேன்..." கண்ணீருடன் கூறினாள்.

"நீங்க அழக்கூடாது! இந்த மாதிரி சமயத்துல அழுதா, உணர்ச்சி வசப்பட்டா, அது குழந்தைக்குதான் கெடுதல்னு சொல்லுவாங்க... தைரியமா இருங்க"

நிலா, அவளை ஆறுதல் கூறி அமைதிப்படுத்தி அமர வைத்த போது, அவளுடன் பெண் துணையென்று ஒருவரும் இல்லாததால், உடனே கிளம்ப மனமின்றி கூடவே இருந்தாள்.

பிறகு, டாக்டர் வந்து செந்திலின் உயிருக்கு ஆபத்தில்லை என்றதும் ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன், அந்தப் பெண்ணின் கைகளைப் பற்றி ஆறுதலாக அழுத்தி விட்டு, அவள் நிமிர்ந்த போது "தேங்க்ஸ்" என்றான் நிருபன் இறுகிய குரலில்!

"ம்... பரவாயில்லை! நான் கிளம்பறேன்... நீங்க உங்க ஃப்ரெண்டை கவனிங்க..." என்றபடி அவள் எழவும், தானே அவளை அழைத்துச் செல்வதாகக் கூறினான் அவன்.

அவள் மறுத்தும் கேளாமல், அவளை காரில் ஏறச் செய்து கிளம்பினான்.

25

நிலாவை நேரே ஒரு டிரைவ்-இன்-ரெஸ்டாரண்டுக்கு அழைத்துச் சென்றவன், அவளிடம் எதுவுமே கேளாமல், இருவருக்கும் டிபன் ஆர்டர் செய்து விட்டான்.

சர்வர் சென்றவுடன் திரும்பி அவளையே ஊடுருவியபடி "தேங்க்ஸ்..." என்றான் உணர்ச்சிகள் நிரம்பிய குரலில்.

அவள் "வெல்கம்..." என்று முணுமுணுத்த போது, "என்னையா சொன்னே? எங்கேன்னு தெரிஞ்சுக்கலாமா?" புருவங்கள் நெரியக் கூர்மையுடன் கேட்டான் அவன்.

"வெல்கம்னு சொல்றது... ஒரு சம்பிரதாய வார்த்தைன்னு உங்களுக்குத் தெரியாதா?" என்றாள் நிலா சட்டென்று மூண்ட கோபத்துடன்.

"தெரியும்! ஆனா, ஒரு சம்பிரதாயத்துக்குக் கூட என்னை 'வெல்கம்...'னு நீ சொல்ல மாட்டியே?" என்ற போது, ஒரு கோபமூச்சுடன் சர்வர் கொண்டு வந்து வைத்த டிபனை மௌனக் குமுறலுடன் சாப்பிட ஆரம்பித்தாள் அவள்.

அவர்கள் சாப்பிட்டு முடித்துக் கிளம்பிய போது, "ஒரு நிமிஷம்..." என்று அவளை நிறுத்தியவன், "குறிஞ்சிகிட்டே என்ன சொன்னே...?" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

"நாங்க ரெண்டு பேரும், எங்களுக்குள்ளே என்ன வேணும்னாலும் பேசிப்போம்... அதை



தாயைப் போலவே பாய்ந்து தண்ணீரில் வித்தைகளையும் செய்ய ஆரம்பித்து விட்டதாம்!

- இளசை ஜமால், ஜித்தா.

எல்லாம் உங்ககிட்ட சொல்ல முடியாது"

"நான் அதைப் பத்திக் கேக்கலை... என்னைப் பத்தி என்ன சொன்னேன்னு தான் கேட்டேன்" அழுத்தமாகக் கேட்டான்.

"நான்..." ஞாபக அடுக்குகளில் அவள் தேடிய போது, அவனைப் பற்றி எதுவுமே பேசிய ஞாபகமில்லை.

ஒரு வேகமூச்சுடன், "நான் எதுவுமே சொல்லலை... நம்பிக்கை இல்லைன்னா, உங்க ஃப்ரெண்ட் ஆனந்த் கிட்டக் கேக்க வேண்டியதுதானே...?" என்றாள்.

"எங்கே... கேட்டா, அவன் தெரியலைங்கிறான்... குறிஞ்சியும் உண்மையச் சொல்ல மாட்டேன்றா! அதான்... சாட்சிக்காரன் கால்லே விழறதைவிட சண்டைக்காரன் கால்லயே விழுந்திடலாம்னு என்னைப் பத்தி நீ என்ன நினைக்கிறேன்னு நேராவே கேக்கறேன்."

"நான் எதுவுமே நினைக்கலை... அதுதான் உண்மை!"

"இல்லை... பொய்! உன் முகம் கண்ணாடி மாதிரி மனசை வெளிப்படுத்தற முகம்! உன் உதடுகள் பொய் சொல்லுதுன்னு, முகம் என் கிட்ட சொல்லுதே!"

"ப்ச்! நான் போகணும்... லேட்டாயிடுச்சி! நீங்க வரலைன்னா, நான் ஆட்டோ பிடிச்சிப் போறேன்... அப்புறம் ஒரு நிமிஷம்... அப்பாவுக்கு மசாஜ் பண்றதுக்கு ஆயில் வாங்கி அனுப்பினதுக்கு ரொம்பத் தேங்க்ஸ்"

"பேச்சை ரொம்ப அழகா மாத்தறே... உன்னோட நன்றிக்காக நான் இதச் செய்யலை... அவர் வாக்கிங் ஸ்டிக்கோட தடுமாறி நடக்கறதைப் பாத்தா கஷ்டமா இருந்தது... அதான் வாங்கி அனுப்பினேன்."

கூறிவிட்டு, வேகமாக காரை ஓட்டிச் சென்றான் அவன்.

* * * * *

**நி**லாவின் ஹாஸ்டல் வரும் வரை, இருவருமே எதுவுமே பேசவில்லை. அவள் மனம், ஏனோ சந்தோஷங்களனைத்தையும் இழந்தது போல், சருகாய் உலர்ந்தது.

அவனுடைய கோபம் தன்னை இந்த அளவு பாதிக்கும் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை.

மெதுவாக நடந்து ஹாஸ்டலுக்குள் சென்ற போது, அவன் கார் கிளம்பிச் செல்லும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று தோன்றிய மனதை அடக்கியவளின் புலன்கள், பெரிதும் ஓய்ந்து போயிருந்தன.

ஒரு வாரம் கழித்து, நிருபனுடைய நண்பன் செந்திலும், அவன் மனைவி சங்கரியும், ஹாஸ்டலுக்கே வந்து அவளுக்கு நன்றி கூறிவிட்டுச் சென்றனர்.

பிறகு வந்த நாட்களில் ஏதோ ஒரு இனம் புரியாத சோகம் மனதில் மையம் கொண்டிருக்க, அது ஏன் என்றுதான் அவளுக்குப் புரியவில்லை.

மறுவாரம், நடன வகுப்புகளுக்கு விடுமுறை என்பதால், வாரக்கடைசியில் ஊருக்குச் சென்று தென்றலைப் பார்த்து வந்த பிறகு மனம் ஓரளவு சமனப்பட்டு அமைதியைத் தத்தெடுத்திருக்க எப்போதும் போல் கல்லூரிக்கு சென்று வந்து கொண்டிருந்தாள்.

## 26

**ஒ**ரு நாள், மனோகரியிடமிருந்து நிலாவிற்கு போன் வந்தது.

"நிலா! இந்த வாரக்கடைசியில நீ ஃப்ரியாம்மா? உன்னால எனக்கு ஒரு உதவி ஆகணுமே!" என்றார் அவர்.

"டான்ஸ் கிளாஸுக்குப் போகணும்மா... சன்டே காலையில வேணும்னா வரேன்... ஏம்மா என்ன விஷயம்?"

"அன்னிக்கு நீ ரத்தம் குடுத்தியாமே... நீருவோட ஃப்ரெண்ட் செந்திலுக்கு! அவனோட மனைவி சங்கரிக்கு அடுத்த வாரம் வளைகாப்பு! அவங்களோடது லவ் மேரேஜ்... நண்பர்கள் எல்லாரும் சேர்ந்துதான் நடத்தி வச்சாங்க...

இந்த ஆக்சிடெண்டுக்கு அப்புறம் தான் நீரு போய் பேசி, செந்தில் வீட்டிலே எல்லாரும் அவங்களை ஏத்துக்கிட்டாங்க... ஆனா, அந்தப் பொண்ணு வீட்டிலதான், பாவம் அவளை சேர்த்துக்கலை...

அவளுக்கு, அம்மா வீட்டு சீதனமா, புடவை, வளையல் எல்லாம் நாமதான் செய்யணும்னு நீரு சொல்லிட்டான். நீ குறிஞ்சிக்கு எடுத்த புடவை, ரொம்ப அழகா இருந்தது. அதை மாதிரி வளைகாப்புக்கு பொருத்தமா எடுக்கலாம்னு நான்தான் சொன்னேன்... அதான், உன்னை அழைச்சிட்டுப் போயி அந்தக் கடையிலேயே வாங்கலாம்னு கேட்டேன்." ஆர்வத்துடன் கூறினார்.

"அம்மா... நான்... இது மாதிரி நல்ல காரியத்துக்கு புடவை எடுக்கறதுக்கெல்லாம் போறதில்லை... எந்தக் கடைன்னு சொல்லிட

றேன்... நீங்களே போய் எடுத்துட்டு வந்துடுங்க... சாரி!" என்றாள் மெல்லிய குரலில்.

"ஏம்மா அப்படி சொல்றே? குறிஞ்சிக்கு நீதானே எடுத்திட்டுப் போனே? அவளுக்கு குழந்தை பிறந்து நல்லாத்தானே இருக்கா!"

"இல்லைம்மா... அவ என் தங்கை! அதோட, அந்தப் புடவைய வளைகாப்புக்குன்னு நான் எடுக்கலை! சும்மா ஒரு கிஃப்ட் மாதிரித்தான் எடுத்தேன். மத்தவங்க ஏதாவது சொல்றதுக்கு முன்னாடி, நாம முன்ஜாக்கிரதையா ஒதுங்கிடறது நல்லதில்லையா?"

"நிலா... உன்னைப் பத்தி நான் என்னென்னவோ நினைச்சிட்டிருந்தேன்... இவ்வளவு பிற்போக்கான சிந்தனை உள்ளவளா நீன்னு ஆச்சர்யமா இருக்கு! கணவன் இருக்கற வரைக்கும் 'சுமங்கலி'ன்னு ஒரு பொண்ணை சபை நடுவில மரியாதை செய்யறதும், அதே கணவன் இறந்தவுடனே சபையோரங்களிலே அவ சங்கடப்படுத்தப் படுறதையும், ஒதுக்கப்படறதையும், எதிர்க்கிறவ நான்...

முதல்லே இந்தத் தாழ்வு மனப்பான்மையையும், சுயபச்சாதாபத்தையும் இன்னியோட விட்டுட்டு நீ கட்டாயம் புடவை எடுக்க வரணும்! எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்லை...

எந்த ஒரு காரியத்தையும் செய்யறதுக்கு, நல்ல மனசும், உயர்ந்த சிந்தனைகளும் இருந்தாப் போதும்... அது உன்கிட்ட நிறைய இருக்குன்னு நான் நினைக்கறேன்...! என்னை நீ மதிக்கறது உண்மையா இருந்தா, நீ வரணும்!" என்றார் அழுத்தமான குரலில்.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு "சரிம்மா... நான் வரேன்" நிலா மெதுவாகக் கூறினாள்.

* * * * *

**அ**ந்த ஞாயிற்றுக்கிழமை தயாராகி நிருபனின் வீட்டிற்குச் சென்றபோது, மனோகரி உடல்நிலை சரியில்லாமல் படுத்திருந்தார்.

அவளைக் கண்டதும் புன்னகையுடன் எழுந்தவர், "வாம்மா... நேத்திலேருந்து எனக்கு வைரஸ் ஃபீவர்... அதான் படுத்திருக்கேன்... வா... உக்காரு! உன்னைப் பாத்தவுடனே, எனக்கு பாதி உடம்பு சரியான மாதிரி இருக்கும்மா!" என்றபடி அவளை அமரச் சொன்னார்.

பின்புறமிருந்து, "ஆமாம்மா! இவங்களைப் பார்த்தவுடனே எல்லாருக்கும் உடம்பு, மனசு ரெண்டுமே சரியாயிடுது இல்லை? ம்... அது ஏன்னு தான் தெரியலை..." புரியாத குரலில் கூறினான் நிருபன்.

அவன் கூறியது காதில் விழாதது போல், "அப்போ, அடுத்த வாரம் கடைக்குப் போகலாமாம்மா...? உங்களுக்கு ஏதாவது கஞ்சி வெச்சி தரணுமா...? சொல்லுங்க... செஞ்சி குடுத்துட்டுப் போறேன்மா" என்றபடி எழுந்தாள்.

"இல்லைம்மா... அதெல்லாம் சமையல்காரம்மா பாத்துப்பா! ப்ரோக்ராம் முடிவு பண்ணினதை மாத்த வேண்டாம். நீயும், நிருவும் போயிட்டு வந்துடுங்க! செந்தில் சங்கரியை அழைச்சிட்டு நேரா கடைக்கே வந்திடுவான்" முடிவாகக் கூறினார்.

"என்ன விலைக்கு எடுக்கலாம்மா... உங்க பட்ஜெட் எவ்வளவுன்னு சொன்னீங்கன்னா..." அவள் தயங்கியபோது, "குறிஞ்சிக்கு எடுத்தது ஏழாயிரம்னு உங்க சித்தி சொன்னாங்க... அதே மாதிரிப் பாத்து எடும்மா! நல்லா இருக்கணும்... அவ்வளவுதான்!" புன்னகையுடன் கூறினார்.

இன்று கடைக்கு வருவதற்கு ஏன் ஒத்துக்கொண்டோம்... அவனுடன் காரில் தனியாக செல்ல வேண்டுமே என்ற குழப்பம் மனதை ஆக்ரமிக்க, காரில் ஏறி அமர்ந்தாள் அவள்.

சிறிது நேரம் அமைதியாக வந்தவன், "என்னடா.. இவன்கிட்ட திரும்பவும் தனியா வந்து மாட்டிக்கிட்டமேன்னு எரிச்சலா வருதா?" ஓரக்கண்ணால் அவளையே பார்த்தபடிக் கேட்டான்.

உடனே விதிர்த்துப் போய் நிமிர்ந்தவளுக்கு, அந்த 'ஏசி'யிலும் வியர்க்க ஆரம்பித்தது.

இவன் என்ன... என் மனதிற்குள் ஓடும் எண்ணங்களை என்னையறியாமலே வாசித்து விடுபவனோ, என்ற பயமும் சங்கடமும் வந்தன.

பதிலாக ஒன்றும் கூறாமல், அவள் திரும்பி வெளிப்புறம் பார்வையைப் பதித்த போது, நிருபனின் விழிகள் சினத்துடன் இறுக மூடித் திறந்தன. பிறகு, அவன் அவளிடம் எதுவுமே பேசவில்லை.

மனம் முழுவதும் அவளுடைய பிம்பமே பிரதிபலிக்க, காதல் ஜனித்திருந்த இதய வனத்தில் சிறு ஏமாற்றம் பரவியது. எந்தக் காலத்திலும், எதற்காகவும் விட்டுத் தருகின்ற பொருளாய் காதல் இருப்பதில்லை என்பதும் புரிந்தது.


அவளை எதற்காகவும் விட்டுத்தரக் கூடாது என்ற உறுதி, மனதில் வேர்ப்பிடித்து விருட்சமாகி நின்றது...!

**27**

**நி**ருபன், செந்திலுக்கு 'செல்'லில் தொடர்பு கொண்டு கடைக்கு வந்து விடும்படி கிளம்பும்போதே கூறி இருந்ததால், அவனை இறக்கி விட்டு விட்டு அவன் காரை பார்க் செய்து விட்டு வரும்போதே செந்திலும், சங்கரியும் வந்து விட்டனர்.

கடைக்கு சென்று, குறிஞ்சிக்கு எடுத்த புடவையைப் போல் பார்த்த போது, அந்த ரகமே சங்கரிக்கு மிகவும் பிடித்திருந்தது.

பெண்களிடம் புடவையைத் தேர்ந்தெடுக்கும் படிக் கூறிவிட்டு, ஆண்களுக்கான பிரிவிற்கு அவர்கள் சென்ற சிறிது நேரத்திலேயே சங்கரி அழகிய அரக்கு நிறத்தில் குறிஞ்சியுடை யதைப் போலவே நிறம் மட்டும் வேறாய் ஒரு



புடவையை தேர்ந்தெடுத்து விட்டாள் சங்கரி.

ஆண்கள் இருவரும் வர நேரமாகும் போலத் தெரிந்ததால் இருவரும் பேச ஆரம்பித்தனர்.

"மனோகரியம்மாவும், நிரூபன் அண்ணாவும் ரொம்ப அருமையான மனுஷங்க நிலா... சாரி... நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமில்லே...?" என்று கேட்டாள்.

'சரி' என்று புன்னகையுடன் நிலா தலையசைக்க, "எங்க கல்யாணத்தையே நிருபன் அண்ணாதான் முன்னாடி நின்னு பொறுப்பேத்து நடத்தினாங்க... பெரிய பணக்காரங்கன்ற பந்தா, அவங்க குடும்பத்துல யாருக்குமே கிடையாது...

அண்ணா பிசினஸ் விஷயத்துல ரொம்பச் கண்டிப்புன்னு சொல்லுவாங்க... ஆனா நண்பர்களுக்காக உயிரையே குடுப்பாங்கன்னு



இவரு சொல்வாரு! நான் வீட்டை விட்டுக் கிளம்பி வந்தவுடனே, என்னை அவங்க வீட்டில தான் செந்தில் தங்க வச்சிருந்தாரு...

அப்போ அவங்க அம்மா, அப்பா கூட ஊரில இல்லை... வெளியூர் போயிருந்தாங்க! செந்திலுக்கு அவர் மேல அப்படி ஒரு நம்பிக்கை... இன்னிக்கு வரைக்கும், என்னை ஒரு தங்கையா நினைச்சு எல்லாமே செய்ய றாங்க!'' நன்றியுணர்ச்சி விழியோரம் நீராய் கசிய மெல்லிய குரலில் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த நிலா சிறு புன்னகையுடன், ''போதுமே உங்க நிருபன் அண்ணா புராணம்! உங்க ரெண்டு பேரையும் பத்தி சொல்லுங்க...'' ஆர்வத்துடன் கேட்டாள்.

அதற்குப் பிறகு, தங்களின் வாழ்க்கையை பற்றிக் கூற ஆரம்பித்தவள், திருமணத்திற்குப் பிறகு செந்திலுக்கு ஒரு நல்ல வேலையை ஏற்பாடு செய்து தந்ததும் நிருபன் தான் என்று அவனிடமே முடித்தாள்.

"உங்க நிருபன் அண்ணாவுக்குக் காதல்னா ரொம்பப் பிடிக்குமோ...? காதலிக்கற நண்பர் களை எல்லாம் சேர்த்து வைக்கிறாரேன்னு கேட்டேன்..." கிண்டலாகக் கேட்டாள் நிலா.

அவள் பதில் கூறும் முன்பே அங்கு வந்த இரு ஆண்களும், "என்ன அதுக்குள்ளே எடுத்தாச்சா? எப்படியும் குறைஞ்சது ரெண்டு மணி நேரமாவது ஆகும்னு நினைச்சி நாங்க மெதுவா வந்தோம்... ஆச்சர்யமா இருக்கு!" என்றனர்.

"நிலா கூட உங்களைப் பத்திதான் ஆச்சர் யமாகக் கேட்டுட்டிருந்தாங்க அண்ணா!'' மாட்டி விட்டாள் சங்கரி.

''என்ன சங்கரி? என்ன கேட்டாங்க...?'' என்றபடி செந்தில் பரபரக்க, நிலாவையே இமைகள் இடுங்க விழியகற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தான் நிருபன்.

''அண்ணா... உங்களுக்குக் காதல்னா ரொம்பப் பிடிக்குமோ... காதலர்களை எல்லாம் சேத்து வச்சிடறீங்களேன்னு நிலா கேட் டாங்க...! நானும் உங்ககிட்டே ஒரு கேள்வி கேக்கணும்! தப்பா நினைச்சுக்காதீங்க... நீங்க யாரையாவது விரும்பறீங்களா?"

''ம்... நல்ல கேள்வி! நானும் ஒரு பொண் ணைக் காதலிக்கிறேன் சங்கரி. அதுக்காகத்தான் ரொம்ப முயற்சி பண்ணிட்டுருக்கேன்...'' குறுகுறுத்த விழிகளுடன் கூறினான்.

"யாருண்ணா அவங்க? என்கிட்ட சொல்ல வேயில்லை..." பரபரத்தாள் சங்கரி.

''அதோ உங்க பக்கத்துல உக்காந்தி ருக்காங்களே..." அவன் முடிக்கும் முன்பே, இதழ்கள் துடிக்க கோபமாக நிமிர்ந்தாள் நிலா.

''யாரு... நிலாவா?" சங்கரி வியப்புடன் கேட்க, "இல்லை..." என்று அவள் அவசரமாக மறுக்க, "பெண்களே இப்படித்தான்! அவசரப் படாதீங்க... என்னையும் பேசவிடுங்க! நிலாவுக்கு அந்தப் பொண்ணை நல்லாத் தெரியும். தினம் பாக்கறாங்க... கூடவே இருக்காங்கன்னு சொல்ல வந்தேன்." கூறிவிட்டு அவளையே கூர்ந்தவனின் விழிகள், மௌனச் சிரிப்பில் பளபளத்தன.

சட்டென்று மூண்ட கோபத்துடன், "சாரி சங்கரி! இவர் சொல்ற மாதிரி யாரையும் எனக்குத் தெரியாது" நிலா கூறினாள்.

''நானே சொல்றேன் சங்கரி! அவ ஒரு மாதிரி... கொஞ்சம் தீப்பொறி, கொஞ்சம் தேவதை, ரெண்டும் கலந்தா அவதான்... ஏஞ்சல் ஸ்பிட் ஃபயர்! சிக்கிமுக்கிக் கல் உரசினாப் பத்திக்குமே அந்த மாதிரி, நம்ம பார்வையோட அவ கண்கள் உரசினாலே, நமக்குள்ளே தீ பத்திக்கும்...ஜ்வாலாமுகின்னு பேரு!"

சிரிக்காமல் அவன் கூறியபோது, சங்கரியின் எதிரில் அவளால் கோபப்படவும் முடிய வில்லை.

ஆனால் அமைதியாகவும் இருக்க முடியா மல், உணர்வுகள் உள்ளே தகித்தன. இறுகிய முகத்துடன் நின்றிருந்தாள் அவள்.

**28**

**பு**டவையை வாங்கிக் கொண்டு நான்கு பேரும் வெளியில் வந்த போது, ஹோட்டலுக்கு செல்லலாம் என்று செந்தில் கூறியவுடனே, "நான் ஹாஸ்டலுக்குப் போகணும்... என்னை அங்கே இறக்கி விட்டுடுங்க!" என்றாள் நிலா.

''ஊஹூம்... இந்த லன்ச்சே உங்களுக்கு எங்களோட நன்றியத் தெரிவிக்கிற மாதிரி ஒரு சின்ன ட்ரீட்தான்... நீங்க வரலைன்னா நாங்களும் போகலை! உங்களுக்காக ப்ளான் பண்ணின ப்ரோக்ராம் இது... சங்கரி தான் ரொம்ப ஆசைப்பட்டா, பாவம்!" செந்தில் கூறினான்.

"பொதுவா, ப்ரெக்னன்டா இருக்கிறவங்க ஆசைப்பட்டா, அதை உடனே செஞ்சிடணும் பாங்க!" கேலி போல்... ஆனால், உண்மை யாகக் கூறினான் நிருபன்.

"ப்ளீஸ்... நிலா, வாங்க!" சங்கரி கெஞ்சலாக அழைக்கும்போதே நிலா தயங்க, மறு நொடியே, "விடு சங்கரி! சிலர் இப்படித்தான்...

எவ்வளவு பேசினாலும் எதுக்கும் பிடிகொடுக்க
றதில்லை... ஒத்து வரதும் இல்லை!" குத்தலாக
வந்தது நிருபனின் குரல்!
சட்டென்று, "நான் வரேன் சங்கரி!" என்று
சொல்லியவள் தன்னைக் கட்டுப்படுத்திக்
கொள்ளவும், எதையும் வெளிக்காட்டிக்
கொள்ளாமலிருக்கவும் மிகவும் சிரமப்பட
வேண்டி இருந்தது.
உதட்டைக் கடித்தபடி அவன் சிரிப்பை
அடக்குவதும், முடியாமல் அது குறும்பாய்
விழிகளில் கசிவதையும் ஓரப்பார்வையில்
கண்டவளுக்கு பெரும் கோபம் வந்தது.
அன்று, ஹோட்டலில் சாப்பிட்டு முடிக்கும்
வரை, நிலா அவனிருந்த பக்கமே திரும்ப
வில்லை.
அவன் கைகழுவச் சென்றிருந்தபோது,
அவசரமாக எழுந்தவள், "சங்கரி! லேட்டா
யிடுச்சி... நான் கிளம்பறேன்... டான்ஸ் கிளா
ஸுக்கு வேற மதியம் போகணும்... செந்தில்,
தப்பா நினைச்சிக்காதிங்க!" என்று கிளம்பி
னாள்.
"ஓ! நீங்க டான்ஸ் எல்லாம் ஆடுவீங்களா?"
சங்கரி வியப்புடன் கேட்க, "ஏய்... இப்ப நீ
அதுக்கெல்லாம் ஆசைப்பட முடியாது..."
என்று செந்தில் தன் மனைவியை கேலி
செய்தான்.
நிருபன் வந்து விடுவானோ என்று அவள்
பார்வை அலைபாய, வேகமாக விடை பெற்றுக்
கிளம்பியவள், ஹோட்டல் வாசலுக்குச்
சென்றபோது, ஒரு ஆட்டோ கூட அங்கு
தென்படவில்லை.
விரைகின்ற நேரத்தை சபித்தபடி அருகிலி
ருந்த பஸ் ஸ்டாப்பில் வந்து நின்ற போது,
அங்கும் கூட்டமில்லை.

* * * * *

**அ**டுத்த நிமிடமே, படகைப் போல்
வேகமாக வந்து அவளருகில் நின்றது நிருபனின்
கார்! மெதுவாக இறங்கி அவளருகில் வந்த
வனின் நடையே, ஒரு சிறுத்தையின் லாவகத்
துடனிருந்தது.
அவனிடமிருந்து புறப்பட்டு வந்த வார்த்தை
அம்புகள், அவள் செவிகளில் சீறிப் பாய்ந்தன.
"இப்ப நீயா வந்து காரில ஏறினா, உனக்கு
நல்லது... இல்லை, கையக் காலைக் கட்டி
தூக்கிட்டுப் போனாத்தான் சந்தோஷம்னா,
அதச் செய்யக் கூட இந்த நிமிஷம் நான் ரெடி!"
அவள் விதிர்த்துப் போய் நிமிர்ந்த போது,
அவன் விழிகள் தீக்கங்குகளாய் ஒளிர்ந்தன.

இவன் நினைத்ததை சாதிப்பவன்... தான்
சொன்னதை செய்தாலும் செய்து விடுவான்
என்ற பயம், முதன் முதலாக அவள் மனதினுள்
பனிப் புயலாய் சிலீரென்று ஊடுருவியது.
பேசாமல் சென்று காரின் பின்புறம் அமர்ந்த
போதும், அவள் எதுவுமே பேசவில்லை.
ஆனால் கார் வேறு புறமாக செல்வதைக்
கண்டதும், நிலா கோபமாகக் கதவைத் திறக்க
முயல, அதன் கண்ட்ரோல் ஸ்விட்ச் அவனி
டமிருப்பது புரிந்தது.
பிறகு, ஆள் நடமாட்டமில்லாத இடத்தின்
வழியே கார் சென்று கொண்டிருந்த போது,
மெலிதாக வியர்க்க ஆரம்பிக்க, "கதவைத்
திறங்க... நான் இறங்கணும்... இல்லைன்னா..."
மிரட்டும் தொனியில் அவள் கூற, கார் ஒரு
குலுக்கலுடன் சட்டென்று சடன்பிரேக்
போட்டு நின்றது.

**29**

**கா**ரிலிருந்து வேகமாக இறங்கிப்
பின்னால் வந்து அவளருகில் அமர்ந்
தவன், "என்ன மிரட்டறியா?
இப்போ கதவைத் திறந்து உன்னை
வெளியில போக அனுமதிக்க முடி யாது! நான்
உன்னோடப் பேசணும்." என்றான்.
"எனக்கு உங்களோடப் பேசறதுக்கு எதுவும்
இல்லை!"
"ஆனா, எனக்கு இருக்கே... அதுவும்
நிறைய்ய..."
"என்ன... ப்ளாக் மெயில் பண்றீங்களா?
பொண்ணுங்கன்னா, நீங்கள்லாம் என்ன
நினைச்சிட்டிருக்கீங்க? சமைக்கிறதுக்கும், உங்க
தேவைகளை கவனிக்கறதுக்கும், நீங்க சொல்
றதை எல்லாம் கேட்டு தலையாட்டறதுக்கும்,
ராத்திரியில உங்க தனிமையத் தகர்க்க வர
தேவதையாகறதுக்கும், நாங்க ஒண்ணும் உங்க
கைப்பொம்மைங்க இல்லை... நூலிலே கட்டிப்
பொம்மலாட்டம் ஆட வைக்கறதுக்கு!"
கோபத்தில் கண்கள் மின்ன, பல்லைக்
கடித்தபடி சீறினாள்.
"அவ்வளவுதானா? பேசி முடிச்சாச்சா...
இன்னும் இருக்கா?"
நக்கலாக அவன் கேட்டவுடன், "இல்லை...
நிறைய இருக்கு... யாரோ ஒருத்தர் எழுதினது
தான் நினைவுக்கு வருது! பொதுவா குடும்பத்
தில, பெண் ஆணின் இச்சைகளுக்கும், இம்சை
களுக்கும் வடிகாலாக, தியாகதீபமாக, சுயம்
தொலைத்தவளாக இருக்கும்படி பயிற்றுவிக்கப்
படுகிறாள்... தான் அடிமை என்பதையே
உணரமுடியாதபடி ஒரு பொருளாக்கப்பட

றான்னு எழுதினது உண்மைதான் போல ருக்கு..." சிற்றத்துடன் கூறினாள் நிலா.

அவள் பேசுவதையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன், சட்டென்று அவளை அருகில் பிடித்து இழுத்து, கோபத்தில் துடித்துக் கொண்டிருந்த அந்த உதடுகளில் அழுத்தமாக முத்தமிட்டான்.

* * * * *

ஒரு கணம், அவளுக்கு என்ன நடந்த தென்றே புரியவில்லை.

ஒரு ஆணின் முதல் ஸ்பரிசம்... அதுவும் நெருக்கமான தொடுகையை எதிர்பார்க்கா ததால், புலன்கள் செயலிழந்து போயின.

நெஞ்சுக்குள்ளே ராட்டினங்கள் சுற்ற ஆரம்பிக்க, சிந்திக்கும் திறனற்று உறைந்து அமர்ந்திருந்த அந்த பனிப்பூவின் இதழ்கள், சூரியனின் வெப்பம் பட்டதும் உருகத் தொடங்கியிருந்தன.

அவன் மனதிற்குள்ளும் பெரும் ரசாயன மாற்றம்... புதிதாய் ஒரு கவிஞனின் ஜனனம்!

"உன்
இதழ்ப் பெட்டகத்துள்...
எனக்கென
நீ சேமித்து வைத்திருக்கும்
கோடி முத்தங்களை...
என்
உதட்டுச் சாவிகளால்
திறந்தெடுக்க முயல்கிறேன்!
ஆனால்...
ஒவ்வொரு முறையும்...
ஒன்று மட்டுமே
சாத்தியமாகும் போலிருக்கிறது!"

செல்லமாகச் சிணுங்கியது மனது!

சில நொடிகள்தான்! உணர்வுகளின் தகிப்பில் அவள் உறைந்திருந்தது சில நிமிடங்களேதான்!

மறுகணமே, தன்னை சுதாரித்துக் கொண்டு அவனை விலக்கி நிமிர்ந்தவள், "சே... நீங்க ஒரு நல்லவர்னு நினைச்சேன்!" சிற்றத்துடன் அடிக்குரலில் சீறினாள்.

"சில சமயங்கள்ல நம்ம கணக்கு தப்பாயிடுது இல்லை...? நான் கூட உன்னை அணுகமுடி யாத கற்பாறைன்னுதான் நினைச்சேன்... இன்னிக்குத்தான் தெரிஞ்சுது! நீ உருகக் கூடிய பனிப்பாறைன்னு...!"

"ஹூம்... நீங்க என்னைத் தப்பா எடை போட்டிருக்கிங்க...!"

"இல்லை... இப்பதான் ரொம்ப சரியா கணிக்க ஆரம்பிச்சிருக்கேன்..."

## தண்ணீரில் தவழும் தாயும் சேயும்!

நீங்கள் காணும் இந்த அதிசய மிருகம் கொல்கத்தாவின் வனவிலங்குப் பூங்கா விலுள்ள பெண் நீர்யானையாகும். அதிசயம் என்னவென்றால் நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த அதிசய நீர்யானை குட்டியொன்றை ஈன்றுள்ளது! தண்ணீர் குளத்தில் தாயுடன் சேர்ந்து புதிதாகப் பிறந்த குட்டியும் நீந்தும் அதிசயக் காட்சியை இங்கே பாருங்கள்! ஏராளமான மக்கள் இந்த அதிசயமான

"மரியாதையா கதவைத் திறங்க... இல் லைன்னா, நான் இந்தக் கண்ணாடிய உடைச் சிட்டு சத்தம் போடுவேன்..."

"ஈஸி... ஈஸி... மை கேர்ள்! ஏன் இவ்வளவு பதட்டம்? மறுபடியும் நான் உன்னை தொட்டுடுவேன்னா? இல்லை... உன்னாலேயே உன்னை கண்ட்ரோல் பண்ண முடியாதுன்னா? ம்...?"

ஒற்றைப் புருவம் ஏறி இறங்க, அவன் கூர்மையுடன் கேட்க, "எனக்கொண்ணும் பயமில்லை... என்னை அவ்வளவு சுலபத்தில யாராலயும் கைவசப்படுத்த முடியாது..." உறுதியுடன் கூறினாள் நிலா.


"ஓ! அதுக்காகத்தான் உன்னைச் சுத்தி... பொய்யா இந்தக் கோப வேலியப் போட்டுட்டு இருக்கியா? ஆனா, நான் அதை உடைச்சிக் காட்டுவேன்."

ஒரு கோபமூச்சுடன், என்ன கூறினாலும் இவன் ஏன் இப்படித் தன்னைப் புரிந்து கொள்ள மறுக்கிறான் என்ற ஆதங்கமும் சேர "இப்ப என்னதான் சொல்ல வரீங்க... நீங்க தொட்டா நான் மயங்கிப் போயிடு வேன்னா...?" கோபத்துடன் கேட்டாள் அவள்.

"அப்படி இல்லை நிலா! என்னை முதல்லே புரிஞ்சிக்க!" என்றபடி அவன் அவள்புறம் திரும்பி அமர்ந்த போது, கால்கள் அவள்மீது லேசாக இடிக்க சட்டென்று தன்னை தொட்டாற் சுருங்கியாய் சுருக்கி, கதவோரம் ஒண்டிக் கொண்டாள் அவள்.

"ஓ... சாரி! உன் அனுமதி இல்லாம, இனிமே உன்னைத் தொட மாட்டேன்!"

அவன் கூறியபோது, பெரிய நியாயவான்



தாயையும் சேயையும் காண இங்கு வருகின்றனர்!

**- இளசை ஜமால், ஜித்தா.**

தான் என்பது போல் அவளது இதழ்கள் ஏளனமாக வளைந்தன.

அவன் பேச ஆரம்பித்தபோது, குரல் மிகவும் மென்மையாக மாறி இருந்தது.

"நிலா... நான் உன்னை என் உயிரா விரும்பறேன்... இதை உன்கிட்ட சொல்லணும் னுதான் இத்தனை நாளா ட்ரை பண்ணினேன்! ஆனா நீ என்னைப் புரிஞ்சிக்க மறுத்தே!

சரி... இந்த மொழியாவது புரியுமான்னு தான்... இப்படி செஞ்சிட்டேன்! நான் உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசைப்படறேன் நிலா! காலம் காலமா உன் னோட இணைஞ்சு வாழணும்னு தவிக்கி றேன்... இது தப்பா?"

"நீங்க கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படு றதில தப்பே இல்லை... அதுக்காக என்னைத் தேர்ந்தெடுத்திங்க பாருங்க... அதுதான் தப்பு!" கசப்புடன் கூறினாள்.

"ஏன்...? நீ கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா?"

"இல்லைதான்! ஆனா எனக்கு கல்யாணத் துல விருப்பமில்லை... என் வாழ்க்கையில ஒரு தடவை அது நடந்து முடிஞ்சு போச்சு! அதனால நான் அனுபவிச்ச கொடுமைகளும், சமூகத்துகிட்டயிருந்து வாங்கின சொல்லடி களும், ஏராளம்! அதெல்லாம் அனுபவிச்சா தான் தெரியும்! எந்த வலிகளுமே தெரியாம, சுகமா வாழ்ந்துட்டிருக்கற உங்களுக்கு அதைப்பத்தி எப்படித் தெரியும்?"

"நான் எந்த வலிகளையுமே உணராதவன்னு எப்படி சொல்றே? பிரபாவைப் பத்தி உனக்குத் தெரியும்தானே? உன்னை மாதிரியே நானும் பாதிக்கப்பட்ட வன்தான்! இப்ப அதை எல்லாம் கடந்து... மறந்து, ஒரு துணையை, புது வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கலையா?" தவிப்புடன் கேட்டான் நிருபன்.

"பிரபா உங்க தங்கை! அவளுக்கு நேர்ந்த கொடுமைய மறக்கறது கஷ்டம் தான்! ஆனா, உங்க வாழ்க்கையில நீங்க நேரடியா பாதிக்கப்பட்டு, உங்க வாழ்க்கைத் துணையை இழந்திருந்தா, அந்தக் கஷ்டம் தெரியும்!"

வியப்பும், வேதனையும், நம்ப இயலாத் தன்மையும் போட்டியிட அவளையே நோக்கி யவன், "நீ நினைக்கிற மாதிரிப் பிரபா என் தங்கை இல்லை... என்னோட மனைவி!" விரக்தியுடன் அவன் கூறியபோது விழிகள் தெறித்து விடுவது போல் நிமிர்ந்த நிலாவின் வேர் வரை பாய்ந்தன, அந்த வார்த்தைகள்!

**அ**ன்று, "பிரபா எங்க வீட்டுப் பொண்ணு நிலா!" என்று நீலாம்பரி கூறியதன் அர்த்தம் புரிந்து, நம்பவே முடியாத ஒன்று நிஜமானதைப் போல் மனம் குமுறியது.

பிரபாவைப் பற்றிய உண்மை தெரிந்தும், அவளைப் பெருந்தன்மையுடன் மணந்து கொண்ட அந்த அற்புதமான மனிதன் நிருபன் தான் என்று புரிந்த போது மனம் உருகி அவள் உயிரும் கரைய ஆரம்பித்தது.

ஏனோ, உடனே அழ வேண்டும் போலிருந் தது.

இவனையா நான் வேண்டாமென்று ஒதுக்கி னேன்...? இத்தனை வலிகளை மனதில் ரணங் களாய் சுமந்து... இதயம் அழுதாலும் வெளியில் புன்னகைத்து... தன் கம்பீரம் தொலைக்காமல் தொழிலிலும் முன்னேறி... இப்போதும் அந்தக் கொடுமையான நினைவுகளைப் புதைத்து, வாழ்க்கைத் தோல்வியிலிருந்து வீரியமாய் உயிர்த்தெழுந்து காதலைச் சொல்லும் இந்த நல்ல மனிதனையா இத்தனை நாள் நோகடித் தேன்?

அவள் உணர்வுகளை உலுக்கிப் போட்டது அந்த சோகம்!

அவனைத் தூக்கி எறிந்து விட்டு செல்லத்

துடித்த மனத்தினுள், இப்போது காதல் விதை உயிர் கொண்டு துளிர் விட்டதும், தன் உயிருக்குள்ளிருக்கும் அவனை அவ்வளவு சுலபத்தில் விடுவிக்க முடியாதென்ற நிஜமும், புரிந்தது.

* * * * *

**சி**றிது நேரம், அங்கு மொழிகள் ஊமையாகி விட, விழிகள் மட்டுமே மௌனப் பேச்சு வார்த்தை நடத்தின.

உனக்கு நானிருக்கிறேன் என்பது போன்ற அவன் பார்வையும், உதடுகளில் ஆறுதலுடன் கசிந்த புன்னகையும், ஓசையற்ற ஆறுதல் வார்த்தைகளாய் அவளை வருடின.

அவனுக்கும் தனக்குமான பூர்வ ஜென்ம ஒப்பந்தப் புரிதலும், அவளைத் தன் அன்பினால் வீழ்த்தி அவன் ஜெயித்த நிஜமும் புரிந்தது.

அவனுடைய பார்வைகள், மணங்கொத்திப் பறவையாய் மனதைக் குடைய, தன் மௌனத்தைக் கலைத்து; "ஐ லவ் யூ நிருபன்!" என்று கூறிவிட்டு முகத்தை மூடி உடல் குலுங்க அவள் அழ ஆரம்பிக்க, அவளை ஆதரவாகத் தன் மேல் சாய்த்துக் கொண்டான் நிருபன்.

அந்த நிமிடம், அவனுடைய நேசத்தில் வீழ்ந்து மடிவதிலும் ஒரு சுகம் இருப்பதை பூரணமாக உணர்ந்தாள் நிலா.

சிறிது நேரம் கழித்து, அவள் சமாதானமாகி தன்னிலை உணர்ந்து உடனே விலகி அமர்ந்த போது, வியப்புடன் அவளையே நோக்கினான் நிருபன்.

"ஏய்... என்ன? 'ஐ லவ் யூ' சொல்லிட்டு உடனே 'ஓ'ன்னு அழறே?" சீண்டலாகக் கேட்டவனைப் பார்த்தபோது, 'நீ என்ன சூரியனோ... அதனால்தான் உன்னிடம் ஒளியை வாங்கி, இன்று நிலவாய் நான் ஒளிர்கிறேனோ' என்று கேட்கத் தோன்றியது நிலாவிற்கு!

அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன், நிலாவின் முகத்தை மென்மையாகக் கைகளில் ஏந்தி, "மாசறு நிலவே வருக"ன்னு பாடணும் போல இருக்கு. ஒரு பொண்ணுக்காக உருகித் தவிக்கறதும், அவளையே துணையாக்கிக்கணும்னு தவிச்சு மூர்க்கமாகறதும், ஒரு ஆணோட கம்பீரத்தைத் தொலைக்கிற விஷயம்னு ஒரு காலத்துல நினைச்சவன் நான்!

ஆனா, உன்னைப் பார்த்த முதல் நாளிலிருந்தே நீ என்னை பாதிக்க ஆரம்பிச்சு... படிப்படியா என்னை பலமா ஆட்படுத்திட்டே! உனக்காக எத்தனை நாளா காத்திட்டிருந்திருக்கேன் தெரியுமா?

அதுவும், குறிஞ்சி வளைகாப்புல உன் கடந்த காலத்தைப் பத்திக் கேட்டவுடனே, என் மனசுல ஒரு உறுதி வந்தது. நீர் நடக்கிற பாதை எல்லாம் நதியாகற மாதிரி, என்னோட நிலா நடக்கற பாதை முழுக்க இனிமே நந்தவனமா இருக்கணும்னு நான் முடிவு பண்ணினேன். ஆனா, நீ தான் என்னைப் புரிஞ்சிக்கவே இல்லை!" மயிலிறகாய் வருடும் குரலில் கூறினான்.

விழிகள் பரிதாபமாகக் கெஞ்ச, "சாரி... சாரி... கோடி சாரி! எனக்கு பயம் நிருப்... யாரையுமே நம்பறதுக்கு பயம்! மனசு உங்களை விரும்ப ஆரம்பிச்சிருந்தாலும் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்கு அப்புறம் நீங்க மாறிட்டா, என்ன பண்றதுங்கிற ஒரு 'நெகடிவ் தாட்' இருந்துட்டே இருந்தது...

ஏன்னா, சங்கீதாவோட மரணமும், என் வாழ்க்கையும் மனசுல ரணமாப் பதிஞ்சு மனுஷங்க மேல இருக்கற நம்பிக்கையையே அழிச்சிடுச்சி... நல்ல வேளை... உலகத்துல எல்லாரும் கெட்டவங்க இல்லை... ரொம்ப நல்ல மனிதர்களும் இருக்காங்கன்னு எனக்குப் புரிய வச்ச அற்புதமானவர் நீங்க... தேங்க்ஸ்!"

விழியோரம் கசிந்த ஆனந்தக் கண்ணீருடன், நிருபனின் கைகளைப் பற்றி மென்மையாக முத்தமிட்டு விட்டு நிலா நிமிர்ந்த போது, அவன் பார்வையின் கூர்மை, அவள் விழிகளை சுகமாக மூட வைத்தது.

ஒரு விதப் பரவசத்தில் மனம் சிலிர்த்துப் போக, அவளுடைய உடல் முழுவதும் சிவந்து வெட்கக் கவிதைகளை மௌன மொழியில் வாசித்தன.

"நிலா... நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டப்புறம், உன்னோட சுய விருப்பங்களை தொலைச்சி, அடிமையா இருக்கணும்கிற அவசியமில்லை... அதை நானே விடமாட்டேன்... நீ நீயாவே இருக்கலாம்! உனக்கு ஒண்ணு தெரியுமா...? நீ வேலை பாக்கற காலேஜில அப்பாவும் ஒரு டைரக்டர்... நீ விரும்பற வரைக்கும், அங்கேயே வேலை பார்க்கலாம்... அதோட இனிமே டான்ஸ் ஸ்கூல் ஒண்ணு தனியா ஆரம்பிச்சு, நீயே அதை நடத்த நான் ஏற்பாடு பண்றேன்... நாம ரெண்டு

# மலர்களின் பலன்கள்!

மகிழம் பூ - பொறுமை வளர்க்கும்.
மயில்கொன்றை - உழைப்பின் பலனைத் தரும்.
நித்ய கல்யாணி - தடைகள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும்.
இளஞ்சிவப்பு அலரி - இறையருள் பெற வழி காட்டும்.
வெள்ளை நிற அலரி - அமைதியும், சாந்தியும் அளிக்கும்.
மஞ்சள் நிறக்குவளை - முயற்சிகளில் வெற்றிகிட்டும்.
பூவரசம் பூ - நோயற்ற ஆரோக்கியப் பெரு வாழ்வு பெறலாம்.
சப்பாத்தி மலர் - அதிர்ஷ்ட தேவதையின் அருள் கிட்டும்.
தேக்குமரப் பூ - ஆசைகளும் பற்றும் நீங்கிவிடும்.
பன்னீர்ப்பூ - சலனம், ஆரவாரம், ஆர்ப்பாட்டம் நீங்கும்.
கத்திரிப் பூ - பயம் நீங்கித் துணிவு வரும்.
எள்ளுப் பூ - மன வேறுபாட்டால் ஏற்படும் சண்டைகள் சச்சரவுகள் நீக்கும்.
மனோரஞ்சிதம் - பகுத்தறிவு பெருகும்.
வாசனைப்புல் - தேவைப்பட்ட உதவிகள் உடனடி கிடைக்கும்.
கள்ளிப்பூ - செல்வ வளம் பெருகும்.
ஊமத்தம் பூ - தவ வாழ்க்கையும், தவ ஒழுக்கமும் ஏற்படும்.
அல்லிப் பூ - இனிய குடும்ப வாழ்க்கை அமைந்திடும்.
மஞ்சள் நிற அல்லி - வருமானம் பெருகும்.
மல்லிகைப் பூ - தூய எண்ணங்களையும் உயர்ந்த சிந்தனைகளையும் ஏற்படுத்தும் ஆன்மீக மலர்.
மஞ்சள் கனகாம்பரம் - பாசத்தை உண்டாக்கும்.
ரோஸ் கனகாம்பரம் - நினைத்த செயல்கள் தடையின்றி முடிந்திடும்.
ஆரஞ்சு, சிவப்பு நிற கனகாம்பரம் - கவலைகள், சஞ்சலங்கள் நீங்கும்.
நாகலிங்கப் பூ - செல்வம் நாடி வரும்.
செம்பருத்தி - வருமானம் உயரும். முன்னேற்றத்தை அளிக்கும்.
டிசம்பர் பூ - நல்ல எண்ணங்கள் பெருகும்.
மஞ்சள் நிற ரோஜா - தைரியம் ஏற்படும்.
சாமந்திப் பூ - விரக்தி, வேதனை, சோகம் நீங்கும். நிம்மதி கிடைக்கும்.
வெள்ளை நிற ரோஜா - முயற்சி திருவினையாக்கும்.
ஒற்றை செம்பருத்தி - ஊக்க சக்தியை அளிக்கும்.

- எஸ். வத்சலா சதாசிவன்,
சென்னை.

பெருமா சேர்ந்து இனிமே ஆசிரமத்துக்கு எல்லா உதவிகளும் செய்யலாம்... இதெல்லாம் நான் முன்னாடியே யோசிச்சு வச்சிருந்தேன்... சரிதானே...?"

அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவள் மனதிற்குள் மார்கழிப் பனியாய் ஊடுருவின... வீசும் தென்றலாய் வருடின... கோபுரத்துப் புறாக்களாய் சிறகடித்தன.

"ம்... இந்தப் பட்டுத் தலைக்குள்ளே அப்படி என்ன பெரிய யோசனை?" குறும்புடன் அவள் தலையைக் கலைத்தபடிக் கேட்டான் அவன்.

உடனே சிலிர்த்து நிமிர்ந்தவள், "இப்ப எனக்கு என்ன தோணுது தெரியுமா? இதை விட வேறென்ன வரம் வேணும்னு...! இந்த உலகத்துல நான் வாழற காலம் வரைக்கும் உங்களோட துணை ஒண்ணே போதும்னு தோணுது!" உணர்ச்சிப் பெருக்குடன் கூறிய படி, அவன் மார்பில் உரிமையுடன் சாய்ந்து கண்களை மூடினாள் நிலா.

மார்கழிப் பனியில் நனைந்த பூசணிப்பூக்கள் கொத்தாக வந்து தன்மேல் மோதியதைப் போன்ற ஒரு வித சிலிர்ப்புடன், அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான் நிருபன்.

அந்த நேரம், தன் வெப்பக் கதிர்களால், பூமியில் வெளிச்சத்தைப் பதியன் போட்டு கொண்டிருந்தான் ஆதவன்.

அந்த மதிய நேரத்தில் சூரியனைத் தழுவ ஆசைப்பட்டு... ஆனால் அதன் சுவாசச் சூட்டினால், விலகி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன மேகங்கள்.

( முற்றும் )